# நோபெல் பரிசு பெற்ற

# அறுவர்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. கு. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை
C
178
C
302
749
Acc-mu
00970

ஹரிஹர இராமச்சந்திரன், B. sc. (Hons.)

பிரசுர கர்த்தர்:

**M. R. அப்பாதுரை, B. A.,**

13, முத்தியாலு செட்டித் தெரு, புரசைப்பாக்கம்,

சென்னை

பதிப்புரிமை] 1944 [விலை ரூ. 1-4-0

முதற்பதிப்பு, 1940.

இரண்டாம் பதிப்பு, 1944.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 942
நன்கொடை எண்: 942

# முகவுரை

'பாஷையின் சிறப்பெல்லாம் பயில்வோர் சிறப்பே,' என்பதனைக் கற்றுணராத சிலர், "'ஜீவிய சரிதம்'[1] என்னும் இலக்கியத் துறையில், அயல் மொழிகளில் உள்ள எண்ணிறந்த பெருநூல்களோடு ஒப்பிடத் தக்கது தமிழில் ஒன்றுமே இல்லை," என்று குறை கூறுகின்றனர். "இஃது தமிழில் முடியுமா?" என்னும் போதெல்லாம், "தமிழில் எப்படி முடியும்!" என்று சிறிதும் தயக்கமின்றி இரண்டொருவர் கூறலும், தமிழைச் சிறிதே கற்றுணர்ந்த நான், தமிழிலேயே ஜீவிய சரிதங்களை எழுதத் துணிந்தேன்.

அயல் மொழிகளில் உள்ள ஜீவிய சரிதங்களில் பெரும்பாலன சிறந்தனவேயாம். 'கார்லைல்' என்பார் எழுதிய 'பிரடெரிக்கு',[2] 'பாஸ்வெல்' என்பார் எழுதிய 'ஜான்ஸன்',[3] 'ஆபட்டு' என்பார் எழுதிய 'நெப்போலியன்',[4] சமீப நாளில் 'பிராங்கு ஹாரிஸ்' என்பார் எழுதிய 'பெர்னர்ட் ஷா',[5] 'ஈவ் கியூரி' என்னும் அம்மையார் எழுதிய 'மெடேம் கியூரி'[6] என்னும் ஜீவிய சரிதங்கள் மிகச் சீரிய நூல்கள் என்பதனை ஒருவராலும் மறுத்தல் இயலாது.

---

1. Biography 2. Carlyle's Frederick the Great 3. Boswell's Johnson 4. Abbot's Napoleon 5. "Bernard Shaw" by Frank Harris 6. "Madame Curie" by Eve Curie.

ஆனல், மொழி வேற்றுமையால், (தமிழ் மொழியில் அல்லாமையால்), இந்நூல்கள் சிறப் படைந்தன என்பதில்லை. ஜீவிய சரித்திரம் எழு தத் துணிந்தோர் கையாண்ட சிறந்த முறைகளே அவர்களெழுதிய நூல்களையும், அம்மொழியை யும் சிறப்படையச் செய்தன. அம்முறைகளைக் கையாளத் தமிழன்னை எனக்கும் இடங்கொடுத் தாள் என்பதிலிருந்தே, குறை கூறுபவரின் புல்லறிவாண்மை காணக் கிடக்கின்றது.

அம்முறைகள் இவை என்று எடுத்துக் காட் டுவதையே என் தொழிலாக இந்நூலில் மேற் கொண்டுள்ளேனேயன்றி, சில பக்கங்களில் ஜீவிய சரிதம் எழுத முடியும் என்பதனை முடிந்ததாய்க் காட்ட நான் முன் வரவில்லை.

ஜீவிய சரிதங்கள் எழுதப்படுவதும், ஆர்வத் துடன் படிக்கப்படுவதும், "இவர்—ஏன்—இதனை —இப்படிச்—செய்தார்? ஏன் இதனையே செய் தார்?" என்பதற்காகத்தான். ஆகவே:

1. ஜீவிய சரித்திரத்தில் எழுதப்படுபவரின் செய்கைகள், யாவரும் அறிய விரும்பத் தக்கன வாய் இருக்க வேண்டும். நான் எழுதத் துணிந்த 'நோபெல் பரிசு பெற்ற அறுவர்', உலகப் பெரு மக்களில் சேர்ந்தவர் என்று அனைவராலும் ஒப் புக்கொள்ளப்பட்டவராவர்.

2. ஜீவிய சரித்திரம் எழுதுபவன், அச்சரித் திரத்திற்குரியவரை இன்னர் என்று அறியத்தக்கவ ஞய் இருக்க வேண்டும். 'இவர் யார்?' என்னும்

போது, ஒரு பெயரைக் கூறி, அவரைப் பெற்ருே ரின் இரு பெயரைக் கூறி, உலகத்துள்ள பல பெயர் களையும் கூறி, அத்துடன் நிற்பவன், 'பெயர்களைத் தொகுப்பவனேயன்றி, ஜீவிய சரித ஆசிரியனென் னும் உரிமையைப் பெற்றவனுகமாட்டான்.

'இவர் யார்? என்னும் கேள்விக்கு நான் வேண்டுமென்றே சிற்சில இடங்களில், ஒரு பெயரையும் கூருமல் விடுத்துள்ளேன்; இந்நூலில் எழுதப்பட்டுள்ளவரின் நூல்களையும் ஆராய்ச்சி களையும் பல வருஷங்களாய்க் கற்று, இவர் தம் சரிதங்களில் பலவற்றையும் படித்த நான், ஏன் இச்சிறு பிழைக்கு என்னை ஆளாக்கிக்கொண் டேன் என்று சிலர் கேட்கலாம். "**இச்சக்தி எது? இஃது எத்தன்மைத்து? ஏன் இஃது அக்காலத் திலேயே பிறந்திருக்க வேண்டும்?**" என்று அறிவு றுத்தும் போதே, 'இவர் யார்?' என்ற கேள்விக்குச் சரியான விடை பிறந்திருக்கக்கூடும் என்று நம் பியே நான் அவ்வாறு பிழைத்தேன்.

3. 'இவர் ஏன் இதனையே செய்தார்?' என் னும் கேள்விக்கு ஜீவிய சரித்திரத்திற்கு உரியவரே, பதில் கூற முடியாதவராயிருக்கலாம். தம்மைப் பற்றிச் சிந்திக்க நேரமில்லாத அப்பெரியாருக்கு விடை காண்பதற்கும் நேரமில்லாதிருக்கலாம்; எனி னும், ஜீவிய சரித்திரம் எழுதுபவன், இதற்கு விடை கூறித்தானிருக்க வேண்டும். இல்லையேல், அவன் செய்த நூல், அன்னாரின் '**வாழ்க்கைச் சம்பவங் களின் பட்டிக் கணக்கே**' அன்றி, ஒரு போதும்

'ஜீவிய சரிதம்' ஆக மாட்டாது. இந்நூலை எவ்வாறேனும் ஜீவிய சரிதமாக்கவேண்டும் என்ற என் பெருமுயற்சி, ஒவ்வோரிடத்திலாவது கைகூடி இருக்கும் என்றே நான் நம்புகின்றேன்.

4. ஜீவிய சரித்திரத்திற்கு உரியவரியற்றிய நூல்களை முற்றும் கற்பதோடமையாது, எழுதுபவன், அன்னாரிடம் 'சரி நோக்கும்',[1] புரிவும், உள்ளன்பும் உள்ளவனுயுமிருக்க வேண்டும். யூதர்களை வெறுப்பவன் அயின்ஸ்டீனையும், பெண் மக்களை இகழ்பவன் கியூரி அம்மையாரையும், தமிழரை இகழ்பவன் ஸர். ஸி. வி. ராமனையும் பற்றி ஜீவிய சரிதம் வரைய இயலாது.

இந்நூலில் நான் எழுத முன் வரவில்லை; நோபெல் பரிசு பெற்றவரைத் தெரிவிக்கவே முன்வந்துள்ளேன், பல தாய் வயிற்று ஒரு மகனுன நான், தமிழ்த் தாயோடு 'அன்னை' என்ற முறையில் விளையாட வந்த சிறு பிள்ளையே என்பதனை அறிஞரனைவரும் மனத்திற்கொள்வாராக.

ஆக்கியோன்.

1. Understanding

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை.

## உள்ளுறை

I. நோபெல் பரிசு நிறுவிய ஆல்பிரடு
நோபெல் வாழ்க்கை வரலாறு : .... 1

II. பரிசு பெற்றவர் வரலாறு :

1. இரவீந்திரநாத தாகூர் .... 13
2. ஜார்ஜ் பெர்னார்ட்ஷா .... 36
3. ஆல்பெர்ட்டு அயின்ஸ்டீன் .... 59
4. ஸர் சந்திர சேகர வேங்கடராமன் .... 83
5. ஸர் வில்லியம் ராம்ஸே .... 107
6. கியூரி அம்மையார் .... 133

## உருவப் படங்கள்

1. இரவீந்திரநாத தாகூர் .... 13

2. ஜார்ஜ் பெர்ஞர்ட் ஷா .... 36

3. ஆல்பெர்ட்டு அயின்ஸ்டீன் .... 59

4. ஸர் சந்திர சேகர வேங்கடராமன் .... 83

5. ஸர் வில்லியம் ராம்ஸே .... 107

6. கியூரி அம்மையார் .... 133

7. பியரி கியூரி .... 156

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை

# நோபெல் பரிசு பெற்ற அறுவர்

---

## I. நோபெல் பரிசு நிறுவிய ஆல்பிரடு நோபெல்[1] வாழ்க்கை வரலாறு

### 1833—1896

இயற்கையன்னை உயிர்களிடத்துக் கொண்டுள்ள இரக்கம் தவிர்ந்தாள் என்று கூறுவது பொருந்தும். ஐப்பசி மாதத்தில் பனி எங்கும் பாறையாய் உறைந்து, கடுங்காற்றுப் பேரிரைச்சலோடு சீறிச் செல்லும் காட்சி கவர்ச்சியற்றிருந்தது. இதை ஒப்பவே 'இமானுவல் நோபெல்'[2] என்பவரின் உள்ளமும் உவகையற்றிருந்தது. கடன்காரரின் கருணையற்ற சொல்லும், வறுமைப் பிணியின் வரம்பில்லாக் கொடுமையும், அறிஞரை எள்ளி இகழும் அறிவற்ற உலகின் தன்மையும்—இமானுவலைத் துன்ப வெள்ளத்துள் ஆழ்த்தின.

தம் மனைவியாரான 'அல்ஸெல்' மூன்றுமுறையும் கருவுற்று ஆண் மகவே பெற்றார் என்னும் செய்தி கேட்டும் இமானுவல் உள்ளத்து இன்பம்

---

1. Alfred Nobel 2. Emmanuel Nobel

பிறக்கவில்லை. ஆல்பிரடு பிறந்தது கடவுளின் சோதனைகளில் ஒன்றென்றே தோன்றிற்று.

மனம் கலங்கிய இமானுவலுக்கும், நோயால் நலிந்த அல்செலுக்கும் வறுமைப் பிணியி னிடையே, வேண்டாப் பிள்ளையாய்த் தோன்றின வரே ஆல்பிரடு நோபெல்.

* * *

பிள்ளைக்கென்ன தெரியும் பெற்றோரின் வறுமை! ஆல்பிரடு, தவழ்ந்தும், குறுகுறு நடந்தும், மழலையாடியும் வளர்ந்த நாளில், குடும்பம் மிடியால் தத்தளித்துக்கொண்டிருந்தது. தாம் கண்டுபிடித்த வெடி மருந்தினைச் செய்யும்பொருட் டுத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்த இமானு வல் செய்த முயற்சிகள் யாவும் வீணாயின. இமா னுவல், மனமுடைந்து, தம் பிறந்த நாடான ஸ்வீ டனிலிருந்து புறப்பட்டு, அயல் நாடான பின்லந் துக்குச்[1] சென்றார். குடும்பத் தலைவியார், தம் பிள்ளைகளோடு ஸ்டாக்ஹோமிலேயே தங்கினார்.

## 1837—1842

பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகளின் ஆரவார மும் விளையாட்டின் ஒலியுமே வீட்டில் நிறைந்தன. ஆல்பிரடு, தம் தமையன்மார்களான இலட்விக்கு, இராபர்ட்டு என்பவர்களுடன், பலகை தூக்கிக் கொண்டு யாக்கோபு பள்ளிக்கூடம்[2] செல்லும் காட்சி, பெரிதும் இனிமையானது. ஆரம்பக் கல்வி

1. Finland 2. Jacob School

யும், ஆர்வத்துடன் கற்பிக்கப்பட்டது. பிள்ளைகளை நல்வழியில் நடக்கக் கற்பித்த அவர்கள் நல்லன்னையாரும், தம் கணவரைப் பிரிந்த துயரினை ஒருவாறு மறந்தார்.

பின்லந்துக்குச் சென்ற இமானுவலோ, அங்கும் தம் கருத்து நிறைவேருமையால், இரஷியாவிலுள்ள பீட்டர்ஸ்பெர்குக்குச்[1] சென்ருர்.

1842-ஆம் ஆண்டில் எங்கும் துன்பம்! பெருகிய துன்பம்! குறையாத் துன்பம்! உணவுப் பொருள்களில்லாமல் ஸ்டாக்ஹோமில் இமானுவல் படாத பாடு பட்டார்; பிள்ளைகளுக்குப் பள்ளிக்கூடச் சம்பளம் கொடுக்க இயலாமையால், அவர்கள் கல்வியை நிறுத்திவிட்டார்.

இமானுவல், பீட்டர்ஸ்பெர்கில் அடைந்த அல்லல்கள் எண்ணிறந்தன. உள்ளங்காலின் வெள்ளெலும்பு தோன்றும் வரையில், அவர் ராஜாங்க அதிகாரிகளிடம் நடந்த நடைக்குக் கணக்கில்லை. நூதனமாகத் தாம் கண்டு பிடித்த வெடி மருந்தினை இராணுவப் பயிற்சியில் உபயோகிப்பதன் நலத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்லி அவர் நாவும் உலர்ந்தது. 'கற்ருேர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு,' என்னும் முதுமொழியும் பொய்ம்மொழியே என்னும் முடிவுக்கு அவர் வந்தார். இன்சொல்லே பேசும் தம் காதலியாரையும், அறிவின் சுடர் விட்டொளிரும் தம் மக்களையும் பற்றி நினைக்கும் போதெல்லாம், தாம்

1. Petersberg

இறந்துவிட்டதாகவும், நரகத்தில் துன்புறுவதாக வுமே நினைத்து, அவர்களை மீண்டும் காணும் நம்பிக் கையையும் இமானுவல் விட்டுவிட்டார்.

* * *

துன்பத் தொகுதி சிறிது குறுகிற்று. விண் ணிடையே சிறிது ஒளியும் பிறந்தது. செவிடு போன்றிருந்த இரஷிய அரசாங்கமும், செவிடு நீங்கியது போன்று, தான் முன்னர்ப் பித்த னென்று கருதிய இமானுவலைத் தேடத் தொடங் கியது.

இவை யாவும், இமானுவலுக்குக் கனவெனத் தோன்றின. "ஏராளமாக வெடி மருந்து தேவை; தொழிற்சாலை ஏற்படுத்த உதவி வேண்டும்," என்னும் மொழிகள் உண்மையென்று அவரால் நம்ப முடியவில்லை.

தொழிற்சாலை ஏற்பட்டது. இமானுவல் அதில் சர்வாதிகாரியாய் விளங்கினர். இமானுவல் கண்டு பிடித்த வெடி மருந்து தன் வேலையைக் குறைவின்றிச் செய்தது. "இந்தப் போர் வீரன் தலைக்கும் உடலுக்கும் முப்பதடியா! என்ன ஆச் சரியம்! எல்லாம் இமானுவல் வெடி மருந்தின் பெருமைதான்!" என்றூர்கள் தளகர்த்தர்கள்.

இரஷிய அரசாங்கம், இமானுவலின் பேருத விக்காக அவருக்குத் தங்கப் பதக்கம் அளித்து, நன்றி பாராட்டியது. இமானுவலுக்குச் செல்வம் பெருகிற்று. அவருடைய பிள்ளைகளும் வீட்டி

லேயே ஒரு பிரத்தியேகமான உபாத்தியாயரைக் கொண்டு கல்வி கற்பிக்கப்பட்டார்கள்.

தந்தையாரின் கட்டளையைத் தலைமேல் கொண்டார் மைந்தரும். பூமி முழுதும் சுற்றிப் பார்த்து அறிவினைப் பெருக்க இமானு
1850 வல் ஏற்பாடு செய்யவே, பதினேழு ஆண்டு நிரம்பிய ஆல்பிரடும், மலர்ந்த முகத்துடன் தேசப் பிரயாணத்திற்கு ஆயத்தம் ஆனார்.

பல தேசங்களுக்கும் சென்று, ஆங்காங்கு வெடி மருந்துகளைப்பற்றி ஆராயும் அறிஞர்களிடம் கல்வி கற்கப் புறப்பட்ட ஆல்பிரடு, அத்தேசங்களின் தன்மையையும், ஜனங்களின் மனப்போக்கையும் நன்கு உணர்ந்தார். இன்னிசையும் விடா முயற்சியும் தவழும் ஜெர்மனி-அன்பும் ஆதரவும் சுரந்து பாயும் பிரான்ஸ்-திராக்ஷைக் குலையின் கனத்தால் நெளிந்து கொடுக்கும் இத்தாலி-நூதனப் பொருள்களைப் பரிந்து போற்றும் அமெரிக்கா-சாதனத்திலும் சாதுரியத்திலும் தனக்கெதிரில்லா இங்கிலாந்து-ஆகிய அனைத்தையும் அவர் கண்டார்.

அறிவும் முதிர அவர் பிள்ளைமைத்தனம் நீங்கிற்று. ஆல்பிரடும் ஆழ்ந்த அறிவு நிறையப் பெற்று விளங்கினார்.

விரைவில் சென்றுகொண்டிருந்த சகடத்தின் கடையாணி நழுவியது. மீண்டும் அலங்கோலம்! யுத்த வெறியை மேற்கொண்டிருந்த இரஷிய மக்

கள், திடீரென்று சமாதானத்தை நாடினார்கள். சமாதானமும் நிலைபெற்றது. களித்துக் கூத்தாடிய அரசாங்கம், இமானுவலை அறவே
1858 மறந்தது. "சண்டையை ஒழித்துவிட்டதே! வெடி மருந்தினால் பிழைக்கும் நான் என் செய்வேன்!" என்று வருந்தினார் இமானுவல். தொழிற்சாலையும் மூடப்பட்டது. இமானுவலும் தம் வினையை நொந்துகொண்டே ஸ்டாக்ஹோமிற்குத் திரும்பினார்.

ஆல்பிரடு தீவிரமாக ஆராய்ச்சி செய்து, **நைட்ரோ கிளிசரின்**[1] என்னும் வஸ்துவை வெடி மருந்தில் உபயோகிக்கும் தனி முறையைக் கண்டு பிடித்தார்; அதைச் செய்ய முழு உரிமை
1862 யையும் அரசாங்கத்தினிடமிருந்து பெற்றார்; துக்கத்திலாழ்ந்த தந்தையாருக்குத் தேறுதல் சொல்லி, இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய இடங்களுக்கும் சென்று பொருளுதவி பெற்று, **நைட்ரோ கிளிசரின் கம்பெனி**[2] என்ற கம்பெனியை ஸ்டாக்ஹோமில் ஸ்தாபித்தார். கம்பெனி டைரக்டர் பதவியில் இவரும் இவருடைய தந்தையாரும் இருந்து, கம்பெனியை முன்னேறச் செய்தனர். யுத்தம் எங்கும் பரவியிருந்ததால், கம்பெனிக்குப் பொருள் வருவாய் பெருகத் தொடங்கியது.

ஆல்பிரடு, ஆங்காங்கு ஆராய்ச்சிச் சாலைகளை ஏற்படுத்தி, இன்னும் புதியவையான வெடி மருந்துகளைக் கண்டு பிடித்தார்.

1. Nitro-glycerine 2. Nitro-glycerine Co.,

மூன்று வருஷங்களுக்குள், ஆல்பிரடு பத்துத் தொழிற்சாலைகளை நிறுவினார். ஜெர்மனியிலும், பிரான்ஸிலும், அமெரிக்காவிலும், ஸ்காட்லந்தி லும், ஆப்பிரிக்காவிலும்—பல இடங்க
1865 ளிலும், வெடி மருந்து கம்பெனிகள் நிறு வப்பட்டன. ஒவ்வொரு கம்பெனிக்கும் வருஷத்தில் இலட்சக்கணக்கான பவுன்கள் ஊதியம் கிடைத்தன. ஆல்பிரடோ, ஒவ்வொரு தேசத்திற்கும் சென்று, கம்பெனிகளின் வியாபாரத்தை மேன்மேலும் பெருக்கி, திரண்ட செல்வம் பெற்றார். ஆல்பிரடு நோபெல் எங்கும் புகழடைந்தார். இவ்வாறு முன்னேற்றம் அடைந்ததற்கு இவருடைய குன்றா ஊக்கமும் தளரா முயற்சியுமே காரணங்களாகும்.

* * *

இவருடைய சகோதரர்களான இலட்விக்கு, இராபர்ட்டு என்பவர்கள், அக்கம்பெனிகளிலேயே உயர்ந்த வேலை பெற்றுச் சுகித்தார்கள். தாங்கொணாக் கஷ்டத்தை அனுபவித்த அல்ஸெலும், கோடீசுவரரான தம் புதல்வரால் வறுமை நீங்கப் பெற்றார். தந்தையாரான இமானுவலின் இன்பத்திற்கோரீடில்லை.

கோடீசுவரரான ஆல்பிரடு, மணம் செய்து கொள்ளவும் ஓய்வில்லாமல், இடம் விட்டு இடம் மாறிக்கொண்டு கம்பெனியின் அலுவல்களிலேயே கருத்தைச் செலுத்தி வந்தார்.

## 1875—1890

நெஞ்சினை அள்ளும் மாலை நேரம்! கதிரவன் வெம்மை பொறுமல் சோர்ந்து கிடந்த யாவும் புன்முறுவலுடன் வெளி வந்து களிக்கும் வேளை!

ஓய்வென்பதை அறியாமலே அதுவரை ஆல்பிரடு வாழ்ந்தார் எனினும், தமது நாற்பதாமாண்டுக்குமேல் சிறிது ஓய்வைப் பெற்றார்; எனினும், மன அமைதியைப் பெற்றிலர். உலகில் மலிந்து கிடக்கும் துன்பங்கள் அவரது மனக்கண்ணின் முன் தோன்றி, அவரை வதைத்தன. 'அமைதி நிலவி, உலகு இன்புறுவது எக்காலம்!' என்று அவர் பெருமூச்செறிந்தார்.

'வீண் பேச்சு நிறைந்த சமரஸ மகாநாடுகள் இதுவரை செய்ததும் ஒன்றுமில்லை; இனிச் செய்யப்போவதும் மிகச் சிறிதே,' என்ற எண்ணந்தான் ஆல்பிரடுக்கு ஏற்பட்டது. பெருநோய்களைச் சிறு மருந்து கொண்டு நொடிப்பொழுதினில் தீர்க்க முடியும் என்பதை அவர் நம்பவில்லை.

ஒரு நாள், அவர் நண்பருள் ஒருவர், "யுத்த விளைவுகளால் குபேரனான நீ, சமரஸத்தையும் அமைதியையும் பற்றிப் பேசுவது விந்தையே!" என்றார். அதற்கு ஆல்பிரடு, "நண்ப, சமரஸம் என்னைப்போல்வாராலேதான் நிறைவேறக்கூடும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. நான் யுத்த விளைவுகளுக்கு உதவி புரிந்தேன் என்பது தவறு; வெடிகுண்டுகளில்லாத காலங்களில் யுத்தங்கள் நடக்கவில்லையா? உண்மை என்னவென்றால், உலகம் இன்னும் கண் விழிக்கவில்லை; யுத்தத்தை வெறுக்க

வும் தலைப்படவில்லை; என்று உலகிற்கு யுத்தத்தில் வெறுப்பு உண்டாகுமோ, அன்றே உலகம் சுகத்தைக் காண இயலும்,'' என்றனர்.

'இல்லை' என்பவருக்கு 'இல்லை' என்னாது அளிப்பதிலேயே, ஆல்பிரடுக்கு ஓராண்டில் குறைந்தது இலட்சம் பவுன் செலவழியும். பிறர் படும் கஷ்டத்தைக் காணவும் ஆல்பிரடு சகியார்; எனினும், ஏழையென்று சொல்லித் தம்மைப் பிறர் ஏமாற்றுவதை அறியும்போதெல்லாம் மிக்க சினமடைவார். சீர்கேடடைந்த ஒரு கம்பெனியை நல்லதென்று சில நயவஞ்சகர் கூறியதை நம்பி 40,000 பவுன் வரைக்கும் மோசம் போன போது, "இனி எக்காரணங்கொண்டும் இரப்பவர்க்கு ஈயேன்!'' என்று வஞ்சினம் கூறி, மறு நாளே மனம் இளகி மீண்டும் அத்தகைய ஏமாற்றத்திற்குள்ளாவது ஆல்பிரடினிடத்தில் இயற்கையாய் அமைந்த குணமாகும்.

* * *

'வருஷத்திற்கு இலட்சம் பவுன்களுக்கு மேல் வருமானமுள்ள நமது ஆஸ்தியை எவ்வாறு உலகினுக்குப் பயன்படுத்தலாம்!' என்பது

1893 ஆல்பிரடுக்குக் கவலையைத் தந்தது. அதனால், அவர் வருஷத்திற்கொரு முறை தாம் எழுதிய இறுதி முறியை[1] மாற்றுவார். இறக்கச் சின்னாட்களின் முன் அவர் எழுதிய கடைசி இறுதி முறியில் பின் வருமாறு அவர் சொத்துக்கள் பாகுபாடு செய்யப்பட்டன:

1. Will

ஆஸ்தியில் ஐந்தில் ஒரு பங்கு வைத்தியசாலை களுக்கென்றும் நண்பர்களுக்கென்றும் சுற்றத்தி னருக்கென்றும் பிரித்து வைக்கப்பட்டது.

எஞ்சிய சொத்தின் வருஷ வருமானம் ஐந்து பாகங்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பங்கும் (1) இலக்கியம், (2) பௌதிகம், (3) இரசாய னம், (4) வைத்தியம். (5) சமாதானம் என்னும் துறைகளில், கடந்த வருஷத்தில் மிகவும் சிறந்த தொண்டாற்றியவர்களுக்குப் பரிசாக அளிக்கப் படவேண்டும் என்று இறுதி முறி கூறிற்று.

இப்பரிசே 'நோபெல் பரிசு' எனப்படுவது. 'பரிசைப் பெறத்தக்கவர் யார்?' என்பதை முடிவு செய்ய ஸ்டாக்ஹோமிலுள்ள இலக்கிய, பௌதிக, இரசாயன, வைத்தியக் கழகங்களுக்கே உரிமை உண்டு. சமாதானப் பரிசை அளிப்பதற்கு நார்வே யின் பார்லிமெண்டிலிருந்து[1] அவ்வப்போது தேர்ந் தெடுக்கப்பட்ட ஐவர் அடங்கிய ஒரு குழுவிற்கே[2] உரிமை உண்டு.

'பரிசுகளைப் பெறத் தகுந்தவரிலர்,' என்று பரிசளிக்கும் கழகங்களும் குழுவும் கருதினால், பரிசு அளிக்கப்பட வேண்டுவதில்லை. அந்தப் பரிசுத் தொகை முதலுடன் சேர்ந்துவிடும்.

சமாதானப் பரிசு அடிக்கடி இவ்வாறு நின்று விடுவதுண்டு. ஏனைப் பரிசுகள், ஆண்டுதோறும் தக்கார்க்கு அளிக்கப்பட்டு வருகின்றன.

---

1. Norway Parliament 2. Committee

நோபெலின் இறுதி முறியில் ஜாதி, மதம், தேசம், ஆண், பெண் என்ற வேறுபாடுகளுக்கும் பரிசு பெறும் யோக்கியதைக்கும் ஒரு தொடர்பும் இல்லை என்பது கண்டிப்பாய்க் கூறப்பட்டிருக்கிறது. இஃது ஆல்பிரடு நோபெலின் பரந்த நோக்கத்தையும் விரிந்த உள்ளத்தையும் நன்கு விளக்குகின்றது.

அறிவு வளர்ச்சியையும், உலக முன்னேற்றத்தையும் பெரியன என்று கொண்ட ஆல்பிரடு, இச்சிறு வேற்றுமைகளுக்கு இடங்கொடாரென்பதில் வியப்பென்னை ?

அவ்விறுதி முறியில் கண்டபடியே பரிசுகளும் மிகச் செம்மையாயும் நேர்மையாயும் வழங்கப்பட்டு வருகின்றன என்பது நோபெலின் ஆன்மாவுக்குத் திருப்தியளிப்பதாகும்.

* * *

**இறந்த ஆண்டு : 1896** **இடம் : பாரிஸ்**

மூப்பும், நரையும், திரையும் முதிர்ந்து பிணி வாய்ப்பட்டுக் கண்ணொளி மங்கி, சாவோடு போராடும் இம்முதியவர் யாவர்? ஆல்பிரடு நோபெலா? என்னே வாழ்க்கையின் வெறுமை! என்னே கூற்றுவனின் ஆற்றல்! கண்ணற்ற கூற்றுவன்,

"போற்றவும் போகான்; பொருளொடும் போகான் ;
சாற்றவும் போகான் ; தமரொடும் போகான் ;
நல்லா ரென்னுன் ;

* * *

செல்வரென் றன்னுன் !"

ஆம்; விதி வந்து முன்னுறும்போது செல்வம் என் செய்யும்!

'ஆல்பிரடு நோபெல் துயருறக் காரணம் என்ன!' என்று சிலர் ஐயுறலாம். அவருக்கிருந்த மனத்துன்பத்தினைப் போன்ற துன்பம் வேறெவருக்குத்தானுண்டு? சமரஸம் எங்கும் பரவி, உலகு இன்புறுவதைக் கண்டு தாம் இன்புறக் கருதிய அவரது தூய எண்ணம், அவரது வாழ்நாளில் சிறிதும் நிறைவேருததது துன்பமன்ருயின், வேறெது தான் துன்பமென்று கொள்ளத்தகுவது?

'இன்சொல் வழங்கலும், ஈகை மிகுதலும், பகைமை ஒழிதலும், ஒற்றுமை மேவலும், அறிவு ஓங்கலும், ஆக்கம் தழைத்தலும் எந்நாளோ!' என்னும் ஐயமே, அப்பெரியாரது மனத்தை மரணத் தறுவாயில் உறுத்தியிருக்க வேண்டும்!



இரவீந்திரநாத தாகூர்

## II. பரிசு பெற்றவர் வரலாறு

---

### 1. இரவீந்திரநாத தாகூர்[1]

### (1861—1941)

ஆயிரம் கதிரவன் ஒளி வீசிய வெள்ளிடை வானமும் இருண்டது. 'இமயந்தான் கரிய ஆடை தரித்து விண்ணிடைக் கிளம்பியதோ!' என ஐயுறும் படி கருமுகில்கள் நீள்விசும்பை ஆக்கிரமித்து, 'கதிரவனையும் மறைத்த கார்மேகங்கள் யாம்!' என்று ஆரவாரித்தன. 'இன்னிசையும், பொன்னும், புகமும், பொறையும் தவழ்ந்த இந்திய நன்னாட்டை எம் எழில் கொண்டு மயக்கினோம்!' என்று இருளும் மகிழ்ச்சியுற்றது. "இருளே ஒளி; ஒளி என்பதே இருள்," என்று மூட உலகும் நம்பியது.

'உபநிடதங்களும், ஸ்மிருதிகளும், எண்ணிறந்த கலை ஞானங்களும், தேவர்கள் அனைய பெருமாமுனிவர்களும், "வேண்டா," என்னும் இரப்போரும், "இதுவும் கொள்," என்று வரையாது கொடுக்கும் வள்ளல்களும் திகழ்ந்த நாட்கள் கழிந்தன,' என்று காலத்தெய்வமும் கணக்கிட்டது.

---

1. Rabindranath Tagore

கரிய மை தோய்த்து இந்திய சரிதத்தை எழுதும் 'சரித்திர நூற்றுண்டுகளும்' தோன்றின.

பரத கண்டத்தினைப் பொறுத்தவரையில் இந் நூற்றுண்டுகள் கடிகாரங்களைச் செவ்வையாய் நடைபெறச் செய்ததுடன், சரித்திர விற்பன்னர்களுக்கும் ஓயாது தொழில் கொடுத்துக்கொண்டும் இருந்தன எனினும், இங்கும் அங்கும் உள்ள சில நிமிடங்கள் குறிப்பிடத் தக்கனவேயாம்.

மேகங்கள் ஒன்றினை ஒன்று தாக்கும் போது உண்டான ஒளியைக் காளி தாஸரும் கண்டனர்; கம்பரும் கண்டனர்; இந்திய நாட்டுப் புலவரனைவரும் கண்டனர். 'இருளே ஒளி,' என்ற மயக்கமும் இவருக்குத் தீர்ந்தது. "இருள் மறைக்குமுன் மண்ணிடைத் திகழ்ந்த வனப்பை, பூஞ்சோலைகளை, பூம்புனலை, புள்ளினங்களை, நறுமலரை, கதிரை, கதிரவனைக் காண்மின்! காண்மின்!" என்று இவர் கவி பாடினர். காண வல்லுநரே, கண்ணொளியும் பெற்றுக் கண்ணைக் கவரும் காட்சியையும் கண்டனர்.

சங்கரர், "ஒன்றே," என்றார். "ஒன்றும் பலவும்," என்றார் இராமானுசர்; "ஒன்றாத இரண்டு," என்றார் மத்துவர். கபீர், புரந்தரர், சண்டி தாஸர், தியாகையர், தமிழ் நாட்டு நால்வர், ஆழ்வார் ஆகிய யாவரும், பக்தி மார்க்கத்தினை உபதேசித்தனர்.

* * *

வனப்பினுக்கோர் எல்லையைக் கண்ட காளி தாஸரும், பக்தி என்ற பெருங்காதலில் ஈடுபட்டுத்

தம்மையும் மறந்த சண்டி தாஸரும் சேர்ந்து, வங்காளத்திற்கும், இவ்வுலகுக்கும் அளித்த பெருவரமே இரவீந்திரநாத தாகூர். வனப்பில் பெருங்காதலையும், அக்காதலில் வனப்பையும், இம்மண்ணிடை உயர் விண்ணையும், மனத்திடை ஒளியையும், மோகத்தில் (ஆண் பெண் காதல்)[1] தூய்மையையும், தூய்மையில் மோகத்தையும் பொருந்த வைத்த தனிச் சக்தியினையே நாம் இரவீந்திரநாத தாகூர் என்று புனை பெயரிட்டு வழங்குகிறோம்.

இச்சக்தி, வங்காளத்திலேயே தலை சிறந்ததான தாகூர் வமிசத்தை உறைவிடமாகப் பெற்றது. இச்சக்திக்கு உடலளித்தவர் தேவேந்திரநாத தாகூர் ஆவர். 1861-ஆம் ஆண்டில் வங்காளத்தில் ஓர் ஆண் மகவு பிறந்ததாயும் அதற்கு இரவீந்திரநாத தாகூர் என்று பெற்றோர் பெயரிட்டதாயும் ஜனன மரணக் கணக்குப் பட்டி உரைக்கின்றது.

இரவீந்திரநாதர் பிறந்த வமிசத்தில், பூமகளும் நாமகளும் கூடியே வாழ்ந்தனர். அவ்வமிசம் செல்வம் செறிந்த வமிசம். அத்துடன் கல்வியும் இலங்கும் ஒப்பற்ற வமிசமும் அதுவாகும். இரவீந்திரநாதர் மட்டுமன்றி, இவர் வீட்டிலிருந்த அனைவரும் வாணியினருள் பெற்றவர். இவர் தந்தையார் ஞான வெள்ளத்தைத் துய்த்த மாமுனிவர்; துவஜேந்திரநாதர் என்னும் சோதரரோ, உபநிடதங்களை ஐயந்திரிபறக் கற்ற பண்டிதர்; ஜோதீந்

---

1. Love between man and woman

திரநாதர் என்னும் மற்ருெரு தமையனுரோ, ஓவியக்கலையில் ஒன்றையும் ஏற்காத மேனுட்டிலேயே, ஒப்பற்ற புகழ் பெற்றவர்; எஞ்சிய சோதரரோ, ஆங்கில அரசாங்கத்தில் ஒரு கலெக்டர். இவர் தங்கையாரின் மைந்தரான அபினீந்திர நாதரும், ககனேந்திர நாதரும் சித்திரக் கலையிலும் சிற்பக்கலையிலும் நாடெங்கும் பேர் பெற்றவர்.

இத்தகைய குடும்பத்தில் பிறந்த இரவீந்திர நாதரின் இளமைக்கு உவமை, அவ்விளமையே. இசை, கலை, காவியம் முதலியவைகளே, தாயை இழந்த இரவீந்திர நாதரின் வளர்ப்புத் தாய்மார். தம் இளமைப் பருவத்தினைப்பற்றி இவரே எழுதியிருக்கிருர்.

இத்தகைய இளைஞருக்கு உபாத்தியாயர்களின் வெற்றுரையில் மனம் நாடவில்லை என்பதில் என்ன ஆச்சரியம்! இவர், 'பள்ளிக்குச் செல்வதும் துன்பமே!' எனக் கருதினுர். இயற்கை அன்னையும் கலை வாணியுமே இவருக்கு மறைந்து நின்று கல்வியைப் போதித்தனர். இவர் மனமும் கொஞ்சும் கிள்ளை மொழியன்ன வங்காள பாஷையிலும், அணிக்கோர் அணி செய்யும் ஸம்ஸ்கிருத பாஷையிலும் இலயித்து நின்றது.

உட்செவிக்கும் மனக்கண்ணிற்கும் உணவளிக்கும் காளி தாஸரையும் சண்டி தாஸரையும் படித்து ஓய்ந்த நேரங்களில், இவர் புறச்செவிக்கும் விழிக்கும் விருந்தளிப்பாராயினுர். அரசன் திருக்கோவில் போல உயர்ந்தோங்கிய தமது இல்

லத்தின்மேனின்ற இவ்வற்புத இளைஞர், கதிரவன் உலகினரை நோக்கி, 'கண் விழிப்பீர்,' என்பான் போல இனிமையுடன் குடதிசை எழும் காட்சியினையும், அவன், 'ஒளியின்றி நீர் எவ்வாறு உய்வீர்?' என்று மனம் நெகிழ்ந்து, வதனம் சிவந்து, பின் துயரால் மாசுற்று, தயங்கி விடை பெற்றுப் பின் மறைவான்போல விண்ணிடை மறையும் காட்சியினையும் கண்டார்; 'வெள்ளி பூத்ததோ!' என ஐயுறத்தக்க வெண்மேகத்தை 'வா!' என்றழைத்தனர்; கங்கா நதியைக் கண்ட அளவில், "இளநங்காய், உன்னைப் போற்றித் துதிக்கும் அனைவரையும் புறக்கணித்து, இவ்வாறு ஓடுவதுதான் உனக்குப் புகழ் தரு செயலோ! கரு நிறமும் உன் மனத்தின் பண்பிற்கோர் அறி குறியோ!" என்று வாடி வாதுக்கழைத்தனர். அலையென்பதே நிலையாய், ஒழிவென்பதே அறியாததாய், உண்டான இடமும் உறைவிடமும் புக்கிடமும் உணராததாய், அங்கும் இங்கும் அலைந்து அல்லலுறும் உலகத்தினையும் உன்னத நிலையிலிருந்து இவ்விளைஞர் கவனிக்க ஆரம்பித்தனர்; கவலையுற்றனர்; "இருளோ உலகத்தியற்கை!" என ஐயுற்றனர்; எனினும், சிற்சில சமயங்களில் துன்பத்தின் நடுவே ஊடாடும் இன்ப நிலையைக் காணும்போதெல்லாம் இறும்பூது எய்துவர்.

அவ்வப்போதுள்ள மனநிலைக்குத் தக்கவாறும் நிகழ்ச்சிக்குத் தக்கவாறும் இவரது கவித்திறனும் காண்கிறது. இவர் வாழ்க்கைச் சரிதத்தை

இவர் இயற்றிய நூல்களிலேயே காணலாம். ஆகவே, இவர்தம் நூல்களை 'வளர்ச்சிப் பருவ நூல்கள்' என்றும், 'கிளர்ச்சிப் பருவ நூல்கள்' என்றும், 'முதிர்ச்சிப் பருவ நூல்கள்' என்றும் மூவகையாகப் பிரித்து, இவரது வாழ்க்கைச் சம்பவங்களையும் அவற்றினூடே ஆங்காங்குக் காண்போம்:

## வளர்ச்சிப் பருவ நூல்கள்

## (1875—1887)

இவை, இரவீந்திரநாதர் தம் 14-ஆம் ஆண்டு முதல் 26-ஆம் ஆண்டு வரை இயற்றிய நூல்களாகும். இவை பெரும்பாலும் சோக ரஸமே ததும்பியவையாய் இருக்கின்றன. கவித் திறனும் இவற்றில் காலூன்றிற்றில்லை; தள்ளாடித் தள்ளாடி மெல்லவே நடக்குமெனினும், அந்நடையும் அழகு பொருந்தியதேயாகும். இரவீந்திரநாதர் தம் தாயாரென்று நினைத்திருந்த ஜோதீந்திரரின் மனைவியார் திடீரென்று இறந்த பிரிவாற்றுமையே எங்கும் காண்கின்றது. இந்நூல்களின் நடையும் மிகச் செம்மை பெற்றதன்று; அணிகலனுக்கப்படாத பொற்கட்டியைப் போன்று உறுதியும் மதிப்பும் நிறைந்ததெனினும், மெருகேற்றப் பெறவில்லை. 'கவியின்கதை', 'கருணை', 'ருத்திர சந்திரன்', 'சந்தியா கீதங்கள்' என்பன முதன் முதலில் தோன்றிய நூல்களாகும். இவற்றில் 'கருணை' என்பது ஒரு நவீனம்; 'கவியின் கதை'

என்பது ஒரு நீண்ட அகவற் பாட்டு; 'ருத்திர சந்திரன்' என்பதோ, ஒரு நாடகம்; 'சந்தியா கீதங்களோ', 'துக்கமும் பேசிற்று' என்பதனை எடுத்துக் காட்டும் பாமாலை.

இவற்றிற்குப் பின் தோன்றிய **'வால்மீகி பிரதீபம்', 'காலமிருகயம்'** என்னும் இரு நாடகங்களும் ஹாஸ்யச்சுவை நிரம்பியவை; இசையும் பொருந்தியவை. இந்நூல்களிலிருந்தே, கவியின் மனம், சிறிது துயர் நீங்கி, எழுச்சி பெற்றது என்பதனைக் காணலாம்.

வளர்ச்சிப் பருவத்தின் இறுதி நூலாகிய **'உதய கீதங்கள்'** (காலைப் பாட்டு) என்பது குதூகலமும் நம்பிக்கையும் நிறைந்தது. 'கவிஞர் காலையூன்றினார்,' என்பதனை நூலின் நடையும், உயர்ந்த கருத்துக்களும் புலப்படுத்தும். 'உதய கீதங்கள்' தோன்றியதும் கவிஞரும் உதயமானார்.

## கிளர்ச்சிப் பருவ நூல்கள்

## (1887—1895)

இரவீந்திரநாதரின் வாழ்க்கையில் இவ்வெட்டு வருஷங்களே துன்பம் என்பது சிறிதுமில்லாமல் கழிந்தன. கவிஞர், மாசு மறுவற்ற ஆனந்த வெள்ளத்திடை மூழ்கி நிற்பதை இவரால் இக்காலத்தியற்றப்பட்ட நூல்கள் விளக்குகின்றன.

இயற்கையன்னை எழில் பெற்று விளங்கும் **'ஷிலீடா'**[1] என்னும் சிற்றூரில், இரவீந்திரநாதர்

1. Shileida

வாழ்வாராயினர்; கள்ளங் கபடற்ற வெள்ளை உள்ளத்தினர்களான குடியானவர்களும், ஸ்படிகம் போன்ற நிறமுள்ள பெருநதியின் இளங்கரையும், பூஞ்சோலைகளும், கண்கொண்டு கண்டும் முடிவற்றதாய் விளங்கிய பெருவானமும் கவிஞரை எப்போதும் சூழ்ந்திருக்கையில், இவர் மனம் எங்ஙனம் உவகையுறுதிருக்கும்? மனத்தில் உவகை பூத்தது; சாந்தமும் அதனுடன் கலந்தது.

'**ஊர்வசி**,' '**சித்திரா**' என்னும் இரு நூல்களும், இப்பருவத்தில் இயற்றப்பட்ட நூல்களுள் மிகவும் முக்கியமானவையாகும். இந்நூல்கள், '**வனப்பு**' (சிருங்காரம்) என்னும் சுவை ததும்பியவை.

அழகுத்தெய்வத்தை வருணிப்பதில், இவ்விரு நூல்களைப் போன்ற நூல்கள் வேறு எந்நாட்டிலும், வேறு எம்மொழியிலும் இல்லவே இல்லை என்று ஆங்கிலேயரும் கூறியிருக்கின்றனர். இரவீந்திரநாதர், காளிதாஸரைப் பின்பற்றியிருக்கிறார் என்பதை இந்நூல்கள் நன்கு தெரிவிக்கின்றன. காளி தாஸர் மலைகளுக்கும், மேகங்களுக்கும், இயற்கைக்கும் கவி பாடக் கற்பித்தார். வங்காளக் கவிஞரோ, நதிகளுக்கும் சோலைகளுக்கும் பேசக் கற்பித்தார் என்று கூறலாம்.

அழகினுக்கென்று மட்டும் கவி புனையும் இரவீந்திரநாதர் இத்துடன் மறைந்தார் என்று சிலர் கருதுகின்றனர். 1895-ஆம் ஆண்டுக்குப் பிறகு, இரவீந்திரநாதர், கவியில் மட்டுமன்றி, பக்தி,

தேசாபிமானம், சமூக முன்னேற்றம் முதலிய பல துறைகளிலும் தம் மனத்தைச் செலுத்தியதையே, இவர் குறிப்பிட வேண்டும்; ஏனெனில், 'கவித்துவம்' என்பது, இயற்கைத் தோற்றத்தின் வனப்பினை மட்டும் வருணிப்பதுடன் நில்லாது என்பது யாவரும் அறிந்ததே.

1875-ஆம் ஆண்டு முதல் 1895-ஆம் ஆண்டு வரை இரவீந்திரநாதர் இயற்றிய நூல்களில் முக்கியமான சிலவற்றையே மேலே குறித்தோம். இக்காலத்தில் இவர் இயற்றிய சிறு கதைகள் கட்டுரைகள் முதலியவை, கவிஞர் ஓய்வு காலங்களில் அரசியல், சமூகக் கொள்கைகள், கல்வியபிவிருத்தி முதலியவற்றிலும் தமது மனத்தைச் செலுத்தியதை விளக்கும்.

கட்டியாயிருந்த பொன்னும் கவிஞரின் தளரா ஊக்கம், ஓயாமல் எழுதுதல், கவித்திறனின் திரட்சி முதலிய பல காரணங்களால் உருகி, நெகிழ்ந்து, பின் நேர்த்தியான 'ஊர்வசி', 'சித்திரா' என்னும் ஒப்பற்ற அணிகலன்களாய் மாறிற்று.

## முதிர்ச்சிப் பருவ நூல்கள்

## (1895—1916)

1895-ஆம் ஆண்டுக்குப் பிறகு, இவர் வாழ்க்கையில் பேரும், புகழும், பட்டமும், இன்னலும், இகழ்ச்சியும் ஒரு சேரக் கலந்தன என்னலாம்.

அக்காலத்திலிருந்த பாரத மக்களின் நிலைமையைக் கண்டு, பாரத தேவியின் அருந்தவப்

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

புதல்வராகிய இரவீந்திரநாதர் மனம் உளைந்து, தேசத் தொண்டிலிறங்கினர்.

1905-ஆம் ஆண்டில், 'வங்காளத்தைப் பிரிப்போம்.' என்று அரசாங்கம் தீர்மானிக்க, வங்காள முழுதும் கொதித்தெழுந்தது. இரவீந்திரநாதரும் "அடிமை ஒழிக!" எனக் கர்ஜித்து எழுந்தார்; எண்ணிறந்த கூட்டங்களில் இடியென வெகுண்டு பேசினர். 'இவர் செய்த பிரசங்கங்களில் உள்ள வீராவேசமும், தேசாபிமானமும், தந்நாட்டு மக்களிடத்துள்ள தயையும் வேறெந்த மொழியிலும் நான் கண்டதில்லை,' என்று ஈ. ஜெ. தாம்ஸன்[1] என்னும் ஆங்கிலேயர் கூறுகின்றார்.

இக்காலத்திலேதான், இரவீந்திரநாதர், தம் நாட்டு மக்களிடமிருந்த வறுமையையும் அடிமையையும் கண்டதுடன், அவர்களடைந்திருந்த தாழ்நிலையையும் கண்டார்; கல்வியறிவே இல்லாதவரோ எண்ணிறந்தவர்; மூட நம்பிக்கையும், குறுகிய நோக்கமும், சுயநலமும், சிறு மனமும் எங்கும் திகழ்வதையும் கண்டார்; 'இந்திய மக்களுக்கு இக்கதியும் வந்ததோ!' என்று துன்பத்துளாழ்ந்தார்; 'தங்களிடமுள்ள இப்பெருங்குறைகளை நீக்கினலன்றி இவர்களால் அடையத்தக்கது ஒன்றுமே இல்லை,' என்றும் முடிவு செய்தார். 'இனி இங்கிருப்பதில் பயனில்லை!' என்று தேசிய இயக்கங்கள் யாவற்றிலுமிருந்து திடீரென்று விலகினர்.

இவர் தாய் நாட்டிற்கென்று இரத்தக் கண்ணீர் சொரிவதை அறியாத வங்காளிகளும்[2] மற்

1. E. J. Thomson 2. Bengalies

[library stamp]

றுஞ் சில இந்தியரும், இவரை 'அலி' என்றும் 'சுயநலமே நாடுபவர்' என்றும் குறைகூறி வருகின்றனர்கள். இவர்கள் எவ்வளவு தூரம் ஒரு பெரியாரைப் பழித்திருக்கின்றனர்கள் என்பது பின் கூறுவதிலிருந்து விளங்கும்:

1919-ஆம் ஆண்டில் பஞ்சாபிலுள்ள அமிருதஸரஸில் நடந்த கோர சம்பவத்தைக் கேள்விப்பட்டதும் இரவீந்திரநாதர், தமக்கு ஆங்கிலேயரால் அளிக்கப்பட்ட 'ஸர்' பட்டத்தைத் துறந்ததுடன், உள்ளன்பில்லாத வெளி நடிப்பில் தமக்குப் பற்றில்லை என்பதனையும் புலப்படுத்திச் செவிகைக்கும்படி சுடுசொல் பகர்ந்திருக்கின்றனர்.

'அறியாமையே அடிமை வாழ்க்கைக்கு நிலைக்களம்,' என்பதறிந்தன்றோ இவர் 1901-ஆம் ஆண்டில் சாந்தி நிகேதனம்[1] என்னும் குருகுல வாஸப் பாடசாலையை ஏற்படுத்தினர்? இவர் பொருளில்லாமல் தவித்ததும், அரசாங்கம் இவர் பள்ளியில் படித்த பிள்ளைகளுக்கு வேலையில்லை என்றதும், பெற்றோர்கள் தயங்கியதும் இப்புல்லறிவாளரின் அறிவுக்கு எங்ஙனம் எட்டக்கூடும்! பூரண சுதந்திரத்துடன், அவரவரின் திறனுக்கேற்றவாறு, பண்டைநாளில் சீடர்கள் ரிஷிகளிடம் கல்வி கற்ற முறையில் கல்வி கற்பிக்கப்படும் கலாநிலையம் இப்பூமண்டலத்தில் 'சாந்தி நிகேதனம்' ஒன்றே என்பதனை இவர் எங்ஙனம் அறியக்கூடும்! 'இல்லமும் வெளி உலகமும்'[2] என்னும் இரவீந்திர

1. Santi Niketan 2. Home and Abroad

நாதரின் ஒப்பற்ற நவீனத்தை இன்னுர் ஒரு முறையாவது படிக்க வேண்டும் என்பதே என் கோரிக்கை.

ஒருவன் தன்னைச் சீர்திருத்தம் செய்து கொள்ள முடியாத நிலையில், அவனுக்குத் தெய்வந் தான் எவ்வாறு வரந்தரும்! "அறியாமையை நீக்குங்கள்; அவநம்பிக்கையை ஒழியுங்கள்; ஒற்றுமையைப் பரப்புங்கள்; அடிமையும் தானுய் ஒழியும்," என்ற இவர் கருத்து, அந்நூலில் எப்பக்கத்திலும் காணப்படும்.

வங்காளத்தின் மனநிலை விநோதமாய் இருக்கின்றது! ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்ட 'கீதாஞ்சலி' உலகெங்கும் பிரசித்தி பெற்று, 1913-ஆம் ஆண்டில் இவருக்கு நோபெல் பரிசை அளித்த நிலையிலும், வங்காளப் பண்டிதர்கள், இவருக்கு வங்காளமே பிழையற எழுதத் தெரியாதென்றதொரு புதுமை, எங்கும் காணுத புதுமை! 1913-ஆம் ஆண்டு வரையில், வங்காள மாணவர்கள் பரீக்ஷை எழுதும்போது, "பிழையைத் திருத்துக" என்ற தலைப்பின்கீழ்க் கேட்கப்பட்ட, கேள்விகளில் உள்ள இரவீந்திரநாதரின் வங்க மொழியை இப்பண்டிதர்கள் தங்கள் மனத்திற்கேற்றவாறு திருத்திக்கொண்டிருந்தார்கள். இவர் நூலிலிருந்து எடுக்கப்பட்ட வாக்கியங்களைத் திருத்திய வங்காள மாணவன் எவனும், அம்மாணவனைத் திருத்திய பண்டிதரெவரும், நோபெல் பரிசு பெறவில்லை என்பது குறிக்கத்தக்கது.

பண்டிதர்கள் வெகுளக் காரணம் என்ன? இரவீந்திரநாதர் சில சொற்களைக் குறுக்கினர் என்பதும், மற்றுஞ் சிலவற்றை நீட்டினர் என்பதுந்தான். இசையையும்[1] இசைப்பையும் குறித்துக் கவிஞர் பாஷைக்கே ஒரு தனி இனிமையை ஏற்படுத்தினர் என்பதை இசை ஞானமே இல்லாத அப்பண்டிதர்கள் அறியவில்லை; 'வங்க மொழி வதையுற்றது!' என்றார்கள். கவிஞர் வங்க மொழிக்குப் புத்துயிர் தோற்றுவிப்பதைக் கண்ட அவர்கள், ஆவி சோர்ந்தார்கள். இதற்கு முன்னிராத புதுச் செய்யுள் நடையைக் கண்டு, "இது திட்டு," என்றார்கள்.

தாகூரின் குடும்ப வாழ்க்கையிலும் துன்பம் புகுந்தது. 1902-ஆம் ஆண்டில் இவர்தம் மனைவியார் கடுநோயுற்றனர். அவ்வம்மையார் பிழைப்பதரிதென்று தெரிந்து பல நாட் கழிந்த பின்னர், உயிர் நீத்தனர். மனைவியாரின் பிரிவாற்றாமையால், கவிஞரும் துன்ப வெள்ளத்துளாழ்ந்தனர்; இமயத்திலிருக்கும் '**அல்மோரா**'[2] வுக்குச் சென்றனர். அங்கு, க்ஷய ரோகத்தால் பீடிக்கப்பட்ட இவர் புதல்வியருள் ஒருவர் மரித்தனர். தாயாரையிழந்த சிறு பிள்ளைகளுக்கு இரவீந்திரநாதரே தாயாருமானர். தம் மைந்தருக்கென்று இவர் புனைந்த தாலாட்டுப் பாக்களே பின்பு '**கதா**' என்னும் நூலில் வெளி வந்தன. மேனாட்டுக் கவிஞர்களுள் சிறந்த '**டாண்டி**'[3] என்பவர், தம் மனைவியாரின்

1. Rhyme 2. Almora 3. Dante

பிரிவாற்றாமையைக் குறித்துப் பாடிய 'இன்பெர்னோ'[1]வைக்காட்டிலும் சோக ரஸம் ததும்பிய சில செய்யுட்கள், இரவீந்திரநாத தாகூர் அக்காலத்தியற்றிய '**ஸ்மரணம்**' என்னும் நூலில் காணப்படுகின்றன.

துன்பத்தினால் அல்லலுற்ற கவிஞரின் மனமும் இறைவனருளை நாடியது. கவிதைக்கென்று மட்டும் கவி பாடுவதொழிய, பக்தியும் இவர் மனத்தில் குடிகொண்டது. '**கீதாஞ்சலி**' என்னும் தோத்திரப் பாக்களும் தோன்றின.

கீதாஞ்சலியை ஆழ்வார்களின் திவ்வியப் பிர
பந்தங்களுக்கு ஒப்பிடலாம். சிறு மதலை தாயிடம்
தன் குறைகளைக் கூறும் பாவமும், நண்பனோடு
அளவளாவும் பாவமும், நீதி மன்னனி
1909 டத்து அவன் மக்கள் தங்கள் குறையைக்
கூறி அவனால் தங்கள் குறைதீரும் என்று
நம்பும் பாவமும் இந்நூலில் காணப்படும். இரவீந்திரநாதர் 1910-ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்குப் போன போது, ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த கீதாஞ்சலியை, '**ஈட்ஸ்**'[2] என்ற ஆங்கிலக் கவிஞரிடம் காட்டினார்; ஆங்கிலக் கவிஞரும் ஆச்சரியம் அடைந்தனர்; 'இத்தகைய கவித்திறனை இன்றுதான் கண்டேன்!' என்றனர். தாகூரின் நூல்களும் ஒவ்வொன்றாக மொழி பெயர்க்கப்பட்டன. மேனாடுகள் யாவற்றிலும் இந்தியக்கவிஞரின் புகழ்

1. Inferno 2. Yeats

பரவியது. 1913-ஆம் ஆண்டில் இலக்கியத்திற் கென்று தாகூரும் நோபெல் பரிசு பெற்றனர்.

அதுவரை வாளாவிருந்த கல்கத்தாச் சர்வ கலாசாலை, இரவீந்திரநாத தாகூருக்குப் பட்டம் அளித்தது. பண்டிதர்களும், "பிழை திருத்துக," என்ற கேள்விக்கு வேறு நூல்களைத் தேட ஆரம் பித்தார்கள். ஐந்து கண்டங்களிலும் 'தாகூர்' என்னும் ஓர் ஒலி கிளம்பிற்று; இவரைப் பார்க்கப் பலர் பயணமாயினர். "முகவுரை எழுதுங்கள்," என்று பலரும் இவரை வேண்டினர். தாகூருக்கும் ஓய்வில்லாமலே போயிற்று.

நோபெல் பரிசு அளிக்கப்பட்டதும் தாகூர், "இனித் தொல்லைதான்!" என்பதையே முதலில் கூறினர்; எனினும், யாவரிடத்தும் தயை நிரம்பிய வரானதால், அனைவருக்கும் இயன்ற வரையில் உதவியளிப்பாராயினர்.

இதனால் பல இன்னல்கள் உண்டாயின: 'தாழ்ந்த நூல்களுக்கு முகவுரையெழுதச் சம்மதிப் பவன், தன் மதிப்பை இழக்கச் சித்தமாயிருக்க வேண்டும்,' என்ற உண்மை இவர் அறியாததன்று. எனினும், தாக்ஷணிய புத்தியால் இவர் சிற்சில சமயங்களில் எழுதிய முகவுரைகளைக் கண்டு, மேனாட்டாருக்கு இவரிடமிருந்த அன்பு சிறிது குறைய ஆரம்பித்தது. இதற்கு மற்றொரு காரண மும் உண்டு.

தம் நூல்களைத் தாமே வங்காளத்திலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும்போது, சிற்சில

தவறுகளை இவர் கண்டனர். 'இஃது ஆங்கிலமோ!' என்று சிலர் இகழ்ந்து பேசினர். தம் ஐம்பதாம் ஆண்டுக்குமேல் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற விரும்பிய தாகூரிடம் சிற்சில தவறான பிரயோகங்கள் இருந்திருக்கக் கூடும். அவற்றைக்கொண்டு இவருக்கு ஆங்கிலமே தெரியாதென்பதை நிலை நாட்டக் கருதுபவரைப்பற்றி அதிகமாக உரைப்பது வீணாகும். ஆங்கிலம் கற்கும் ஆரம்ப காலத்தில் இருந்த பிழைகளெல்லாம் சின்னாட்களுள், "நமக்குறைவிடம் இக்கவிஞரல்லர்" என்று இலண்டனை நோக்கியே ஓடிவிட்டன. இக்காலத்தில், தாகூரைப்போல அன்னிய பாஷையில் தேர்ச்சி பெற்றவர் ஒருவருமே இல்லை என்று மேனாட்டறிஞரனைவரும் வாய் விட்டுக் கூறியிருக்கின்றனர்.

தாகூரின் நூல்களில், மேனாட்டாருக்கிருந்த சுவை குன்ற மற்றொரு காரணமும் உண்டு: தாகூர் மொழி பெயர்த்தபோது, பல ஸம்ஸ்கிருதச் சொற்களின் கருத்தை நன்கு விளக்கிச் சொல்லாமல் விட்டுவிட்டனர்.

'டிவோஷன்'[1] என்னும் பதத்தினைக்கொண்டு 'பக்தி'யின் தனிச் சிறப்பை மேனாட்டினருக்கு எவ்வாறு அறிவிக்க முடியும்? 'லீலா', 'சித்திரா', 'பரம்', 'ஞானம்' முதலியவைகளை மேனாட்டாருக்குக் கற்பித்த பிறகல்லவோ, அவர் இப்பதங்களின் உயர்வை அறிய முடியும்? தூக்கிலிடுந் தொழில் புரிபவன், தன் வேலையைச் சரிவரச் செய்து வந்

---

1. Devotion

தால், அதுவும் 'டிவோஷன்'தான் என்றிருக்கும் நிலையில் 'ஊர்வசி'யும் 'கர்ண'னும் அவர்களுக்கு எப்படிப் பொருள்படும்?

'நாம் அறியாத ஒன்றிருக்கக் கூடும்,' என்று மேனாட்டார் சிறிது தாமதிக்காமல், இவரை அவ்யக்த கவிஞர்[1] (பிறருக்குத் தோன்றாததும் தமக்குத் தோன்றியதுமாகிய ஒன்றினைப் பாடுபவர்) என்று கூறிப் புறக்கணிக்க ஆரம்பித்தனர். உயர்ந்த கருத்துக்களை ஒரு கவிஞன் கூறினால், அவன் 'பிரௌனிங்'[2]கைப்போல அவ்யக்த கவிஞனாவது, மேனாடுகளில் வழக்கம். தாகூரின் நிலைமையும் சில நாள் வரை அவ்வாறிருந்தது. "எதைப் பற்றியோ ஏதோ சொல்லுகிறார்!" என்று சமூக மாதர்கள்[3] வம்பு பேசினார்கள்.

ஆனால், அக்குறை இனி இவருக்கில்லை என்றே சொல்ல வேண்டும். ஏனெனில், வங்க மொழியும் அறிந்த சில ஆங்கிலேயர், "யாங்கள் அறியாமல் இழைத்த பிழையை இச்சமயத்தில் உணர்ந்தோம்," என்கிறார்கள். என்றாலும், 'அவ்யக்த கவிஞர்' என்னும் பெயர் இரவீந்திரநாத தாகூரை விட்டு இன்னும் முற்றிலும் நீங்கினதாகத் தெரியவில்லை. உபநிடதங்களும் வியக்தமேயான நம் நாட்டினருக்குத் தாகூர் ஒரு போதும் அவ்யக்த கவிஞராயில்லை என்பது நிச்சயம். சென்ற ஆண்டில், ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலை[4] தாகூருக்கு இலக்கியப்

1. Mystic Poet 2. Browning 3. Society Women
4. Oxford University

பேரறிஞர்[1] என்னும் பட்டம் அளித்தது, நம் நம்பிக்கையே உள்ள சிலரும் மேனாடுகளில் உளர் என்பதற்கு அறிகுறியாகும்.

மேனாட்டார் சீரிதெனப் புகழ்ந்த 'கீதாஞ்சலி' யைக்காட்டிலும் உயர்ந்தனவான வேறு சில நூல்களையும் தாகூர் இம்முதிர்ச்சிப் பருவத்தில் இயற்றியிருக்கின்றனர் என்று கருதுகின்றனர். இக்காலத்து ஏற்பட்ட நூல்கள் யாவும் ஒரு திறத்தன அல்ல; இவர் இயற்றிய 'கோரா'[2] என்னும் நவீனம், வங்க மொழியிலேயே தலைசிறந்தது என்று மகா நிபுணரான **அஜீத் பாபு** கூறுகின்றார். '**உடைந்த மரக்கலம்**'[3] என்ற மற்றொரு நவீனத்தில் இவர், 'ஹிந்து ஜன சமூகத்தை நிலைகுலையச் செய்தது எது?' என்பதனை ஆராய்ந்திருக்கின்றார். குடும்ப வாழ்க்கையில் ஏற்படும் துன்பமெல்லாவற்றிற்கும் அவநம்பிக்கையே காரணம் என்பதனையும், போலித் தெய்வங்களிடம் மூட நம்பிக்கை வைத்தே சமூகம், தன் நிலையைக் குலைத்துக்கொண்டது என்றும் கூறியிருக்கிறார்.

'**ஸ்வதேச சங்கற்பம்**' என்னும் நூல், நாட்டின் முன்னேற்றத்திற்கென்று, ஒரு தேசத்தொண்டன் செய்துகொள்ளும் பிரதிஞ்ஞைகளைச் செய்யுள் வாயிலாகக் கூறுவதாகும். '**கல்பனா**', '**கதா**', '**காஹிணி**', '**க்ஷணிகா**,' '**கணிகா**' என்னும் ஐந்து நூல்களும் இலக்கியத்தின் பல சுவைகளை விளக்கும் நூல்களாகும்.

1. Doctor of Literature 2. Gora 3. The Wreck

*'பாலகா'* என்பவரியற்றிய செய்யுட்கொத்தின் கவித்திறன், தாகூரின் நூல்களில் வேறெங்கும் இல்லை என்று சிலர் கூறுகின்றனர்.

*'ராஜா,' 'தபாலாபீஸ்'* முதலியவைகள் உயர்ந்த நாடகங்களாகும்.

## தாகூரின் பிரயாணங்கள் :

இவர் இங்கிலாந்திற்கு முதன்முதலில் சென்றது தம் 16-ஆம் வயதில் (1877). அதற்குப் பிறகு, அங்குப் பல முறை சென்றிருக்கின்றனர். அங்குப் பல உண்மை நண்பர்களும் இவருக்குண்டு. எனினும், இவர் இங்கிலாந்தையும், ஆங்கிலேயரையும், மேனாட்டுப் பழக்க வழக்கங்களையும் விரும்பினவராய்த் தெரியவில்லையே என்பது அங்கிருப்பவரின் மனக்குறை. இதற்கு இவர் கூறியுள்ள காரணங்களில் சில சரியானவைகளே என்று சிலர் மட்டும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர்.

தாகூர் சுற்றுப் பிரயாணம் செய்ததெல்லாம், தம் நாட்டினர் தம்மைத் தூஷித்ததை மறப்பதற்கென்றுதான் சொல்லவேண்டும். ஜப்பான், அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய பல அயல் நாடுகளில் இவர் பிரயாணம் செய்திருக்கின்றார். அமெரிக்கா நாட்டில் இவரை அறியாதவர்கள் இனிப் பிறக்கப்போகும் குழந்தைகளே என்று கூற வேண்டும். போகுமிடமெல்லாம், இவர் புகழப்பட்டிருக்கின்றார்.. அந்நாடுகளில் செயத பிரசங்கங்களில், இந்திய நாட்டின் மேன்மையையும், முன்னிருந்த அதன் நாகரிகத்தின் தூய்மையையும்

இவர் நிலை நாட்டியிருக்கின்றார். இந்தியாவைப் பற்றி உலகமுழுதும் அறியும்படி செய்த மூவருள், தாகூருக்கு முதன்மையளிப்பதில் ஒரு தவறுமில்லை. 1913-ஆம் ஆண்டில், இந்தியாவை உலகுக்கு அறிவித்த முதல்வர் தாகூரேயாவர்.

### தாகூரும் இலக்கியக் கலையும் :

தாகூரைப்போல, இலக்கியத்தின் ஒவ்வொரு துறையிலும் சிறந்த நூல்களியற்றியவர், சமீப காலத்தில் உலகத்திலேயே ஒருவருமிலர். இவர் எழுதிய நூல்களை ஒன்று சேர்த்தால், ஒரு சிறு குன்றாகும்!

'கீதாஞ்சலி'யை இயற்றிய தாகூர் இந்திய நாட்டு மகனார் மட்டுமல்லர்; பூமகளுக்கே அருந் தவப் புதல்வர். ஆகவே, 'இவரது கவித்துவம் குறுகிய தன்மைத்து,' என்று ஒருவரும் சொல்ல முடியாது.

இவர் எழுதிய நாடகங்களிலேதான் எத்தனை வகை! சோக ரஸம், சிருங்கார ரஸம், சாந்த ரஸம், ஹாஸ்ய ரஸம், அற்புத ரஸம், ஆனந்த ரஸம், பீபத்ஸ ரஸம், ரௌத்ர ரஸம் முதலியவற்றுள் ஒவ்வொன்றிலும் அனேக நாடகங்களிருக்கின்றன.

செய்யுட்களோவெனில், அனேக நடைச் செய்யுட்களிருக்கின்றன. அவைகளின் வகைகளையும் நடைகளையும் வருணிக்கவேண்டுமெனில், இந்நூல் யாப்பிலக்கணத்திலும் பெரியதாம்.

நவீனங்கள், சிறு கதைகள், வசன நூல்கள் முதலியவைகளியற்றுவதில் தாகூர் மிகச் சிறந்தவர்

என்றே கூறவேண்டும். 'சிறு கதைகள் எழுதுவதில் தாகூர் உலகத்திலேயே ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர்,' என்று மேனுட்டாரும் கூறுகின்றனர்.

இவர் எழுதியுள்ள கட்டுரைகளும், செய்துள்ள பிரசங்கங்களும் பல துறைகளிலும் இவருக்குள்ள ஆழ்ந்த அறிவினை விளக்கும். கல்வி, அரசியல், சமூக நிலை, மதக் கோட்பாடுகள், சிற்சில சமயங்களில் விஞ்ஞானம் முதலிய யாவற்றிலும் தாகூர் பற்றுள்ளவராவர்.

எண்ணிறந்த நூல்களியற்றுவதில் ஒரு குறை உண்டு: உவமைகளும், அபிப்பிராயங்களும், கருத்துக்களும் மீண்டும் மீண்டும் வந்துகொண்டிருக்கும். தாகூரிடமும் இக்குறையைப் பலர் காணலாம்.

எனினும், இயற்கையில் உள்ள உவமைகளை அவ்வளவு நன்ருய்ப் பொருந்த உரைத்தவர், தாகூரைத் தவிர்த்துக் காளி தாஸர் ஒருவரேதான்; மேனுட்டில், ஓர்ட்ஸ்வொர்த்து,[1] ஏதோ சிறிது இயற்கையைக் கண்டனர். 'இயற்கை வேறு; இம் மானுடன் வேறு,' என்றில்லாமல், அவ்விருவரையும் பொருந்த வைத்தவர் இந்நாளில் தாகூர் ஒருவரே. இக்கவித்திறனே யாவரும் இதுவரை கண்டிராததாகும்.

ஒரு சிறு பெண்ணின் துயரைக் கண்டு நதி கரைந்து அழுவதும், நதி அழுதலைக் கண்ட அப் பெண் நதியைத் தேற்றுவதும் பொருந்த அமைந்திருப்பதைத் தாகூர் நூல்களில்மட்டுந்தான் காணலாம்.

1. Wordsworth

கவிஞர் இயற்கையில் கலந்து, தாமே அதுவாய்த் தம்மை மறக்கும் தன்மையைத் தாகூரைப் போல எடுத்துரைத்தவர் எவருமிலர்.

இவரது சொல்லமைப்பிலேயே இசையும் புகுந்து தவழ்வது மிகவும் ஆச்சரியத்தை விளைக்கின்றது. செவிக்கும் உணவளிக்கும் இலக்கிய நடையில் தாகூரை முதன்மை பெற்றவராகவே கருத வேண்டும். இது யாவர் மனத்தையும் எவ்வாறு கவர்ந்திருக்கிறது என்பதை இவர் இயற்றிய '1500 பொது மக்கள் பாடல்கள்'[1] எடுத்துக்காட்டும். இப்பாடல்களை இந்தியா முழுதும் எங்கும் யார் வாயிலும் கேட்கலாம்.

இவர் நூல்களிலிருந்து இவர் உபநிஷதங்கள், மகா காவியங்கள், காளி தாஸர், சண்டி தாஸர் முதலிய பலவற்றுக்கும் பலருக்கும் கடமைப்பட்டிருக்கிறார் என்பது தெரியுமெனினும், இந்தியாவின் முன்னாள் மேன்மையை இல்லை என்று இகழாமல் அதனை நன்கறிந்து, கற்ற யாவினையும் சுவாதீனமாக்கி, மிகச் சிறந்த பழைய மண்ணிலிருந்து மிகவும் அழகான புதுப் பாண்டங்களைத் தயாரித்தார் என்பதும் பெருமையேயாம்.

## குணாதிசயங்கள் :

ஒன்றையும் ஒளியாத நேர்மை, அஞ்சாமல் முன்னிற்கும் வீரம், தாய் நாட்டிடையுள்ள பேரன்பு, அனைவரிடத்துமுள்ள கருணை முதலிய

1. Folk-songs

இவருடைய குணங்கள், நூல்கள் வாயிலாகவும் வாழ்க்கைச் சம்பவங்கள் மூலமாகவும் வெளி வந்துள்ளன.

இவருடன் சம்பாஷித்தவர்கள், இவரை 'மிகவும் காட்சிக்கு எளியவர்' என்றும், 'சகஜி' என்றும், 'காருண்யர்' என்றும் அடிக்கடி கூறியிருக்கின்றனர். நறுமலர்கள், நதிகள், சிறு மதலைகள் எல்லாம் தாகூரின் உற்ற நண்பர்கள்.

முடிவாகக் கூறுமிடத்து, இரவீந்திரநாதரைப் போலும் கவித்துவம், நாடகாசிரியப் பண்பு, தேசத்தொண்டு, கல்வியை வளர்த்தல் முதலிய பலவும் ஒருங்கேயமைந்த ஒரு பிறவி, பல நூற்றுண்டுகளாய் இந்தியாவில் ஏற்படவில்லை என்னலாம்.

**ராஜா ராம்மோகன் ராய், ஈசுவர சந்திர வித்தியா சாகர், பங்கிம் சந்திர சட்டர்ஜி, கோகலே, சித்தரஞ்சன தாஸர், மகாத்துமா காந்தி, பாரதி யார்** முதலிய பல இந்திய நாட்டுப் பெரியார்கள் என்றும் அழியாத நிலையில் விளங்குவதைப்போல, இரவீந்திரநாத தாகூரும், இந்தியாவிலும் பிற நாடுகளிலும் நீடூழி வாழ்வார் என்பதில் சந்தேகமே இல்லை.



## 2. ஜார்ஜ் பெர்னார்ட்ஷா[1]

## (1856—* * *)

பெர்னார்ட்ஷாவை ஒரு முறை சந்தித்தவர்கள், அவரை எளிதில் மறக்க முடியாது. அவர் கண்களோ, பார்ப்போரின் உள்ளத்தினை ஊடுருவிப்பாயும் தன்மை வாய்ந்தவை; உயர்ந்த விசாலமான புருவங்களோ, 'இவர் பேரறிஞர்!' என்பதனை எடுத்துரைக்கும்; வாள் போன்ற கூரிய மூக்கோ, 'ஆழ்ந்த கருத்துக்களை இப்பெரியார் அலட்சியமாய் அறிவர்!' என்னும்; பரிகசிப்பது போலத் தோன்றும் வதனத்தின் அமைப்போ, உண்மையில் இவர் வழங்கும் வசை மொழியின் கடுமையை மாற்றும்; அடர்ந்து காணும் நரையோ, 'வெல்லாமல் எவரையும் வெருட்டிவிடும் வித்தையைத்தான் ஷா கற்றனரோ, அல்லது, உண்மையிலேயே உறுதி மொழியை வெளியிட்டனரோ!' என்று முடிவு செய்ய முடியாத விதமாய், யாவற்றையும் மர்மமாக்கும் தன்மை உடையது.

உண்மையில் ஷாவை நன்கு தெரிந்துகொண்டு விட்டனர் என்று எவரையும் கூற முடியாது. ஷா

---

1. G. B. Shaw



ஜார்ஜ் பெர்னர்ட்ஷா

எழுதிய ஆயிரக் கணக்கான பக்கங்களைப் படித்த பின்பும், 'இவர் எத்தன்மையினர்! இவர் சொல்வதெல்லாம் உண்மையா பரிகசிப்பா என்று புலப்படவே இல்லையே!' என்பதை இன்றும் ஆங்கிலேயர் ஒப்புக்கொள்கின்றனர். இஃது ஆச்சரியமே! ஏனெனில், ஷா, தம் வாழ்க்கைச் சம்பவங்கள், அபிப்பிராயம், முடிபுகள் முதலியவற்றைப் பற்றி நூற்றுக் கணக்கான பக்கங்களில் விஸ்தரித்துள்ளார்; நாடகங்களிலெல்லாம், தம் கருத்தை விளக்கியிருக்கின்ருர்; இவர் நாடகங்களுக்கு அமைந்த முன்னுரைகளோ, அந்நாடகங்களைவிட நீண்டவை; அவைகளிலெல்லாம், தம்மைப்பற்றி எப்போதும் இவர் சொல்லிக்கொண்டேதான் இருக்கிருர்.

இருந்த போதிலும், ஷாவைப்பற்றி நிச்சயமாக ஒன்றும் சொல்ல முடியாது என்கின்றனர் ஆங்கிலேயர். ஷாவோ, "நீயோ, ஆங்கிலேயன்; நானே, அயர்லாந்தில் பிறந்தவன்; ஆதலால், நீ என்னை அறியவே முடியாது." என்கிருர்.

இதற்கிணங்கவே, இவர் சமூகத்தில் உள்ள சீர்கேடுகளைப் பற்றி இடித்துரைக்கும் போதெல்லாம், ஆங்கிலேயர், 'தம்மிடமும் குறைகளிருக்கலாம் என்பதனை அறவே மறந்து, 'ஷா வேடிக்கையாய்க் கூறுகிருர்,' என்றும், 'இவர் பிறரைப் புகழும் முறையே அதுதான்,' என்றும், யாவற்றையும் நிந்தாஸ்துதி என்றே கருதி வருகின்றனர். 'இது காரணம் பற்றித்தான் அவர்கள் ஷாவை அறிய

முடியவில்லையோ!' என்று ஜீ. கே. செஸ்டர்டன்[1] என்னும் பேரறிஞர் சந்தேகிக்கிறார்.

ஆகவே, ஷாவின் புகழும் விநோதமாகவே யாவராலும் கருதப்படுகிறது. "நான் உள்ளதை உள்ளபடியே உரைக்கின்றேன்," எனபதை முற்றிலும் நம்பினவர் ஷா ஒருவரே என்று சொல்லலாம். பிறரோ, 'அவருக்குப் புனைந்துரைப்பதும், பரிகசிப்பதும், இலகுவாயுரைப்பதுமே[2] தொழில்,' என்கின்றனர். இவருக்கு நோபெல் பரிசு அளித்ததும், "ஷாவென்ற உண்மை உரைப்போனுக்கன்று; புத்தி சாதுரியமும், சமத்காரமும் நிறைந்த இலக்கியம் எழுதிய ஷாவுக்குத்தான்." நோபெல் குழுவினரின்[3] இந்த முடிபு, ஷாவுக்குத் துக்கத்தை விளைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை. "என்னிடமிருக்கும் முக்கிய அமிசங்களையெல்லாம் விட்டுவிட்டு, புத்தி சாதுரியத்திற்கென்று எனக்கு நோபெல் பரிசளித்தார்! அவர்கள் புத்திசாலிகளே!" என்று ஷா உண்மையில் சொல்லியிருக்கக்கூடும்; என்றாலும், இவர் நோபெல் பரிசை வேண்டாவென்று தள்ளவில்லை என்பது குறிக்கத்தக்கது.

ஷாவைப்பற்றி விளக்கியுரைப்பதென்றால், இதுதான் துன்பம்; இவர் செய்வதெல்லாம் சரி என்றாலும், செய்யத் தூண்டின காரணங்களெல்லாம் நாம் நினைப்பதற்கு முற்றிலும் மாறானவை என்று கெட்டியாய் உரைக்கின்றார். ஷா புலால்

1. G. K. Chesterton 2. Light talk 3. Nobel Committee

உண்பதில்லை; "இது ஜீவ காருண்யமன்ரே?" என்று நாம் கூறினுல், "அன்று; இஃது அருவருக்கத் தக்க பழக்கமென்றே நான் தள்ளினேன். மீனைக் கொல்வதில் எனக்குத் துக்கமே இல்லை. இறந்த மீனை உண்பதில் மட்டும் எனக்கு அருவருப்புண்டு," என்கிருர். இஃது உண்மையுரையா அல்லது கவிதையா என்பதை எப்படி உரைப்பது!

ஷாவுக்கு ஏழைகளைக் கண்டால் எப்போதும் கோபம். இவர் யாசிப்பவரை எட்டியும் உதைக்க முன் வருவார். "இது தகுமா? இது முறையா? இது தருமந்தானு?" என்ருல், "இதுதான் தகும்; இதுவே முறை; இதுவே கருணை," என்கிருர். "பிச்சை வாங்குபவன், தன் சுய மரியாதையை இழந்தவனுகின்ருன்; வெட்கம் என்பதையும், மானம் என்பதையும் அவன் துறந்தவனுகின்ருன். இவ்வாறு அவன் கீழ்நிலை அடைய உதவி புரிவது தானே தானம்?" என்பது இவர் கொள்கை. "ஏழைகளுக்கு வேறு வழி ஏது?" என்ருல், "நானும் ஏழைதான்; கேட்க வேண்டியவரைக் கேட்டுக்கொள்," என்று கூறுகிருர்.

இதிலிருந்து இவர் கல் மனத்தினர் என்றும் கூற முடியவில்லை; ஒவ்வொரு சமயத்தில், இவர் தம் நண்பர்களுக்குப் பேருதவி புரிந்திருக்கிருர். ஆயிரக் கணக்கான பவுன்களையும் இனுமாகக் கொடுத்திருக்கின்ருர். என்ருலும், "பிச்சை ஏற்கும் ஏழைகள் என்னிடமிருந்து ஒரு சல்லியைக்

கூட இது வரையில் வாங்க முடியவில்லை,'' என்பது இவர் இறுமாப்பு மொழியாகும். ஆகவே, ஷாவைத் தனிப் பிரகிருதி என்று ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கிறது.

இனி இவர் வாழ்க்கைச் சம்பவங்களிலிருந்தாவது, 'பெர்னர்ட்ஷா என்னும் உபநிடதத்திற்குப் பாஷ்யம் செய்ய முடியுமா!' என்று ஆராய்வோம். ஷா தம்மைப்பற்றித் தாமே சொல்லிக் கொள்ளும் நடையை விளக்கக் கருதிப் பின் வருமாறு கூறத் துணிந்தோம்:

"நான் பிறந்தேன்! ஆம். பிறந்துதானிருக்க வேண்டும். இச்சம்பவம் 1856-ஆம் ஆண்டில் நடந்ததாகச் சங்கீதப் பயிற்சியில் சிறிது களைத்த போது என் தாயார் சொன்னர். தகப்பனரைக் கேட்டறிவதில் பயனில்லை. குடித்துக்கொண்டே மது விலக்குப் பிரசாரத்தை அழகாக எடுத்துரைக்கும் அவருக்குப் பிள்ளை பிறந்தது எப்படி ஞாபகமிருக்கப் போகிறது! மேலும், அவர் இனிய பிரசங்கத்தைக் குறுக்கிடுவதும் தவறல்லவா!

"நான் பிறந்தது பிரபுக்கள் வமிசம். அதனலே தான் நான் பரம ஏழை. இங்கிலாந்தில், என் தகப்பனர் பிறந்தது மாதிரி, பிரபுவுக்கு இரண்டாம் பிள்ளையாய்ப் பிறப்பதைக்காட்டிலும் எளிய நிலை உண்டானல், நான் கேட்கத் தயார். நான் பிறந்ததைவிடக் கேவலமான நிலை இருக்குமென்று தோன்றவில்லை.

"தாயாரோ, கான ரஸத்தில் மூழ்கியவர்; தந்தையாருக்கோ, மது விலக்குப் பிரசாரம்; கூட இருந்த பெரிய தந்தையாரோ, பக்ஷிகளுக்கு யமன்; ஒருவரை ஒருவர் கவனித்ததாகவும், மேலும் என்னை எவராவது கவனித்ததாகவும் எனக்கு ஞாபகமே இல்லை.

"நானும் வளர்ந்தேன்; ஒருவரும் வளர்க்கவில்லை; வளர்ந்தேன். பிள்ளைப் பருவமல்லவா! விளையாடினேன்; எத்துடன் என்பதுதான் ரஸம்! தகப்பனுர் வைத்திருந்த மில்லுடன்[1] விளையாடினேன். தகப்பனுர் மில்லைக் கவனிக்கவில்லை. மில்லும் அவரைக் கவனிக்கவில்லை. வியாபாரமோ, இருவரையும் ஒருசேரக் கவனிக்கவில்லை.

"சில நாட்களுக்குள், மில்லைக் கடன்காரர் ஸ்வீகரித்தனர். கைப்பொருளத்தனையும் இழந்த என் தகப்பனுர், விடாமல் சிரித்துக்கொண்டே இருந்தார்.

"இதிலிருந்து அவருக்கு மதுவில் விருப்பமும் மதுவிலக்குப் பிரசாரத்திலிருந்த ஊக்கமும் குறைந்தன. குடும்ப நிலை இவ்வாருகவே, சுற்றத்தினரும் கண்டதும் விலகவும், நெருங்கினுல் விலக்கவும் தலைப்பட்டனர். இதைக் குறித்துத் தாயார் அழுததாகத் தெரியவில்லை. தந்தையாரிடம் விடைபெற்றுத்தான் என்னையும் கூட்டிக்கொண்டு இலண்டனுக்குப் பயணமானுர் என்பதும் தெரியவில்லை.

1. Mill

"நானும் என் தாயாரும் இலண்டனை அடைந்தோம். தகப்பனாரைப்பற்றி அடிக்கடி கேள்விப் படுவதுண்டு. தாயாரோ, சங்கீதம் கற்றுக்கொடுத்து வறுமைப் பிணியை நீக்கினார்.

"இளமையிலேயே எனக்கு நல்ல காது அமைந்தது. தாயாரின் இனிய சங்கீதத்தைச் செவி கேட்டு மகிழ்வதுண்டு. இப்போதோ, வீட்டில் எழுவன சங்கீதக் கூக்குரல்கள்! இறைவன் இரண்டு காதுகளைக் கொடுத்ததுடன் இரண்டு கைகளையும் எட்டும் நிலைமையில் அமைத்தது எதற்காக என்பது எனக்கு இப்போதுதான் விளங்கிற்று.

"பிள்ளைகள் பள்ளிக்குப் போய் வருவதுண்டே! வழக்கப்படி நானும் போய் வந்தேன்! எனக்குத் தற்சமயம் ஞாபகத்திற்கு வரும் இரண்டு இலத்தீன் வார்த்தைகளைத் தவிர எனக்கு மற்றவைகளை யாராவது போதித்ததாயும், நான் கல்வி கற்றதாயும் கூற முடியாது. உபாத்தியாயர் உபாத்தியாயராகவேயிருந்தார். பிள்ளைகளும் பிள்ளைகளாகவே இருந்தார்கள். தெய்வம் வரங் கொடுத்து, 'ஆரம்பப் பாடசாலைக்குப் போகிறாயா, அல்லது நரகத்துக்குப் போகிறாயா?' என்றால், நரகத்திற்கே போக விரும்புவேன். ஆரப்பப் பாடசாலையில் நான் கல்வி கற்ற பிறகு நரகத்துக்குப் போவதில் எனக்குப் பயமேயில்லை.

"நான் உபாத்தியாயரைக் குறை கூறவில்லை. அவர் எங்களை வதைத்ததைக்காட்டிலும், நாங்கள் அவரை அதிகமாகவே வதைத்தோமென்பதே

என் நம்பிக்கை. அவர் என்ன செய்வார் பாவம்! எங்களுக்காவது, சில காலத்திற்குள் விமோசனம் பிறந்தது. அவருக்கோ, இன்றும் நாளையும் கலி நீங்கிற்றில்லை. எளிய சம்பளம்! வீட்டிலுள்ள தம் சிசுக்களின் வாஞ்சைக்குத் தப்பிப் பிழைக்கலாம் என்று இங்கு வந்தால், இதுவோ, சிசுக்கள் சமுத்திரம்; "என்னைக் கிள்றான் சார்"—"ஐயோ! பலகை ஒடஞ்சு போச்சே!" என்னும் வழக்கை எல்லாம் தீர்த்து வைக்கும் நீதி ஸ்தலம்.

"ஆரம்பப் பாடசாலைகளில் உபாத்தியாயர்களில் ஆர்வமுள்ளவரை மட்டும் மிக உயர்ந்த சம்பளங் கொடுத்து வைத்தால், அவை உண்மையில் கல்விக் கழகங்களாய் மாறக்கூடும்! ஆனல், அரசாங்கம் என்ன செய்யக்கூடும்! பாவம்! என்ன வேலை அதற்கு! பணத்திற்குத்தான் என்ன செய்வது! உயர்தரக் கல்லூரிப் பண்டிதர்களுக்கு ஆயிரமும் ஐந்நூறுமாகக் கொடுத்தபிறகு, பத்தோ பதினைந்தோதானே மிஞ்சுகிறது! 'இதுவாவது மிஞ்சுகிறதே!' என்று ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயர்கள் சந்தோஷப்பட வேண்டாவா! ஆக்ஷேபனை என்ன! ஆம், இவ்வகையிலேதான் அவர்களுக்குச் சந்தோஷம் நேர வேண்டும்!

"பதின்மூன்ருவது வயதிலேயே நான் உத்தியோகத்தில் அமர்ந்தேன். கணிதம் எனக்கு வாராதென்று நானும் உபாத்தியாயர்களும் நம்பியதற்கு மாருக, ஜவுளிக் கடையில் கணக்கன் வேலையில் அமர்ந்தேன். சிறிது காலத்திற்குப் பிறகு அவ்

வேலைக்கு நான் தகுதியற்றவன் என்று அங்கிருந் தவரில் ஒருவர் கூற, நானும் வெறுங்கையுடன் வெளிக்கிளம்பினேன்.

"ஒரு வருஷத்திற்குப் பிறகு டப்ளின்[1] என் னும் நகரில் ஒரு முக்கியமான கம்பெனியில் ஆபீஸ் சேவகன் உத்தியோகம் கிடைத்தது. ஏவற் சேவகம் செய்யும் தொழிலென்று அதைப் பிறர் சொன்ன போதிலும், நானென்னவோ என்னை ஒரு 'கிளார்க்கு'[2] என்று கௌரவமாகவே நம்பி வந்தேன். கம்பெனி வேலையில் எனக்கு அருவருப்பு அதிகமாக அதிகமாகச் சம்பளமும் அதிகமாக ஆரம்பித்தது. ஆபீஸ் சேவகனிலிருந்து, கிளார்க்கு, தலைமைக் கிளார்க்குக்கு வலக்கை, கடைசியில் பொக்கிஷதாரன்[3] என்ற பதவிகளும் வருஷத் திற்கு 84 பவுன் சம்பளமும் வரவே, நான் பய மடைந்தேன். 'ராஜிநாமா செய்துவிட்டு ஓடினு லன்றி வர்த்தகத் தொழிலுக்கு நாம் அடிமையாய் விடுவோம்!' என்று தோன்றவே, இருபதாம் வய தில் இலண்டனை நோக்கிப் பிரயாணமானேன்.

"இதுதான் என் திக்கு விஜயத்திற்கு ஆரம் பம். 1876-ஆம் ஆண்டிலிருந்து 1885-ஆம் ஆண்டு வரையில், பல திக்குகளிலும் உள்ள இடங்களுக் கெல்லாம் விஜயம் செய்து வந்தேனே ஒழிய, அன்னையாரே எனக்கு அன்னமிட்டவர்; உடையும் அவர் வாங்கித் தந்ததேயாகும்! அன்னத்திற்கும் உடைக்குமாக நான் தாயாரிடம் ஒன்பது வருஷ

1. Dublin 2. Clerk 3. Cashier

காலம் நித்திய பிக்ஷுவாயிருந்த கீழ்மையை மறக்கவே முடியாது. பிச்சை கேட்பவன் எவற்றை எல்லாம் துறந்தால் பிடிச்சோறு பெறக்கூடும் என்பதனை நான் அறிந்தவனுனதாலேதான் எனக்கு ஏழ்மையே பெருந்தீண்டாமையாகும். ஏழ்மைத் தனத்தைவிட நான் வேறென்றையும் அதிகமாய் வெறுக்க முடியாது.

"*1879*-ஆம் ஆண்டு முதல் ஐந்து வருஷங்கள் ஓயாது பாடு பட்டு நான் எழுதி முடித்த ஐந்து நவீனங்களையும் கண்டு, பிரசுரம் செய்பவர்கள் பயந்து ஓடி ஒளிந்தார்கள். நவீனங்கள் மட்டும், பத்திரமாய்த் திரும்பி வந்தன. உலகம் என்னை ஏற்கச் சம்மதிக்கவில்லை. இதை நான் குறையாகக் கூறவில்லை. 'பெர்னுர்ட்ஷா'வின் வளர்ச்சி அப்போது முற்றுப் பெறவில்லை. ஆகவே, உலகம் என்னை ஏற்றிருக்கவும் முடியாது; ஏற்றிருக்கக் கூடாது என்பதே என் நம்பிக்கை.

"இதற்கிடையில் நான் . பல துறைகளிலும் அலையத் தலைப்பட்டேன். அவைகளில் விவரித்துக் கூறுவதற்குரியது ஒன்றுமின்று.

"*1885*-ஆம் வருஷத்திலேதான் நான் உண்மையில் பிறந்ததாகக் கூற வேண்டும். ஏன்? அப்போதுதான் நான் என்னைப் பார்த்தேன். உடனே உலகமும் என்னைப் பார்க்கத் தலைப்பட்டது.

"அக்காலத்திலிருந்த நாடகம், சிற்பம், சங்கீதம் முதலியவற்றைப் பற்றி என் மனத்திற்குப் பட்டவாறு, '**உண்மையைத்தான் உரைப்பது!**'

என்ற எண்ணத்துடன் பத்திரிகைகளுக்கு எழுத ஆரம்பித்தேன். 'எழுதும் தொழிலே இனி நமக் கில்லை!' என்று மனமுடைந்த என்னால், என் கட் டுரைகளுக்கு உடனே ஏற்பட்ட நன்மதிப்பை உண்மை என்று நம்பவே முடியவில்லை. நானிருந் தது கனவுலகம் என்பதை அப்போதுதான் அறிந் தேன். இங்கிலாந்தில் குற்றங்குறைகளைத் தாபத் துடன் எடுத்துரைக்கும் ஒருவனுக்கு 'ஹாஸ்யச் சுவை நிரம்பினவன்' என்பதும், 'முரண்தொடை களில்[1] தீரன்' என்பதும் பெயர் என்ற உண் மையை உணர்ந்தேன். நான் அயர்லாந்தில் பிறந் தவனானதால், பிறர் என்னைப்பற்றிக் கூறுத மொழிகளிலிருந்து உண்மையை அறிந்தேன். ஆனால், நான் பிழைக்க வந்த பூமியில், பிறர் சொல் லியும் தன்னைத்தான் அறிந்துகொள்வது என்பது இயலாத காரியம் என்பதையும் அறிந்தேன். இது விநோதமான நிலைமையானாலும், இதுதான் என்னைக் கரையேற்றியது.

'**வில்லியம் ஆர்ச்சர்**'[2] என்பவரின் ஆதர மொழிக்கிணங்க, நாடகமொன்று எழுதத் தலைப் பட்டேன். '**மனைவியை இழந்தவரின் இல்லங் கள்**' என்னும் என் முதல் நாடகம், 1892-ஆம் ஆண்டிலேதான் முதன்முதலாக நடிக்கப்பட்டது.

"இதற்கிடையில், நான் உண்மையில் கல்வி கற்க ஆரம்பித்தேன். பொருளாதார நூலும்

1. Paradox 2. William Archer

எனக்குப் பொருளாயிற்று. ராஜீய நிர்வாகம்[1] முதலிய பலவற்றையும் கற்றேன். இது வரையில் பேசாதிருந்த நான், பேசக் கற்றுக் கொண்டேன். பேசக் கற்கும் என் பேச்சையும் பேசாமலே யாவரும் கேட்டதிலிருந்து எனக்குத் தைரியம் பிறந்தது.

"இக்காலத்திலேதான், நான் பல சங்கங்களில் அங்கத்தினன் ஆனதுமன்றி, நானும் சில நண்பர் களுமாக ஸ்தாபித்த **பேபியன் சங்கத்துக்கு**[2] அங் கத்தினரைச் சேர்க்கவும் ஆரம்பித்தேன். எங்கள் சங்கத்தினது கொள்கை சமூகச் சமதர்மத்தினை[3] அடிப்படையாகக் கொண்டது என்பதைப்பற்றி ஆயிரம் பக்கங்களுக்கு மேல் எழுதியும், சிலரைத் தவிர மற்ற அனைவருக்கும் சங்கம் சந்திக்குமிட மாகவேதான் விளங்கிற்று.

"சமூகச் சீர்கேட்டினை என் நாடகங்களின் வாயிலாக எடுத்துரைக்கலாமென்று துணிந்தேன். துணிந்த என்னை அரசாங்கத்துக் கண்டனுதி காரி[4] தடையுத்தரவு பிறப்பித்துத் தடுக்கி விழச் செய்தார்; நானும், **ஹென்றி பீல்டிங்கின்**[5] நிலை மையை அச்சம்பவம் கழிந்த பல நூறு வருஷங் களுக்குப் பின்னும் அடைந்தேன்; கட்டுண்டேன்; எனினும், 'நாடக மேடையில் காட்டத் தகாதது எது?' என்பதனைக் கண்டனுதிகாரிக்கு முதன் முதலில் போதித்தேன். (விதவை) **'வாரனின்**

---

1. Politics 2. Fabian Society 3. Socialism
4. Chief Censor 5. Henry Fielding

தொழில்' என்னும் நாடகம் அம்முறையில் கண்டிக்கத் தகாத புனித நாடகம் என்பதையும் அவருக்குச் செவியிருந்தால், கேட்டிருப்பார் என்பதற் கையமில்லை. 1894-ஆம் ஆண்டில் நிராகரிக்கப் பட்ட அந்நாடகம், 1902-ஆம் ஆண்டில் யாதொரு தடையுமின்றி இலண்டனிலேயே அநேக முறை நடிக்கப்பட்டதென்பதே, 'உண்மை எட்டு வருஷங் களிலாவது புலப்படாமல் போகாது,' என்பதற்கு அத்தாட்சியாகும்.

"விவாகத்தில் நேரிடலாகும் துன்பங்களையும் அபாயங்களையும் சொந்த அனுபவத்திலிருந்தே எழுத வேண்டிய பாக்கியம் எனக்கு இதுவரை யில் நேரவில்லை. நாற்பது வயதுக்குமேல் கலியாணம் செய்துகொண்ட என் போன்றவர்களுக்கு அத்தகைய அனுபவங்கள் நேரிடக் காரணமில்லை என்றே நான் நம்புகிறேன்.

"நெடுநாள் கழித்து எனக்குப் பேரும் புகழும் ஏற்பட்டன; நோபெல் பரிசையும் (1925) பெற்றேன். தற்சமயத்தில் நான் யாவரும் அறிந்த பெர்னார்ட்ஷா; ஆனால், எவராலும் பின் பற்றப் பட்ட ஷா என்று சொல்ல முடியாது. ஒருவாறு யாவற்றையும் அறிந்த பெர்னார்ட்ஷா என்று நான் நினைப்பது போலப் பிறர் நினைக்கவில்லை என் பதனையும் அறிந்தவனானேன்.

"நான் தனிப்பட்டவன்; 'ஷேக்ஸ்பியரைப் போலத் தனிப்பட்டவன்' என்பதுதான் உண்மை. ஆனால், நான் ஷேக்ஸ்பியரைக்காட்டிலும் ஒரு

விதத்தில் மேம்பட்டவன். இதை ஒருவரும் ஒப்ப மாட்டார் என்பதனுலேயே, இஃது உண்மை."

* * *

மேற்கூறியதிலிருந்து ஷாவை ஒருவாறு அறிந்துகொள்ள முடியும் என்று நம்புகிறவர்கள், ஷாவை அறிந்தவர்களேயாவார்கள்; 'இது ஹாஸ்யமா, அல்லது பீபத்ஸமா!' என்றெல்லாம் சந்தேகிப்பவர்கள், ஷாவை அறியவே முடியாது. இவரது புத்தி சாதுரியத்திற்கு நடுநடுவே, உண்மையும் இடம் பெற்றிருக்கக்கூடும் என்று திடமாய் நம்பினுலன்றி, ஷா உதயமாக மாட்டார். 'புத்தி சாதுரியத்தைக்கொண்டு, குடும்ப வாழ்க்கை, தெய்வ பக்தி முதலிய புத்திக்கு அதீதமான விஷயங்களில் என்ன காண முடியும்?' என்பவர்களுக்கு ஷா சொல்லக்கூடியது ஒன்றுமே இராது.

ஷாவிடமே இந்த முரண்பாடுதான்; பிறர் நம்பும்படியான மதம், குடும்பம் முதலியவைகளை எல்லாம், ஷா, தமது புத்தியைக்கொண்டு ஆராயத் தலைப்படுகின்றார்; "மதம் என்பது மதமே," எனகிருர். மாதா கோவில்களில் இல்லாத தெய்வத்தினுக்கு ஷா அடிமைப்படுகிருர்; "குடும்ப வாழ்க்கையில் நம்பி நம்பியே மோசம் போகிறீர்," என்கிருர்; "'நம் குழந்தைகளைச் சரிவர நடத்துகிரேும்,' என்று நம்பும் தந்தைமார்களே, உங்கள் நம்பிக்கை தவறென்பதைக் குழந்தை பேசக் கற்றிருந்தால், நீங்களும் கேட்கக் கற்றிருந்தால், இதுகாறும் உணர்ந்திருப்பீர்கள்; நீங்கள் நல்ல

தென்று நினைப்பதெல்லாம் சிறு குழந்தைக்கு வேறு விதமாகவே படுகின்றது என்பதனை அறிய நீங்கள் மறு முறையும் குழந்தைகளாக வேண்டும். குழந்தை உலகமே வேறு; வயது வந்த பெற்ருேர் (உபாத்தியாயர், செவிலித் தாய்கள்) உலகமே வேறு," என்கிருர்.

ஷா கூறுவதிலுள்ள உண்மையும் பொய்யும், தத்தம் இளமையைப்பற்றி யோசிப்பவருக்கு அவ ரவர் அனுபவத்திற்குத் தக்கவாறு புலப்படும்.

"இல்லற வாழ்க்கையைக் குலைப்பதே மூட நம்பிக்கை," என்பது ஷாவின் துணிபு.

"தன்னேடு பல வருஷங்கள் வாழ்ந்த பின் னும், மனைவியின் காதல் குன்றக் காரணமேயில்லை என்று நம்பும் கணவனும், வயதான பின்பும் தன் வனப்பில் கணவன் ஈடுபட்டேயிருப்பான் என்று நம்பும் மனைவியும் மூடர்களே," என்கிருர் ஷா; "அவர்கள் துன்ப மூட்டையைச் சுமக்க வேண்டும் என்பதற்கையமில்லை," என்று அவர் அபிப்பிரா யப்படுகிருர்.

ஷா இவ்வாறு கூறுவதைக் கண்ட மேனுடு களில், இல்லறம் அடாத நடத்தைகளுக்கும் இடம் கொடுக்க வேண்டும் என்றே ஷா நினைக்கிருர் என் பது முற்றிலும் தவருகும். ஷாவின் உண்மையான அபிப்பிராயத்தை அறிய வேண்டுபவர்கள், காளி தாஸரின் 'சாகுந்தலத்தை'ப் படிக்க வேண்டியவர்க ளாகின்ருர்கள். உண்மைக் காதல் எது என்பது படிப்பவர்களுக்குப் புலப்படும். சகுந்தலையின்

மையலில் சிக்கிய துஷ்யந்தனும், துஷ்யந்தனின் தோற்றத்தைக் கண்டு ஈடுபட்ட சகுந்தலையும், நெடுநாள் துன்புற்ற பின்னரே உண்மைக் காதலைத் தெய்வ லோகத்தில் கண்டவர்களானார்கள்.

மையலைக் காதலென்பதும், தனக்கேற்பட்ட போஷகனைக் காதல் தெரிந்தெடுத்த கணவன் என்பதும் மேனாட்டில் நம்பப்படுகின்றன. இது மோகமேயன்றிக் காதலன்று. காதல் தெய்விக மானது; தூய்மை மிக்கது; 'உலகில் ஆடவன் ஒருவனே; அவனே என் கணவன்,' என்பதும்; 'பிரமன் ஒரு பெண்ணையே படைத்தான்; அவளே என் காதற்கிழத்தி,' என்பதும் உண்மைக் காதலை அறிவிக்கும் சின்னங்களாவன; இத்தகைய காதல் உள்ளவருக்கு நம்பிக்கையே காதலாம்; காதலே நம்பிக்கையாம்.

ஆனால், ஷா ஏனையோரைப் பற்றித்தான் கூறுகிறார். "இவருக்கு, மூட நம்பிக்கையால் காதல் எவ்வாறு தோன்றுவதாகும்! இவர் காதல்தான் எவ்வாறு குறையாதிருக்க முடியும்! ஆகவே, ஒவ் வொருவனும் பிறரிடம் குறை காணப் புகுமுன், தன்னிடமுள்ள குறையினையும் அறிந்து, அதற் கேற்றவாறு தன்னையும், அதற்குப் பிறகு மனைவி யையும் சீர்திருத்தம் செய்ய ஆரம்பிக்க வேண்டும்," என்பதே ஷாவின் கொள்கையென்று கொள்ள வேண்டும். "உன்னிடத்துக் குறைகள் இருக்கும் போது, மனைவியிடமுள்ள குறைகளைக் கண்டு ஏன் சீறுகிறாய்? நீ தெய்வமாகாத வரையில், அவள்

மட்டும் தெய்வமாகவே இருக்க வேண்டுவது ஏன்? தெய்வமல்லாத ஒன்றைத் தெய்வமென்று நம்புவது மடமையே. அஃது இன்னலையே தரும்,'' என்கிருர்.

இல்லறத் துறையில் சகஜமாய் ஏற்படக் கூடிய மிகச் சிறிய குற்றங்களுக்கும், "நீ தெய்வமாய் இருக்கத் தவறினுய்,'' என்று கூறி விவாகரத்து செய்வது சகஜமான மேனுட்டினருக்கு, ஷா கூறுவது அர்த்தமாகாதுதான்; பெண்மை என்னும் பெருந்தெய்வத்தை அறியாமைக் கோவிலில் வைத்து, அது மாசுற்றது என்று அதனை வதைக்கும் நம் நாட்டிலுள்ள சில கொடுந்தெய்வங்களுக்கும் ஷா கூறுவது தவருகவே இருக்கலாம். எனினும், உண்மை என்பது எவ்வாறு உண்மை அல்லாததாகிவிடும்!

சமூக முன்னேற்றத்தினைக் குறித்து ஷா கூறுவதும், யாவரும் கூறுவதற்கு முற்றிலும் வேறுபாடாயிருக்கின்றது. அரசியல் திட்டங்களிலும், சமூக வாழ்க்கையிலும் இருதயத்திற்கு வேலையே இல்லை என்று பிறர் நடவடிக்கை செய்து வருவதை ஷா ஒப்பவில்லை. இங்குப் புத்திக் கூர்மையாலும் சுயநல இச்சையாலும் ஆகக்கூடியது ஒன்றுமே இல்லை என்பது இவர் துணிபு. "யாவரிடமுமுள்ள நம்பிக்கையின் பெருக்கமும் அன்புமே உலகத்தினை முன்னேற்றக் கூடும்,'' என்கிருர் ஷா.

ஷா இவ்வாறு கூறும்போது, இரஸ்கின்,[1] டால்ஸ்டாய்,[2] எமிலி ஸோலா[3] முதலியவர்களின்

1. Ruskin 2. Tolstoy 3. Emile Zola

ஞாபகம் வாராமலிருக்க முடியாது. இரஸ்கின் மொழிகளுக்கும், டால்ஸ்டாயின் கதறலுக்கும், எமிலி ஸோலாவின் உள்ளம் நைந்த அழுகைக்கும் உலகு செவி கொடுக்கும்போது, ஷாவும் மறுமுறை தோன்றுவார் என்று சொல்லலாம். அதுவரையில் ஷா, அயர்லாந்தில் பிறந்த பெர்னுர்ட்ஷாவாகத்தா னிருப்பார் என்று தோன்றுகிறது.

## ஷாவின் இலக்கியச் சுவை :

ஷாவின் சொல் நயமும் நடையழகும் மிக வும் சிறந்தனவாகும். வசைச்சொல் பகருவதிலோ, ஷா மிக்க நிபுணர். வசைச்சொல் என்பதனை 'மறைத்து, இழிவாகப் பரிகசித்து உரைத்தல்' என் னும் பொருளிலேயே இங்கு நான் உபயோகிக்கின் றேன். இத்தன்மையில், இவரை, இவர் நாட் டினரேயான ஸ்விப்டு[1] என்பவருக்கு உவமையாக உரைப்பதில் ஒரு குறையுண்டு: ஸ்விப்டுக்கு, ஷா வின் இலளிதமுமில்லை; ஷாவின் நயமுமில்லை. அது சுடுந்தீயாயல்லாமல், தகிக்கும் தீயாய் இருக்கிறது. ஷாவின் தீயோ, செந்தீ. அது குளிரைப் போக்கும்; உஷ்ண நிலையையும் பரப்பும்; ஒளியும் கொடுக் கும்; தன் முகத்தினையும், அகத்தினழுக்கினையும் காட்டுவதுமாகும். எனினும், ஷா சிற்சில இடங் களில் ஸ்விப்டாகவே மாறியிருக்கிறுர்.

ஷாவுக்கு அழகாய் எழுதுவது என்பது, இலகுவாய் அமைந்ததாகும்; இல்லையேல், ஏறக்

---

1. Swift

குறைய 10000 பக்கங்களுக்குமேல் இவர் செய்த நூல்கள் சென்றிருக்க முடியாது. அழகின் வருணனை[1] என்பது இவரிடம் மிகவும் குறைவு. எனினும், 'நுணுக்கம் செறிந்தன' என்றுதான் இவர் நூல்களைக் கூற வேண்டும்.

ஷாவின் நடை, நடையேயன்று; அஃது ஓட்டம், தாவுதல், குதித்தல் என்றெல்லாம் தோன்றும்; ஆனால், ஷா நடக்கின்றார் என்பது, அவர் போல உள்ள மிகக் கூர்மையான அறிவாளிகளுக்கே விளங்கும். காகம் என்று சொன்ன பிறகு கூட 'அது கரியது; அஃது ஒரு பக்ஷி,' என்று சொல்லவேண்டும் என்பவர்களுக்கு, ஷா பறப்பவராகவே தோன்றுகிறார். பக்கத்தைப் புரட்டித் தள்ளும் பான்மையினருக்கு, ஷா மூளைக் கலக்கத்தையும், சில சமயங்களில் நிலைத்த சித்தப் பிரமையையும் தோற்றுவிப்பவராகின்றார்.

'ஷாவின் நாடகங்களெல்லாம் சொற்போர் தான்,' என்று சிலர் எள்ளி உரைக்கின்றனர்; அவை போர்ச் சொற்கள் என்பது அவர்களுக்குப் புலனாகாது.

'நாடகங்கள் உண்மையை உரைக்கும் கண்ணாடிகளாயிருக்க வேண்டும்,' என்பவர்கள், என்ன சொல்லுகிறார்களென்பது புரியவில்லை. கண்ணாடி உண்மையை உரைக்கும் தன்மையைப் பெறும் போது, அவ்வுண்மையும், உரைக்கத் தகுந் தன்மை யாவது பெற்றிருக்க வேண்டுமென்பது புலப்படு

1. Description of Beauty

கிறது. உலக வழக்கில் காணும் ஆபாஸங்களே, நாடகங்கள் மேடைமேல் ஆபாஸ நடையிலேயே உரைக்க வேண்டுமென்ருல், நாடகங்கள் எதற்கு? தெரு நடுவே போனுல், தாழ்ந்த கருத்துக்களேயும் சிறு சொல்லேயும், ஒரு நாடகாசிரியனும் இதுவரை சொல்லாத வகையில் கேட்கலாமே! நாடகாசிரியர்கள் நாடகங்களேத் தயாரிக்க வேண்டுவதே இல்லேயே! 'ஸம்ஸ்கிருதத்தில் தாழ்ந்த கருத்துக்களே உரைக்கப் பதங்களேயில்லே.' என்று சிலர் அதனேத் தாழ்மைப்படுத்துவதைப் போல, ஷாவின் நாடக பாத்திரங்கள் உயர் நடையை உபயோகிக்கின்ருர்கள் என்பதனேயும் குற்றம் கூறச் சிலர் முன் வருகின்றனர்.

ஷாவின் பாத்திரங்களுள் ஒருவரும், ஸ்வபாவமாய்[1] உலக வாழ்வில் காண்பவரைப் போன்று இல்லே என்பதும் மற்றும் சிலரின் பெருங்குறை. பெண் பாத்திரங்கள், அதிபுத்தி சாதுரியமாய் வழக்காடுகிருர்களென்பதும் மற்ருெரு குறை. பெண் மக்களுக்குப் புத்தி நுட்பம் குறைவென்று ஆடவரும் பெண் மக்களும் நம்பினதற்கு மாருக மாது சிரோமணி கியூரி அம்மையார்,[2] கவிஞர் பிரௌனிங்கின் மனேவியார்,[3] ஔவையார், வீணே தனம், ஸரோஜினி தேவியார் முதலியபலரும் உலகில் இல்லே என்று இவர் நம்புவதுதான் ஆச்சரியம்!

பெண்மைக்கு ஆபத்து நேரும்போதெல்லாம், பெண்மைக்கு அவமதிப்பு நேரும்போதெல்லாம்,

1. Natural 2. Madame Curie 3. Mrs. Browning

பெண் மணிகள் வாளாவிருக்க வேண்டுமென்பது, இன்னுரின் துணிபு போலும்! ஷாவின் பெண் மணிகள், வீரம், திட நம்பிக்கை, உறுதியான எண்ணம் முதலியன படைத்தவர்கள் என்பதும் குறையாமோ? உயர்குலப் பெண்கள், துன்புற்ற போது பேசாமலிருந்தால், அவர்களின் மனமும் பேசாமலே தானிருக்குமோ? ஷா, மனத்தின் பண்பை உரைப்பவர்; வாய்ச்சொற்களை வழங்குபவரல்லர்.

'ஜூலியஸ் ஸீஸர்' என்ற ரோமானிய வீரனைப் புது முறையில் ஷா வருணித்துள்ளார் என்று சிலர் கூறுகின்றனர். ஷேக்ஸ்பியர் ஜூலியஸ் ஸீஸரைப்பற்றி எழுதிய கருத்துக்களுக்கு மாருக, ஷா முயற்சி செய்தார் என்பதுதான் இதற்கு முக்கிய காரணமாயிருக்க வேண்டும். ஸீஸரைப்பற்றி எழுதிய நாடகத்தின் முகவுரையில், ஷா, ஷேக்ஸ்பியரிடமுள்ள சில குற்றங்களையும் எடுத்துக் காட்டினதும் மற்ருெரு காரணம். ஷேக்ஸ்பியரைத் தெய்வமென்று போற்றி, அவர் குறைகளையும் மேம்பாடுகளாகக் கொள்ளுதல் தவறென்பதை இவர் எடுத்துக் காட்டினுர். இவர் பச்சைச் சொற்கள் கைத்தன என்பதும் ஆச்சரியமோ!

இந்த மூட நம்பிக்கை, மேன்மையானது எது என்பதனையும் மறைக்கும் தன்மைத்தானதால், இதைத்தள்ளவேண்டும் என்பதில் என்ன குற்றம்? காளி தாஸரிடம் குறைகளில்லையா? கம்பரிடந் தான் குறைகளில்லையா? ஷேக்ஸ்பியரிடமும் சொற்பிழையும், நடைப்பிழையும், நாடகப் பிழையும்

ஏனிருக்கக்கூடாதோ, தெரியவில்லை! ஒருவரின் குறைகளை முற்றிலும் அறிந்ததனுல், அவர் மேம் பாடு எவ்வாறு குறையக்கூடும்? வெள்ளைப் பொன்னடுவே ஒளி மாறி விளங்கும் செம்மணி, பொன்னை நீக்கிய பின் இலங்குமோ அல்லது ஒளி குன்றுமோ, தெரியவில்லை!

ஷேக்ஸ்பியரின் ஸீஸர், அறிய முடியாத நிலை யில் அமைக்கப்பட்டிருக்கின்ருன். அவனது வீர மும், நாட்டபிமானமும், சுயநலமும், தலைமை வகிப் பதிலுள்ள இச்சையும் ஒருங்கு சேர்க்கப்படவில்லை; தனித்தனியே நிற்கின்றன. ஆதலால், ஸீஸரைப் பற்றி ஒரு முடிவிற்கும் வர முடியாது; ஆனுல், எல்லா முடிவுகளுக்கும் ஆதாரமும் இருக்கிறது. இந்த நிலையில், ஷேக்ஸ்பியர், ஸீஸரைக் கற் பித்தார்.

ஷாவோ, உயர்குணங்களையும், கீழ்க்குணங் களையும் தராசிலிட்டார்; கீழ்க்குணங்கள் கன மற்றவை என்று கண்டு, அவற்றைத் தள்ளினுர். ஷாவின் ஸீஸரோ, மேகங்கள் மறைக்கும் திட மான குன்றினைப்போன்று விளங்குகின்ருன்; நமது நன்மதிப்பும், அவன்பால் செல்லுகின்றது; "இவ் வீரனே நண்பனுல் கொலையுண்டனன்!" என்று நம் மனம் பதறுகின்றது. ஷாவின் ஸீஸரிடம் காணப்படும் இத்தகைய பாவம், ஷேக்ஸ்பியரின் ஸீஸருக்கு இல்லவே இல்லை. சிற்சில சமயங்களில், நமக்கு ஸீஸரிடம் பரிதாபம் தோன்றக்கூடும்; ஆனுல், அது நிலைக்காது.

முடிவாக, ஷாவை இன்னும் உலகம் முற்றிலும் அறியவில்லை என்றுதான் கூற வேண்டும். இவரை அறிய முடியவில்லை என்பவரும், இவரிடமிருந்து அறிவதற்கு ஒன்றுமில்லை என்பவரும் தம் புன்மொழியில் பெரும்பற்றுடையவர் என்றுதான் முடிவு செய்ய வேண்டும்.

இன்னும் ஐம்பதாண்டுகள் கழிந்த பின்பு, ஷாவைப்பற்றி உலகம் அறிந்தே தீரும் என்றே நான் நம்புகிறேன்.



அல்பெர்ட்டு அயின்ஸ்டீன்

## 3. ஆல்பெர்ட்டு அயின்ஸ்டீன்[1]

(1879—****)

உலக சரித்திரத்தைப் பரந்த நோக்கத்துடன் படிக்கும் ஒருவன், உலக நிலை சீர்கேடடையும் போதெல்லாம் ஒப்பற்ற மகான்களும், அறிவானது மயக்கத்தில் கட்டுண்டு உழலும் போதெல்லாம் பேரறிஞரும் தோன்றி வருவதைக்கண்டு ஆச்சரியம் அடைகின்றான்; "இவரைப் பெற்றவர் தாய் தந்தையர்தாமோ, அன்றிக் காலத் தெய்வமோ! இவர் பிறந்தவர்தாமோ அல்லது அவதரித்தவரோ!" என்றெல்லாம் ஐயுறுகின்றான். ஏனெனில், மண்ணிற் பிறந்து, சின்னாள் கண்ணற்று வாழ்ந்து, பின்னர் மண்ணோடு மறையும் ஏனையரின் வாழ் நாளைப்போல, இப்பெரியாரின் வாணாளை வீணாள் என்று சொல்ல முடியாது. இன்னார், உலக நன்மைக்கென்றும், அறிவு வளர்ச்சிக்கென்றும் இழைத்துள்ள பெருந்தொண்டு, அளவிடற்கரியதாகும்.

நாதனற்றுக் கிடந்த உரோமா புரியின் ஜன நாயகத்தை[2] முன்னேற்றிய ஜூலியஸ் ஸீஸரும்,

---

1. Albert Einstein 2. Roman Republic

பௌத்தம் என்னும் பூஞ்சையால் மாசுற்ற ஹிந்து மதத்தை என்றும் அழியாத் தன்மையில் நிலை நிறுத்திய ஆதி சங்கரரும், பண்டைக் கொள்கைகளை உண்மை என்று நம்பிய பௌதிகத்துக்குப் புத்துயிரளித்த அயின்ஸ்டீனும் ஒரு தாய் வயிற்று மக்களேயாவார்கள்.

19-ஆம் நூற்றுண்டின் இறுதியில் பௌதிகமிருந்த நிலையைக்கொண்டே, அயின்ஸ்டீன் என்ற ஒரு பேரறிஞர் தோன்ற வேண்டும் என்று கூறிவிடலாம். ஆனல், இவர் 1879-ஆம் ஆண்டில் ஜெர்மனியில் உள்ள 'அல்ம்'[1] என்னுமிடத்தில் வாழ்ந்து வந்த 'ஹெர்மன்'[2] என்ற வர்த்தகருக்கும், 'பாலின்'[3] என்ற அவர் மனைவியாருக்கும் ஒரே மைந்தராய்ப் பிறக்க வேண்டும் என்பதை ஒருவரும் கூறியிருக்க முடியாது. ஏனெனில், ஹெர்மன் என்ற இவர் தந்தையார், மின்சாரக் கருவிகளை விற்பனை செய்து பணக்காரரான ஒரு சாதாரண யூதராவர்; தாயாரும், மிகவும் புத்தி தீட்சணியமுள்ளவரென்றும் கூற முடியாது. இவர் பிறந்த இடமோ, ஜெர்மனியின் தென்பாகத்திலுள்ள 'மியூனிச்சு'[4]க்கு அருகிலுள்ளது.

அக்காலத்திலிருந்த மியூனிச்சில், விசேட சம்பவங்கள் நடந்து வெகு காலம் ஆய்விட்டது. சாஸ்திரப் பயிற்சியும், கிளர்ச்சியும், ராஜாங்க ஆடம்பரங்களும், ஜெர்மனியின் வட பாகத்தின் தலைநகரான பெர்லி[5]னிலேதான் அதிகம். சிறு

1. Ulm 2. Hermann 3. Pauline 4. Munich 5. Berlin

குழந்தையான ஆல்பெர்ட்டைக் காண்பவர்களும், 'இவனே பிற்காலத்தில், ஆகாசத்திற்கும் காலத்திற்கும் உள்ள பரஸ்பர சம்பந்தத்தை[1] எடுத்துரைக்கும் பேரறிவாளி,' என்று கூறியிருக்க முடியாது. ஆனால், அவர்கள் ஒன்றுமட்டும் கூறினார்கள். அதாவது, "இருந்திருந்து பாலினுக்கு ஒரே பிள்ளை; அவனும் உளறுவாயன்!" என்பது. அதுவும் உண்மைதான். வெகு நாள் வரையில், ஆல்பெர்ட்டு, தடுமாற்றத்துடனே பேசி வந்தார்.

இங்கு, இவரது நான்காமாண்டில் நடந்த ஒரு சம்பவத்தைக் குறிக்க வேண்டும்; ஏனெனில், ஆல்பெர்ட்டு அயின்ஸ்டீனுக்குப் பௌதிக நிகழ்ச்சிகளில் இருந்த அபாரமான மனக் கவர்ச்சியை அது தெரிவிக்கும். இவர் தந்தையார் ஒரு காந்த ஊசியை[2] வீட்டிற்குக் கொண்டு வந்தார். ஆல்பெர்ட்டு, எவ்விதம் திருப்பினாலும், அவ்வூசி, எப்பொழுதும் வட திசையையும் தென் திசையையும் குறித்தே நின்றதைக் கண்டார். இயற்கை அன்னையிடத்து, அச்சிறுவருக்குப் பக்தியும் பிறந்தது. இன்றும் நாளையும், அயின்ஸ்டீன், இயற்கை நிகழ்ச்சிகளின் அற்புதத்தில் ஈடுபடும் மனத்தினராகவே இருந்து வருகிறார்.

தமக்கு ஆறுவதாண்டும் நிரம்பவே, இவர் கல்வி கற்கத் தலைப்பட்டார்; எனினும், பள்ளியை விரும்பினாரில்லை. 1885-ஆம் ஆண்டில் ஜெர்மனியில் இருந்த பள்ளிக்கூடங்களை ஒருவரும் விரும்ப

1. Relativity of Space and Time 2. Magnet

முடியாது. அங்குத்தான் ஆல்பெர்ட்டு 'ஏழ்மை' என்னும் சிறுமைக்கும் 'செல்வம்' என்னும் பெருமைக்கும் உள்ள வேறுபாட்டைக் கண்டார். செல்வந்தரின் மைந்தரான தம்மிடம் அன்பும் ஆதரவும், ஏழை மக்களிடம் வெறுப்பும் பகைமையும் காட்டி வந்த உபாத்தியாயரனைவரையும் இவர் ஒரு சேர வெறுக்கலுற்ருர்.

இந்நாளில் ஒருவனைப் பார்ப்பனனென்றும் பறையனென்றும் சுட்டிக்காட்டி, வகுப்பு வாத உணர்ச்சியை இளைஞரிடத்து உண்டாக்கும் சில உபாத்தியாயர்களைப்போல, அக்காலத்திலும் ஜெர்மனியில் சிலர் இருந்தனர். அவர்களுள் ஒருவர், துருவேறிய ஆணி ஒன்றினைத் தம் வகுப்பிற்குக் காட்டி, "நம் ஏசு நாதரை யூதர்கள் சிலுவையில் அறைய உதவி செய்த ஆணி இதுவே!" என்றனர். கிறிஸ்தவ மாணவர்களுள் ஒருவரும் அந்த ஆணியைப் பார்க்கவில்லை; யூதச் சிறுவரான ஆல்பெர்ட்டையே சினத்துடன் நோக்கினர். கிறிஸ்துவின் உபதேசத்தை முற்றிலும் தாம் பின்பற்றினதாகக் கனவு கண்ட அவ்வுபாத்தியாயரும் புன்முறுவலுற்ருர்! யூதச் சிறுவரோ, பெரிதும் மனம் நொந்தனர்.

யூதர்களிடத்து ஜெர்மனியும் பிற நாடுகளும் காட்டி வரும் பகைமை மிகவும் வெறுக்கத்தக்கதாகும். பல நூற்ருண்டுகளுக்கு முன் நடந்ததாய்ச் சொல்லப்பட்ட ஒரு சம்பவத்தின்பொருட்டுக் கணிதத்திலும், நிர்மாண சாஸ்திரத்திலும்,

சுத்தமான பழக்க வழக்கங்களிலும் மிகவும் மேம்பட்ட ஒரு வகுப்பினையே இந்நாளில் கொடுமையுடன் நடத்துவது மடமையேயாகும்.

ஆரம்பக் கல்வி முடிந்ததும், ஆல்பெர்ட்டு வேறொரு பள்ளிக்கு மாற்றப்பட்டார். அப்பள்ளிக்கூடத்தில், தேகப் பயிற்சிக்கும் விளையாட்டுக்கும் இருந்த நன்மதிப்பு, கல்விக்கு இல்லை. அறிவை விசாலமாக்கும் தொழிலில் உபாத்தியாயர்கள் ஈடுபடாமல், தசையைத் திண்மையுறச் செய்யும் பயிற்சிச் சாதனங்களிலேயே மாணவர்களின் கவனத்தைச் செலுத்தினார்கள். "செவிக்குணவில்லாத போழ்தே ஊன் பயிற்சிக்கும் சிறிது இடமுண்டு," என்று நம்பிய ஆல்பெர்ட்டு அயின்ஸ்டீன்; தமது வீட்டில் தாமே படித்து வரவும் ஆரம்பித்தார்.

அக்காலத்திலேதான், இவர் கணிதத்தைக் கண்டு, அக்கணிதப் பேரணங்கைக் காதலித்தனர். அக்காதல் இன்றும் மாறாக் காதலாகவே இருந்து வருகிறது. உபாத்தியாயர்களுக்குக் கனவிலும் எட்டாத அரிய கணித நூல்களை எல்லாம், ஆல்பெர்ட்டு அயின்ஸ்டீன் எளிதில் கற்றனர். இவருக்குக் கணிதத்திலிருந்த அபார ஞானத்தைக் கண்டு அஞ்சிய உபாத்தியாயர்கள், "ஆல்பெர்ட்டு யூதனானாலும், புத்திசாலிதான்!" என்றார்கள்.

இதற்கிடையில், இவரது குடும்பத்தின் நிலை தாழ்ந்துகொண்டே வந்தது; வியாபாரம் பயனளிக்கவில்லை; ஆகவே, ஆல்பெர்ட்டின் தாய் தந்தையர், ஜெர்மனியைத் துறந்து, இத்தாலியில்

உள்ள மிலான்[1] என்னும் ஊருக்குப் பயண மாயினர். ஆல்பெர்ட்டு மட்டும் ஐந்தாறு மாதம் மியூனிச்சிலேயே இருந்து, மெட்ரிகுலேஷன் பரீ க்ஷை எழுதிய பின் மிலானுக்கு வர ஏற்பாடு செய் யப்பட்டது.

தாய் தந்தையரிருவரையும் பிரிந்த ஆல்பெர்ட் டுக்குப் பள்ளிக்குச் செல்லும் தொல்லை தாங்கொ ணததாயிற்று. ஆகவே, இவர் ஒரு வைத்திய நிபுண ரின் உதவியால் தமக்கு நரம்புத் தளர்ச்சி என்று ஓர் அத்தாட்சிப் பத்திரம் வாங்கி, அதைப் பள் ளிக்கு அனுப்பிவிட்டு, மிலானுக்குப் பயணமானர்; அங்குத் தாய் தந்தையரிடம் போய்ச் சேர்ந்தார்.

16-ஆம் ஆண்டை அடைந்த இவ்வாலிபரின் நிலை, மிகவும் பரிதவிக்கத்தக்கதாகும். இவர் பல நாள் பள்ளிக்குச் சென்றும், 'மெட்ரிகுலேஷன் அத்தாட்சிப் பத்திரம்'[2] பெற்றுரில்லை. தாய்தந்தை யரோ, மிலானை அடைந்தும் வறுமைப்பிணி நீங்கி ஞரில்லை.

எனினும், இவர் வாலிப்ரல்லவா! மெட்றி குலேஷன் பரீக்ஷைப் பத்திரமில்லாமலே, ஸ்விட் ஸர்லாந்தில் 'ஸூரிச்சு'[3] என்னும் நகரிலிருந்த 'தொழிற்கல்விக் கழக'த்தில்[4] தாம் சேர்ந்துவிட லாம் என்று ஆல்பெர்ட்டு நம்பினர். அவ்வெண்ண மும் நிறைவேருமற் போயிற்று. ஏனெனில், அக்கல் விக்கழகம் மெட்றிகுலேஷன் அத்தாட்சிப் பத்திரம் இல்லாதவர்களைப் பரீட்சை செய்தே சேர்த்து வந்

1. Milan 2. Certificate 3. Zurich 4. Polytechnic Academy

தது. அப்பிரவேசப் பரீட்சையில்[1] ஆல்பெர்ட்டு தேற முடியவில்லை. பாஷா ஞானத்தில் அவருக்குப் பயிற்சி இல்லாமையே, குறுக்கே நின்றது. இக் குறையை நீக்குவதற்காக, ஆல்பெர்ட்டு ஸ்விட்ஸர் லாந்திலிருந்த ஒரு பள்ளிக்கூடத்தில் மீண்டும் மெட்றிகுலேஷன் வகுப்பில் சேர்ந்து வாசிக்க நேர்ந்தது. நல்ல காலமாய், இவர் அப்பரீட்சையில் தேறினர். ஸூரிச்சுத் தொழிற்கல்விக் கழகமும் இம்மாணவரை ஏற்றது.

அக்கல்விக் கழகத்திற்கு நாடெங்கும் புக ழுண்டு. அங்கிருந்த ஆசிரியரனைவரும் அறிவு நிரம் பியவர். 'வெபர்',[2] 'ஹெர்மன் மின்கௌஸ்கி',[3] 'கேஸெர்'[4] என்னும் சாஸ்திர விற்பன்னர்களிட மிருந்து ஆல்பெர்ட்டு அயின்ஸ்டீன் கல்வி கற்க நேர்ந்தது, மிகவும் அதிர்ஷ்டமான சம்பவமென்றே கருத வேண்டும். கணிதத்திலும் அதன் உற்ற துணையான பௌதிகத்திலும் இவருக்கிருந்த ஆர் வம், அவர்களது தலைமையின்கீழ் அதிகரித்தது. பௌதிகத் துறையில் தலை சிறந்தவரான 'கிர்க் காப்',[5] 'ஹெர்ட்ஸ்',[6] 'ஹெம்கோல்ட்ஸ்'[7] முதலி யவர்களின் ஆராய்ச்சி வெளியீடுகளை ஆல்பெர்ட்டு முற்றும் கற்றனர். இக்கல்விக் கழகத்திலிருக்கும் போதுதான், பிற்காலத்தில் தமக்குப் பேருதவி புரிந்தவரும் பேரறிஞருமான 'மார்ஸல் கிராஸ் மன்'[8] என்னும் உத்தம நண்பரையும் இவர் அடைந்தார்.

---

1. Entrance Examination 2. Weber 3. Hermann Minkowski 4. Gayser 5. Kirchoff 6. Hertz 7. Helmholtz 8. Marsel Grassmann

ஆல்பெர்ட்டு ஸூரிச்சில் மிகச் சிக்கன மாகவே செலவு செய்ய வேண்டியதாயிற்று. இது காரணமாகத் தீராத வயிற்று நோயும் ஏற்பட்டது. பிற்காலத்தில் ஆல்பெர்ட்டு அயின்ஸ்டீனுக்கு ஏற் பட்ட உடல் வாதனைகளுக்கெல்லாம், இளமையில் இவர் வறுமையிடையே வாழ்ந்து வர நேரிட்டது தான் காரணம் என்பதற்கையமில்லை.

இருபதாம் நூற்ருண்டும் பிறந்தது. இருபத் தோராண்டு நிறையப்பெற்ற ஆல்பெர்ட்டும், பரீட் சையில் தேறி, தொழிலில் அமர ஆயத்தமானுர்.

இவ்வாலிபரை உலகம் ஏற்காததில் ஆச்சரிய மில்லை: இவர் அடக்கமே உருக்கொண்டவர்; ஆடம் பரமென்பதையே கல்லாதவர்; அதிர்மொழி பகர்ந் தறியாதவர்; தடுமாற்ற மொழியினர்; சாந்த உரு வினருமாவர்.

சிற்சில பாடசாலைகளில் இரண்டொரு மாதம் வேலை பார்ப்பதும், பின் வெளியேறுவதுமாகவே, இவருக்கு இரண்டாண்டுகள் கழிந்தன. குடும்பத் தின் வறுமையும் எளிமையும் நாளுக்குநாள திகரித் தன. என்ன செய்வார் திக்கற்ற இவ்விளைஞர்!

இத்தருணத்திலேதான், இவருக்கு உற்ற நண் பரான மார்ஸல் கிராஸ்மன், உதவி புரிந்தனர். தம் நண்பரின் நிலையை இவர் தம் தந்தையாரிடம் சொல்ல, அவர் தம் நண்பரான 'ஹாலெர்,'[1] என்ப வருக்கு ஒரு சிபாரிசுக் கடிதம் எழுதினுர். ஹாலெர் என்பவர், 'உரிமைப் பரிசோதக இலாக்கா'வில்[2]

---

1. Haller 2. Patent office

தலைமைப் பதவியை வகித்தவர். ஆகவே, அவர் ஆல்பெர்ட்டுக்குத் தம் இலாக்காவில் ஒரு பரிசோதகரின்[1] பதவியை அளித்தார். ஆல்பெர்ட்டும் 1902-ஆம் ஆண்டில் 'பெர்ன்'[2] என்னும் ஊரில் வேலையில் அமர்ந்தார்.

இவருக்கு 1902-ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டுகள் அங்கேயே கழிந்தன. ஆல்பெர்ட்டின் சம்பளம் அதிகமில்லையானாலும் அது வறுமையை ஒருவாறு நீக்கிற்று. 1903-ஆம் ஆண்டிலேதான் ஆல்பெர்ட்டு, 'மிலெர்வா மாரிக்கு'[3] என்னும் மாதரைக் காதலித்து, விவாகம் செய்துகொண்டனர். 1904-ஆம் ஆண்டில் ஆல்பெர்ட்டு ஒரு குழந்தைக்குத் தகப்பனாருமானார்.

இவர் வாழ்க்கையில் இக்காலத்தில் ஏற்பட்ட இச்சிறு மாறுதல்களைக்காட்டிலும், கல்வித்துறையில் இவருக்கு ஏற்பட்ட பெரிய மனக்கிளர்ச்சியையே முக்கியமானதெனக் குறிக்க வேண்டும். ஏனென்னில், இம்மனக் கிளர்ச்சியே இதுவரை யாவரும் கண்டிராத ஒரு பேருண்மையைத் துலக்கிற்று.

உத்தியோக நிலையத்தில்[4] ஒழிவு நேரங்களிலும், வீட்டில் சதாகாலமும் ஆல்பெர்ட்டு ஆராய்ச்சி செய்துகொண்டே இருப்பார். வர்த்தகத்தில் கருத்துடையாரின் உரிமைகளைப் பரிசோதிக்கும் கடினமான தொழிலில் அமர்ந்த இவ்வாலிபர், இடைவிடாமல் பௌதிக நிகழ்ச்சிகளையும் பரிசோதித்து

1. Examiner 2. Bern 3. Milerva Maric 4. Office

வந்தது ஆச்சரியத்தைத் தருகின்றது. தமிழ் நாட்டில் பிறந்து அழியாப் புகழ் படைத்த சீனிவாச ராமானுசரின் சரித்திரத்தையே ஆல்பெர்ட்டு அயின்ஸ்டீனின் சரிதமும் இத்துறையில் ஒத்திருப்பது பின்னுமோர் ஆச்சரியமே.

ஆல்பெர்ட்டு மூன்றே ஆண்டுகளில் கண்டு பிடித்த உண்மையும், சீரிய உருப்பெற்றது.[1]

1905-ஆம் ஆண்டில் இவர் பல ஆராய்ச்சியுரைகளை வெளியிட்டார். அவ்வெளியீடுகளும் அறிஞரின் மனத்தைக் கவர்ந்தன. ஜூரிச்சுச் சர்வ கலா சாலையும், ஆல்பெர்ட்டு அயின்ஸ்டீனுக்குச் 'சாஸ்திர பண்டித'[2] பட்டம் அளித்துத் தன்னைச் சிறப்பித்துக்கொண்டது. மேலும், அச்சர்வ கலாசாலையிலேயே, இவர் போதகாசிரியராக நியமிக்கப் பட்டார்.

1905-ஆம் ஆண்டிலிருந்து 1909-ஆம் ஆண்டு வரையில் இவர் பேராசிரியர் பதவியைப் பெறவில்லை. இதற்குக் காரணம், அங்கிருந்த சிலரது பொருமையேயாகும். இவர் சர்வ கல்லூரிப் பட்டம்[3] பெறவில்லை என்ற ஒரு சாக்கைச் சொல்லி, அவர்கள் இவர் பேராசிரியர் பதவியைப்[4] பெறுவதைத் தடுத்து வந்தார்கள். எனினும், இவர் புகழ் ஐரோப்பா முழுவதும் பரவுவதை அவர்களால் தடுக்க முடியவில்லை. மிக்க பிரக்கியாதி பெற்ற 'மாக்ஸ் பிளாங்கு,[5] 'மாக்ஸ் வான்லா,'[6]

1. Formulated 2. Doctor of Philosophy (This refers to Science also.) 3. A regular college degree 4. Professorship 5. Max Planck (Nobel Prize 19.) 6. Max Van Laue (Nobel Prize 19.)

'லாரெண்ட்ஸ்'[1] என்பவர்கள், இவரிருந்த இடத்தைத் தேடி வந்து, சின்னாள் இவருடன் தங்கியிருந்து, அளவளாவிச் சென்று, மீண்டும் மீண்டும் வந்துகொண்டிருந்தனர்; இவரிடம் அவர்களுக்கேற்பட்ட அன்பும் நன்மதிப்பும் அளவிடற்கரிய ஆயின.

ஆல்பெர்ட்டு அயின்ஸ்டீன், ஹாலந்து, ஜெர்மனி முதலிய நாடுகளுக்குச் சென்று, அங்குள்ள கல்விக் கழகங்களில் சொற்பொழிவுகள் நிகழ்த்தி வந்தார்.

இவர் இவ்வளவு புகழ் படைத்தவராயிருந்தும், ஸுரிச்சுச் சர்வ கலாசாலை இவருக்குப் பேராசிரியர் பதவி அளிக்கவில்லை. இவர் ஜெர்மனியில் பிறந்தவரென்பதும் யூதரென்பதுமே இதற்குக் காரணங்களாயிருக்கலாம்.

ஆனால், 1909-ஆம் ஆண்டில் ஸுரிச்சுத் தொழிற்கல்விக் கழகம்[2] இவருக்குப் பேராசிரியர் பதவியளித்தது. தாம் கல்வி கற்ற இடத்திலேயே ஆல்பெர்ட்டு அயின்ஸ்டீன் பேராசிரியர் பதவியையும் பெற்றார்.

அங்கு இவருக்கு ஐந்து வருஷங்கள் இனிமையாய்க் கழிந்தன. போதிய ஓய்வும் வசதிகளும் இருந்ததால், இவர் மேலும் மேலும் ஆராய்ச்சி செய்து வர முடிந்தது. இவரது முதல் விவாகம் ரத்தானதுதான், இக்காலத்தில் நிகழ்ந்த துக்ககரமான சம்பவமாகும்.

---

1. Laurentz (Nobel Prize 19.) 2. Polytechnic Academy at Zurich

தன்னிடம் பிறந்த அயின்ஸ்டீன், பிற நாடுகளில் புகழோடு வாழ்ந்து வருவதைக் கண்டு ஜெர்மனியும் கண் விழித்தது. பெர்லின் சர்வ கலாசாலையில் பேராசிரியர் பதவியை வகிக்குமாறு அஃது இவரை வற்புறுத்தியது.

தாய் நாட்டில் வாழ்ந்து வருவதினும் இனிமை வேறுண்டோ? ஆல்பெர்ட்டு அயின்ஸ்டீனும், தாம் கல்வி பயின்ற ஸ்விட்ஸர்லாந்திடம் விடை பெற்று, 1914-ஆம் ஆண்டில் ஜெர்மனி வந்தடைந்தார். இவர் ஜெர்மனிக்கு வந்ததற்கு மற்றொரு காரணமும் உண்டு:

பெர்லின் சர்வ கலாசாலை மிக்க பிரக்கியாதி பெற்ற அறிஞர்களுக்கு இருப்பிடமாயிருந்தது. அச்சர்வகலாசாலை, கல்வியை மட்டும் போதிக்கும் கலாசாலையன்று; சாஸ்திர ஆராய்ச்சியையும் கல்வியையும் வளர்க்கும் கலாசாலையாகும். ஆகவே, மாணவர்களைப் பரீட்சைக்குச் சித்தம் செய்வதென்னும் தொழிலே அங்கிருந்த ஆசிரியருக்கு இல்லை. அங்கு ஆராய்ச்சி செய்ய முடியாத சிறு பிள்ளைகளுக்கு, 'கலாசாலை மாணுக்கன்' என்னும் பட்டம் இல்லை. அங்குள்ள சாஸ்திர விற்பன்னர், வாரத்திற்கு ஒரு முறைதான் கூடுவர்; தமது ஆராய்ச்சி நிலையையும் பிற அறிஞருக்கு உணர்த்துவர். ஆராய்ச்சியில் ஈடுபட்ட ஒவ்வொரு மாணவனுக்கும், ஆசிரியருக்கும், பிறருக்குமாகச் சொற்பொழிவு நிகழ்த்தும் உரிமையுமுண்டு. இத்தகைய சர்வ கலாசாலையில் முக்கியமான பதவியைப் பெற

அயின்ஸ்டீன் வந்தனரென்ருல், அதில் என்ன ஆச்சரியம் இருக்கின்றது!

1914-ஆம் ஆண்டிலிருந்து, இரண்டொரு வருஷங்களுக்கு முன் வரையில், இவர் பெர்லின் சர்வகலாசாலையிலேதான் இருந்து வந்தார்.[1]

அறிஞர்களின் மன அமைதியைக் குலைப்பதே தன் கொள்கை என்பது போல, 1914-ஆம் ஆண்டில் முதல் மகா யுத்தமும் ஆரம்பித்தது. யுத்த வெறி மேற்கொண்ட ஜெர்மனி கடும்போரிடு வதையும், அதனுல் தமக்கேற்பட்ட இன்னல்களையும், இப்பெருந்தகையார் உன்னி உன்னி மனம் சோர்வாராயினர். நாடெங்கும் அலங்கோலம்! வீடெங்கும் சாவொலி! "நான் ஆராய்ச்சியில் அந்நாளில் மனத்தைச் செலுத்தாமலிருந்திருப்பேனுகில், எனக்குப் பித்துப் பிடித்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை," என்று இவர் அந்நாட்களைக் குறித்துக் கூறியிருக்கிருர்.

ஆகவே, அயின்ஸ்டீனும் சாஸ்திரத் துறையில், குருதி வெள்ளம் பெருகாத கடும்போர் நடத்திக்கொண்டுதான் இருந்தார்; இவர் வெற்றியே பெற்ருர்; ஆனுல், ஜெர்மனியோ, பல போர் முனைகளிலும் முறியடிக்கப்பட்டு, சமாதானத்தைக்கெஞ்சியது. யாவரும் அறிந்த 'வர்சேல்ஸ் உடன்படிக்கை'யும் ஏற்பட்டது.

---

1. சமீப காலத்தில் ஜெர்மனிக்கு யூதரிடம் இருந்த பகைமை அதிகரித்து யூதர்களனைவரையும் ஜெர்மனியிலிருந்து வெளியேற்றிய போது ஆல்பெர்ட்டு அயின்ஸ்டீனும் தம் சுயநாட்டைத் துறக்க வேண்டியதாயிற்று.

யுத்த நஷ்ட ஈட்டைக் கொடுக்க முடியாமல் ஜெர்மனி தவித்தது; அயின்ஸ்டீனும், வறுமைப் பிணியால் பீடிக்கப்படுவாராயினர். 'சர்வ தேச சங்கமும்[1] பிறந்தது. அதில் அயின்ஸ்டீன், ஜெர்மனியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினருமானர். சமாதானமும், சமரஸமும், பிழையைப் பொறுக்கும் பெருநோக்கமும் கைகூடின என்னும் வேளையிலேதான், பிரான்ஸ், உடன்படிக்கைக் கொள்கைக்கு மாருக, ஜெர்மனிக்குச் சொந்தமான 'ரூர்'[2] என்னும் பிரதேசத்தைக் கைப்பற்றியது. யுத்த நியாயத்திற்கு விரோதமான இச்செய்கையைக் கண்ட அயின்ஸ்டீன், சர்வ தேச சங்கத்திலிருந்து திடீரென விலகிக் கொண்டார்.

ஜெர்மனியிலோ, "ஜெர்மனி யுத்தத்தில் தோல்வியுற்றதற்கு யூதர்களே முக்கிய காரணமாயிருந்தார்கள்,' என்னும் நம்பிக்கை அதிகரித்துக் கொண்டே வந்தது. தம் நாட்டிற்கும் தம் வகுப்பினருக்கும், தமக்கும் துன்பமே வந்துற்றதைக் கண்டு, அயின்ஸ்டீன் மனம் சோர்ந்தார். சாஸ்திர ஆராய்ச்சியே இவருக்குப் பெரிய ஆறுதலளித்து வந்தது.

பிரான்ஸுக்கும் பிற நாடுகளுக்கும் ஜெர்மனியிடமிருந்த பகைமை, அயின்ஸ்டீனிடத்தும் அந்நாட்டு அறிஞர்களிடத்தும் இல்லை என்பது மிகவும் போற்றத்தக்கதாகும்.

1. The League of Nations 2. Ruhr

பிரான்ஸிலும் இங்கிலாந்திலும் உள்ள அறிஞர்கள், அயின்ஸ்டீனைத் தங்கள் நாட்டிற்கு வந்து சொற்பொழிவு நிகழ்த்துமாறு வருந்தி அழைத்தார்கள். அயின்ஸ்டீனும் அதற்குச் சம்மதித்தனர். 1921-ஆம் ஆண்டில் இவருக்குப் பாரிஸிலும்[1] இலண்டனிலும் நடந்த வரவேற்பும் உபசாரமும் வேறெவருக்கும் நடந்ததில்லை.

'பால்போர் பிரபு'[2] என்ற இங்கிலாந்தின் பிரதம மந்திரியார், இவரை நியூட்டன்,[3] கலிலியோ[4] முதலியவர்களைக்காட்டிலும் சிறந்த அறிஞர் என்றது பொய்யுரை அன்றாயினும், அது பால்போரின் விரிந்த நோக்கத்தை எடுத்துக் காட்டுவதுமாகும்; ஆங்கில அறிஞர்கள் ஜாதி, மதம், தேசம் முதலிய வேற்றுமைகளுக்கு அடிமைப்பட்டவர்களல்ல என்பதனையும் விளக்கும்.

அவ்வாண்டிலேயே, அயின்ஸ்டீன் நோபெல் பரிசும் வழங்கப் பெற்றார். பரிசில் தொகையில் (சுமார் 8000 பவுன்) ஒரு சிறிதும் இவர் தமக்கென்று உபயோகித்துக்கொள்ளாமல், கல்வியின் வளர்ச்சிக்கென்றே வழங்கிவிட்டது, இவரது பற்றற்ற மனப்பான்மையைக் குறிக்கும். அயின்ஸ்டீனுக்குப் பிரான்ஸிலிருந்த நன்மதிப்பினால், அந்நாட்டுக்கு ஜெர்மனியிடம் இருந்த துவேஷ புத்தியும் சிறிது குறைந்ததென்றே சொல்ல வேண்டும். பாரிஸ் சர்வ கலாசாலை முழு மனத்துடன் அயின்ஸ்டீனுக்குச் 'சாஸ்திர பண்டித' பட்டமளித்தது.

---

1. Paris 2. Lord Balfour 3. Newton 4. Galileo

ஜெர்மனியிலும் இவரை அறியாதவர் எவரு மிலர் என்னலாம். ஜெர்மனி அறிஞரைப் போற் றும் முறைமை தனிப்பட்டது. என்ருவது ஒரு நாள் 'ஸர். ஸி. வி. ராமனவர்கள் கண்டுபிடித்த ஓர் அதிசய உண்மை' என்று தலையங்கமிட்டுக் கட்டுரை எழுதிப் பின் பல வருஷங்கள் வரையில் வாளாவிருக்கும் தன்மையன அல்ல அந்நாட்டுப் பத்திரிகைகள். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு பத்திரிகையிலும், அந்நாட்டு அறிஞர்களைப் புற்றிச் சிறிதளவாவது செய்தி வந்துகொண்டிருக்கும். இதனுல், ராஜ தந்திரிகளைப் பலர் அறியாதிருந்தா லும், உண்மைப் பெரியாரை ஒருவரும் அறியாம லிருக்க முடியாது.

உதாரணமாக, ஏழு வயதுள்ள சிறுவனெரு வன் பள்ளிக்கூடத்திற்குச் சென்றுகொண்டிருந் தான்; அயின்ஸ்டீனை வழியில் கண்டான். இவர் முகத்தைப் பத்திரிகைகளில் பார்த்த ஞாபகம் அவ னுக்கு வந்தது. அவன் உடனே இவரை அணுகி, "தாங்கள்தானே அயின்ஸ்டீன்?" என்ருன். அயின்ஸ்டீனும் புன்முறுவலுடன், "ஆம்!" என் ருர். அவன், "நானும் நோபெல் பரிசு பெற எத் தனை நாளாகும்?" என்ருன். "நன்ருய்ப் படி; நாளைக்கே அப்பரிசைப் பெறலாம்," என்ருர் அயின்ஸ்டீன்.

நம் நாட்டில் இம்மாதிரியான சம்பாஷணைகள் நடைபெறுவது மிகவும் அரிதன்ருே! காலஞ் சென்ற பாரதியாரும், வீணைத் தனம் அம்மாளும்

நாளைக்கே உயிர் பெற்று வரினும், அவரை இன்னவர் என்று அறிந்துகொள்ளும் சக்தியை நம்மவர்களிடத்தில் வளர்க்காதது தமிழ் நாட்டுப் பத்திரிகைகளுக்கே ஓர் இழுக்காகும்.

## குணாதிசயங்கள்:

"ஆன்றவிந் தடங்கிய சான்றோர்" என்ற அடைமொழி அயின்ஸ்டீனைப் போன்றவர்களுக்கென்றே ஆக்கப்பட்டது போலும்! 'அடக்கம்' என்பதே அயின்ஸ்டீனின் மற்றொரு பெயராகும். பால்போர் பிரபு இவரை மிகவும் புகழ்ந்த போது, இவர் கூறிய மறு மொழியை, தான் பெருந்தொண்டாற்றுவதாகக் கருதி மனப்பால் குடிக்கும் ஒவ்வொருவனும் தன் மனத்திற் பதிக்க வேண்டும்: "இயற்கையில் பொதிந்து கிடக்கும் உண்மையில் சிறிதினை ஆராய்வதும், அச்சிறிதிலும் மிகச் சிறிதைக் கண்டறிவதுமே நான் பெறும் பாக்கியமென்று நினைத்தேன். அதற்கு மேலும், நீங்களனைவரும் என்னிடம் அன்பும் ஆதரவும் துதி மொழியும் வழங்கினீர்களானால், அதற்கு நான் எவ்வாறு கைம்மாறு செய்யக்கூடும் என்பதே எனக்குப் புலப்படவில்லை!" என்பதே இவர் கூறிய மறு மொழி.

அயின்ஸ்டீன் இதுவரை யாவரும் அடைந்திராத புகழ் அடையவே, இவருக்குப் பலர் பகைவராயினர். இவர் கண்டு பிடித்த உண்மையை 'வீண் புரளி' என்பாரும், 'வேதாந்தமே' என்பாரும் பலரிருந்தனர். அவர்களிற் சிலர், பகிரங்கமாக

இவரைப் பற்றிப் பத்திரிகைகளில் அவதூருக எழுதவும் ஆரம்பித்தனர். அயின்ஸ்டீனும், அறிஞருலகமும் இதைப் பொருட்படுத்தவே எண்ணவில்லை. ஏனெனில், தாம் வெளியிட்ட உண்மை மிகச் சிக்கலானது என்பது அயின்ஸ்டீனுக்குத் தெரியும். "யாவரும் அறியும்படி அதைச் சொல்ல எனக்குத் தெரியாததாலல்லவா இவர்கள் ஒன்றை மற்றொன்ருக நினைக்க நேர்ந்தது!" என்று அயின்ஸ்டீன் தம்மைத் தாமே நொந்துகொள்வார். இவர் நினைத்தபடியே, இவரைப் பின்பற்றக் கூடிய புத்தி நுட்பம் அறிஞர்களிலும் ஒரு சிலருக்குத்தான் முடியும். ஆதலால், ஏனையோருக்கெல்லாம் அயின்ஸ்டீன் வேதாந்தம் பேசுபவரேயானுர்.

மேனுடுகளில் வசிப்பதென்ருல், நடை உடை பாவனைகளில் சமூகக் கொள்கைக்கு அடிமைப்பட்டுத்தாணுக வேண்டும். அயின்ஸ்டீன் இவ்வாறு அடிமைப்படச் சம்மதிக்காதது, இவர் மனப்பான்மையை விளக்குவதாகும். இதனுல் சிலர் இவரை அவமதிப்பதும், முகந்திரிந்து நோக்குவதுமுண்டு. ஆனுல், அயின்ஸ்டீன் இவைகளை மதிப்பதே இல்லை.

ஒரு முறை, இவர் நண்பர், "இந்த ஆடையை அணிந்துகொண்டா விருந்துக்குப் போகிறீர்கள்!" என்று ஆச்சரியத்துடன் கேட்டார். அயின்ஸ்டீன், "இல்லையில்லை; என்னை அங்கு வந்து பாரும்," என்ருர். விருந்து ஆரம்பிக்கும் சமயத்தில், அயின்ஸ்டீன் அதே ஆடையை அணிந்தே அங்குச் சென்

ருர். அவ்வாடையில், விளம்பரம் எழுதிய அட்டை ஒன்று பெரியதாய்த் தொங்கிக்கொண்டிருந்தது. அவ்விளம்பரம் வருமாறு: "இது சுத்தமான ஆடை; நன்கு மடிக்கப்பட்ட ஆடை; ஆகவே, கௌரவமான ஆடையுமாகும்."

ஏழைகளிடம் இவருக்குள்ள அன்பும், துன்புறுவோரிடத்து உள்ள அனுதாபமும், இவர் சுற்றுப் பிரயாணம் செய்து வரும்போது ஆங்காங்கே எழுதியுள்ள தினசரிக் குறிப்பிலிருந்து[1] வெளியாகின்றன:

### "இலங்கைத் தீவு: இந்தியா"

"இன்றுதான் நான் முதன்முதலில் இந்திய நாட்டு ஹிந்துவைக் கண்டேன்; அவன் முதியோன்; முகத்தில் என்ன பொறுமையும் சாந்தமும் தவழ்கின்றன! மற்றும் சில கருநிறமுள்ள ஹிந்துக்களையும் பார்த்தேன். என்ன அடக்கம்! பிரபுக்கள் பிச்சை வேடம் பூண்டது போன்றிருந்தது அவர்கள் தோற்றம். இந்த நாட்டு மக்களின் ஏழ்மையாலும், அவர்களது உயர்ந்த நடக்கையை விரட்டிவிட முடியவில்லை."

இந்தியாவில் அயின்ஸ்டீன் பிரயாணம் செய்த போதெல்லாம், ரிக்ஷாவில் ஏறச் சம்மதிக்கவேயில்லை என்பது குறிக்கத்தக்கது.

மற்ரோரிடத்தில், இந்தியாவைப்பற்றி இவர் பின் வருமாறு கூறியிருக்கிருர்:—

1. Diary

"இந்நாட்டைப் பார்க்கும்போது, மேனாடுகள் எக்கதிக்குள்ளானாலென்ன?' என்னும் எண்ணம் தோன்றுகின்றது. இந்நாட்டு மக்கள் கள்ளங்கபடற்றவர்கள். மேனாடுகளில் காணப்படும் கல்நெஞ்சமும், சுயநலமும் இங்கில்லை; இதனாலேதான் இந்நாடு செல்வத்திலும் நாகரிக வாழ்விலும் பின்னடைந்திருக்கிறதோ என்னவோ தெரியவில்லை!

"என்ன எனக்கு இவ்வாறெல்லாம் தோன்றுகிறதே! இவை ஒருகால் இந்நாட்டின் உஷ்ணத்தாலேற்பட்டிருக்கலாம்; அல்லது இந்நாட்டின் மகிமையாலேயே ஏற்பட்டிருக்கலாம்."

சீன மக்களின் ஏழ்மையைக் கண்டு அயின்ஸ்டைன் மனம் பதைத்தார். ஜப்பானின் அழகிய தோற்றத்தைக் கண்டு, "இது பூங்காவனமே!" என்றார். இவர் அமெரிக்க நாட்டில் பிரயாணம் செய்த போது, "இதுவே நாடு; இங்குச் செல்வம் செறிந்துள்ளது; இனிமையும் அமைதியும் மிகுந்துள்ளன. உண்மையான நகரங்களை நான் இந்நாட்டிலேதான் முதன்முதலில் கண்டேன்; 'நியூயார்க்'கை[1] உலகின் தலைநகர் என்பது என் தவறாகும்?" என்று கூறியிருக்கிறார்.

அயின்ஸ்டைன் இசை இன்பத்தில் ஈடுபட்டவர். இவர் 'பிடில்' வாசிப்பதில் மிகவும் தேர்ச்சி பெற்றார். 'பீதோவென்'[2] 'பாக்கு'[3] என்னும் சாஹித்திய நிபுணர்களிடத்தில் இவருக்கு அதிக

1. New York 2. Beethoven 3. Bach

ப்ரேமை உண்டு. கணிதத்தில் ஈடுபட்டு மனம் களைத்த போதெல்லாம் இவருக்குப் புத்துயிரளிப்பது சங்கீதமேயாகும்.

இலக்கியத் துறையில் இவருக்கு ஷேக்ஸ்பியரிடத்திலும் 'கதே'[1] இடத்திலுந்தான் அதிக விருப்பம். "வாழ்க்கைப் பிணிக்கு உபநிஷதங்களைப் போன்ற மற்றொரு மருந்தினைக் கண்டிலேன்!" என்று சொன்ன 'ஷோபனேர்'[2] என்பவரின் நூல்களையே இவர் அடிக்கடி படிப்பது வழக்கம்.

### கணிதத்தில் தேர்ச்சி:

இவர் கணித சாஸ்திரத்தில் ஒரு தனித் துறையை ஏற்படுத்தியவர். இவருக்குக் கணிதத்திலுள்ள தேர்ச்சி, அறிஞர்களுக்கே எட்டுவதாகும். இவர், "மூன்றுதான் உண்டு" என்று யாவரும் சொன்ன போது, "இல்லை; நான்காவதான ஒன்றும்[3] உளது," என்று சொன்னவர்; 'கால ஆகாச சமுச்சய நியாயத்தை'[4] எடுத்து நிலை நிறுத்தியவர். இந்த 'நியாய'த்தை விளக்கியுரைப்பது இந்நூலின் எல்லையைக் கடப்பதாதலால், பின் வருமாறு சுருக்கிக் கூறியுள்ளோம்:—

'காலம்'[5] என்பதும், 'இடம்' அல்லது 'ஆகாசம்'[6] என்பதும் புலன்களாலறியப்படும் உணர்ச்சிகளாகும். இவைகளில் நாம் 'கால உணர்ச்சி'[7]யைச் சம்பவ நிகழ்ச்சிகளிலிருந்தே அறிகின்

---

1. Goethe 2. Schopenhauer 3. The fourth dimension 4. The Space-Time Continuum 5. Time 6. Space 7. Time Concept

ரேும். சம்பவங்களும், அவை நடை பெற்ற 'இட மும்' இல்லை என்ருல், 'கால உணர்ச்சி'யும் நமக்கு ஏற்படுவதில்லை. தூங்கும் போது, நமக்குக் கால உணர்ச்சி ஏற்படுவதில்லை.

இதே முறையில், 'இட உணர்ச்சி'யும்[1] கால உணர்ச்சியுடன் சம்பந்தப்படுத்தப்பட்டே அறி யப்படுகிறது.

ஆகவே, காலமும் இடமும் ஒன்ருேடொன்று சம்பந்தப்பட்டனவேயாகும். இச்சம்பந்தம் உண் டென்பதை நியூட்டன் முதலியவர்கள் அறிய வில்லை. 'காலம்' தனித்ததென்றும், 'இடம்' தனித்த தென்றும், ஒவ்வொன்றும் தனியான நிலை உடைய தென்றும் அவர்கள் கருதினுர்கள். அது 'கால ஆகாச ஸ்வயம் பிரகாச நியாய'[2]மாகும்.

அயின்ஸ்டீனே முதன்முதலில், கால ஆகாச சமுச்சய நியாயத்தை இத்தகையது என்று எடுத் துக் கூறினுர்.

**வியாபக வஸ்துவும் அயின்ஸ்டீனும்:**

எங்கேயும் யாவற்றையும் ஆக்கிரமித்து நிற் கும் 'வியாபக வஸ்து'[3] என்னும் ஒரு பொருள் உண்டென்பதை அறிஞர்கள் நம்ப வேண்டியதா யிருந்தது. ஏனெனில், ஒளியானது[4] ஒரு விஞ டிக்கு 186000 மைல் வேகத்தில் பரவுவதற்கு ஒரு வஸ்துவின் உதவி அவசியம் வேண்டும் என்றே நம்பினுர்கள். ஆகவே, இந்த வஸ்துவுக்கு, அவர்

1. Space concept 2. Absoluteness or Space and Time
3. Ether 4. Light

கள் மனத்திற்குத் தோன்றிய விதமாகவெல்லாம் பண்புகளைக்[1] கற்பித்து வந்தார்கள். இது நிலைத்த தென்பதும், கனமற்றதென்பதும், மிகவும் நீண்டு சுருங்கும்[2] தன்மை உடையதென்பதும் இவ்வஸ்து வுக்கு அவர்கள் கற்பித்த சில பண்புகளாகும்.

தயிரைக் கடையும் மத்தைப் போன்று பூமி யானது வியாபக வஸ்துவில் சுற்றி வருகிறதென் பதையும், தயிரான வியாபக வஸ்து அசைவதே இல்லை என்பதையும் அவர்கள் நம்பி வந்தது சரியா யிருக்க முடியாதென்பது, 1881-ஆம் ஆண்டிலேயே ஒருவாறு விளங்கிற்று. 'மைக்கேல்சன்'[3] செய்த பரிசோதனையின் மூலமாய், 'வியாபக வஸ்து உண் டென்றால், அதுவும் பூமியுடன் சுற்றத்தான் வேண்டும்' என்பது ஏற்பட்டது.

எனினும், அறிஞர்கள் மைக்கேல்சனை நம்பா மல், வியாபக வஸ்துவையே நம்பி வந்தார்கள். ஏனென்றால், நிலைத்ததாய் ஒன்றும் இல்லை என் றால், எவ்வாறு அவர்கள் கணக்கிட முடியும்? நிலத்தின் நீளத்தை அளக்க விரும்புபவனும், நிலமும் அளக்கும் கருவியும் நிலைக்காமல் ஓடிக் கொண்டேயிருந்தால், எவ்வாறு அளக்க முடியும்?

இத்தருணத்திலேதான், அயின்ஸ்டீன் "வியா பக வஸ்து இல்லை," என்றார். "நிலைத்த ஒன்று வேண்டுமானால், காலத்தையும் இடத்தையும் இணையுங்கள்; இல்லாத வியாபக வஸ்துவைப்பற் றிக் கவி பாடாதீர்கள்," என்றார். இவர் சொல்லிய

1. Properties 2. Elastic 3. Michaelson

அனுமானத்தின்படியே, பல நிகழ்ச்சிகளும் நடந்ததிலிருந்து, இவர் அனுமானம் பிரமாணமே என்பது பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. பிரகிருதியும் பூத சக்தியும் ஒன்றே[1] என்பதும், ஒளிக்கும் மின்சாரத்திற்குமுள்ள சம்பந்தங்கள்[2] எவை என்பதும் அயின்ஸ்டீனால் எடுத்துரைக்கப்பட்ட சில முக்கிய உண்மைகளாகும்.

## முடிவுரை:

அயின்ஸ்டீனைப் பௌதிகத்திற்குப் புத்துயிர் அளித்தவர் என்றே சொல்லலாம்; கணிதத்திலும் இவர் ஒரு தனி முறையை நிறுவினர் என்றும் சொல்ல வேண்டும். இவரிடம் புத்தி நுட்பத்திற்கேற்ற அடக்கமும் அரிய குணங்களும் ஒருங்கே பொருந்தியிருப்பது, மிகவும் ஆச்சரியமானது.

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி, 'இவன் தந்தை என்னோற்றான்கொல்!' என்னும் சொல்," என்ற புகழுரையை ஆல்பெர்ட்டு அயின்ஸ்டீனைப் போல உலகமெங்கும் பரப்பிய மற்றொரு தனி மகன், இனிப் பிறந்தாலுண்டு.



1. Matter and material energy are one.
2. Photo-electric Phenomenon



ஸர். ஸி. வீ. இராமன்

## 4. ஸர் சந்திர சேகர வேங்கடராமன்[1] (1888—****)

ஆமையொன்று ஒரு முயலைப் பந்தயத்தில் வென்றதென்னும் ஒரு கதை உண்டு. சமீப கால இந்திய சரித்திரத்தை ஆராயும்போது, முயலே ஆமையை வென்றதெனக் கூற வேண்டியிருக்கிறது.

முயலைப்போல, இந்தியரும் பல நூற்றுண்டுகள் வரை நடு வழியில் நித்திரை போயினர்; கீதை எடுத்துரைக்கும் கர்ம யோகமும் ஞான யோகமும் யாவராலும் பின்பற்ற எளியவை என்னும் கனவும் கண்டுகொண்டிருந்தனர்; 'எல்லாம் மாயை!' என்ற எளிய சொல்லும், 'யாவும் விதிப்பயனே!' என்ற புலம்பலும் இந்திய மக்களின் அறிவை மழுங்கச் செய்து, அவர்கள் வீரத்தினையும் வென்றன. பாரத தேவியும் பிணியுற்றனள்.

மேனுட்டினரோ எனில், ஆமையைப் போல விழிப்புடன் முன்னடந்தனர். "பரதத்துவ ஞானம் நமக்கேன்?" என்ற கருத்தினராதலால், புலன்களுக்கடங்கிய பௌதிக நிகழ்ச்சிகளில் அவர் தம் மனத்தைச் செலுத்தினர்; சாஸ்திரப் பயிற்சியும் காட்

1. Sir C. V. Raman

டுத் தீயென மேனாடுகளில் பரவிற்று; சாதன அமைப்புக்களும் எண்ணிக்கையற்று அங்கு மிகுந் தன.

பந்தயம் இந்நிலையிலிருக்கக் கண்ட சிலர், "ஆமையே முயலை வென்றது," என்று முடிவாக உரைத்தனர். பின்னும் சிலர், "இந்திய முயல் ஓடாது; அது நன்றாய்த் தூங்கும்; ஓடும் பிராணி ஆமைதான்," என்று சொற்பொழிவு நிகழ்த்தி மகிழ்ந்தனர். பந்தய முடிவுவரை காத்திருந்த சில ருக்கே, உண்மை புலப்பட்டிருக்கக்கூடும். பந்த யம் முடிவதற்கு முன்னமே ஆமை நடக்க முடியாமல் களைத்து நின்றதையும், அதுவரையில் பந்தயத்தில் பற்றில்லாதிருந்த முயல், கனவு நீங்கிக் கண் விழித்தெழுந்து, ஓட்டமாயோடி, ஆமைக்குச் சிகிச்சை செய்து, அதனைத் தன் முதுகிற்றாங்கி, காற்றெனக் கடுகிச் சென்று பந்தயத்தை முடித் ததையும் அறிந்தவர் மிகச் சிலரேயாவர்.

பௌதிகத் துறையில் ஆமை களைத்து நின்ற தாக நாம் சொன்ன ஆண்டு, கி. பி. 1926-27. அக் காலத்திற்குச் சிறிது முன், சிதறிய கிரணங்கள்[1] உண்டென்பதைக் 'காம்ப்டன்'[2] என்பவர், எக்ஸ் ரே[3] சாதனத்தினால் விளக்கியதற்காக நோபெல் பரிசு பெற்றார். இதைக் கண்டார் அனைவரும், இச் சிதறிய கிரணங்களை வேறு சாதனங்களினால் பிறப் பிக்கப் பெரிதும் முயன்று வந்தனர். அம்முயற்சி சிறிதும் கைகூடவில்லை.

---

1. Scattered Rays 2. Compton 3. X-Ray

கல்கத்தாச் சர்வ கலாசாலையில் ஆராய்ச்சி செய்து வந்த சந்திர சேகர வேங்கடராமன் ஒருவரே அம்முயற்சியில் வெற்றி பெற்றூர் என்பது தான் ஆமை முயல்களின் பந்தயத்தின் உண்மை முடிவாகும்.

எவ்விதம் திருப்பினுலும் பிறழாமல், வட தென் துருவங்களையே நாடும் காந்த ஊசியினைப் போன்று, இராமன் மனமும் எக்காலத்திலும் பௌதிகத்தினையே நாடி நிலைத்து நின்றது என்பதைப் பின் வரும் வாழ்க்கைச் சம்பவங்களில் எங்கும் காணலாம்:

இராமன், கி. பி. 1888-ஆம் ஆண்டில் திரிசிராப்பள்ளியில் பிறந்தவர்; இவர் தந்தையாரான **சந்திரசேகரய்யர்**, தஞ்சைக்கருகிலுள்ள புரசைக் குடியைச் சேர்ந்தவர்; இராமன் பிறந்த காலத்தில், அவர் கலாசாலையில் கல்வி பயின்று வந்தார்.

கி. பி. 1892-ஆம் ஆண்டில் சந்திரசேகரய்யர், **விசாகப்பட்டினத்து ஹிந்து கல்லூரியில்**[1] பௌதிக போதகாசிரியராய் நியமிக்கப்படவே, அவர் தம் மனைவியாரான **பார்வதியம்மையாருடனும்**, தம் மக்களுடனும் விசாகப்பட்டினமடைந்தனர்.

இளமையிலிருந்தே இராமன், பௌதிகம், பௌதிகத்திற்குத் துணையான கணிதம் ஆகிய இவ் விரண்டினையும் நன்கு விளக்கிக் கூற இலக்கியம் முதலிய பல துறைகளிலும் சிறந்து விளங்கினூர். இசைச் சுவையைப் பரிந்து போற்றும் குடும்பத்தில்

1. Hindu College, Vizagapatam

பிறந்தவராதலால், இவருக்குச் சங்கீதத்திலும் அதிக விருப்பம் உண்டு.

இராமன் தம் பதின்மூன்றாவது ஆண்டிலேயே எப். ஏ. வகுப்பில் தேர்ச்சி பெறவே, பி. ஏ. படிப்பதற்காகச் சென்னைக்கு வந்தார். இந்திய சரித்திரத்தில் 'பௌதிக வளர்ச்சி' என்னும் ஒரு பெருந்தலைப்பிற்கு உரியவரான இவரைச் சரித்திரம் பயிலுமாறு சிலர் ஏவ முன் வந்தது விநோதமே. இராமனோ, அன்னார் சொல்லை ஏற்காமல், பௌதிகத்தினையே முதன்மையான பாடமாகக் கொண்டு, ராஜதானிக் கல்லூரியில்[1] மாணாக்கரானார்.

அக்கல்லூரியில் ஆங்கிலப் பேராசிரியராய் இருந்த 'எலியட்டு'[2] என்பவர், அக்காலத்தில் இராமனது சிறிய வடிவத்தினைக் கண்டு "இவ்வகுப்பைச் சேர்ந்தவன்தானோ நீ!" என்று கேட்டனராம்! ஒருவனது உடல் வளர்ச்சியைக்கொண்டே அவனைக் கலாசாலை மாணவன் என்று மேனாடுகளில் ஊகித்து வந்தனர் போலும்!

இராமன் சிலரை அறியுமுன்னரே, அனைவரும் இராமனை அறியத் தலைப்பட்டனர். கலாசாலைப் பேராசிரியர் அனைவரும் இராமனிடம் அன்பு பூண்டதற்கேற்பவே, இராமனும், பி. ஏ. பரீட்சையில், முதல் வகுப்பில், முதல் பதவியைப் பெற்றார்.

கி. பி. 1904-ஆம் ஆண்டில் இராமன் எம். ஏ. வகுப்பில் சேர்ந்தார். எம். ஏ. வகுப்பு மாணாக்

1. Presidency College 2. Elliot

கர்களுக்குச் சுயேச்சை அதிகம் உண்டு; ஆராய்ச்சியில் ஈடுபட் விரும்புவோருக்கு அவகாசமும் உண்டு. இராமனும் 'இராலி பிரபு'[1] 'ஹெம் ஹோல்ட்ஸ்'[2] முதலியவர்களியற்றிய பௌதிகக் கிரந்தங்களை எளிதில் கற்றுணர்ந்தனர்.

ஒரு நாள், அப்பா ராவ் என்னும் இராமனின் நண்பர், வழக்கமாய்ச் செய்யும் சோதனைகளுள்[3] ஒன்றில் ஒரு தவற்றைக் கண்டார். அச்சோதனை, ஒலியின்[4] ஓர் அங்கத்தினைச் சேர்ந்ததாகும். அப்பா ராவ், தமக்குப் பௌதிக ஆசிரியரான 'ஜோன்ஸ்'[5] என்பவரிடம் தாம் கண்டதைத் தெரிவித்தார். அத்தவறு ஏற்படக் காரணம் என்ன என்றும்; அஃது ஏற்படாமல் இருக்கும்படி செய்வது எப்படி என்றும் தெரிந்துகொள்ள அப்பா ராவ் விரும்பினார். ஆனால், ஜோன்ஸ், அப்பா ராவுக்கு மறு மொழி அளித்தாரில்லை.

அங்கிருந்த இராமனுக்கோ, அனைத்தும் தெளிவாய் விளங்கின. அப்பா ராவின் சந்தேகத்தினைத் தீர்த்ததோடு, அத்தவறு ஏற்படாமல் இருக்கும்படியான ஒரு நூதன சோதனை அமைப்பையும் இவர் நிறுவினார்; தாம் கண்டுபிடித்த நூதன முறை சிறந்ததுதான் என்பதனையும் பரிசோதனை செய்து தெரிந்துகொண்டார். தம் ஆராய்ச்சியின் முடிவுகளைச் சீராய் எழுதி, 'ஜோன்ஸ்' என்பாரிடம் தந்து, "பிழை திருத்தித் தாருங்கள்; இதைப் பத்தி

1. Lord Rayleigh 2. Helmholtz 3. Experiments
4. Sound 5. Jones

ரிகைக்கு அனுப்பலாமென்று இருக்கின்றேன்,'' என்ருர்.

ஜோன்ஸ், அவ்வாராய்ச்சியுரையை வாங்கிக் கொண்டு மூன்று மாதங்களாகியும் திருப்பித் தரவில்லை. தம் ஆராய்ச்சியுரை எவ்வாறேனும் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட வேண்டுமென்று ஆவல் கொண்ட இராமன், அதை ஜோன்ஸிடமிருந்து மீட்பதற்கு ஒரு தந்திரம் செய்தார்: அவரிடம் சென்று, "அடடா! ஒரு பிழை செய்துவிட்டேனே! என் ஆராய்ச்சியுரையைத் தாருங்கள்; அப்பிழையைத் திருத்திவிட்டுத் தருகிறேன்,'' என்ருர். ஜோன்ஸ், அதனை உண்மையென்று நம்பி, ஆராய்ச்சியுரையை இராமனிடம் அளித்தார். பிழை இருந்தாலல்லவோ இராமன் அதனைத் திருத்தப் போகிருர்! ஆராய்ச்சியுரையும் அன்றே இலண்டனிலிருந்த சிறந்த 'விஞ்ஞானப் பத்திரிகை'யின் [1] ஆசிரியருக்கு அனுப்பப்பட்டது. இராமன் இவ்விஷயத்தைப்பற்றி ஜோன்ஸிடம் சொல்லவில்லை. அவரும் இச்சம்பவத்தை அடியோடு மறந்துவிட்டார்.

சில நாட்களுக்குப் பின், தம் ஆராய்ச்சியுரையைப் பிரசுரித்த இலண்டன் விஞ்ஞானப் பத்திரிகையுடன், இராமன் ஜோன்ஸைக் காணச் சென்ருர். "கையில் என்ன வைத்துக்கொண்டிருக்கிருய்?'' என்று ஜோன்ஸ் கேட்டார். இராமன், ஒன்றும் பேசாமல், பத்திரிகையை நீட்டினர்.

---

1. Philosophical Magazine, London

"ஸி. வி. ராமனல் எழுதப்பட்டது" என்னும் தலையங்கத்தின் கீழ், ஒரு நீண்ட ஆராய்ச்சியுரை வெளியிடப்பட்டிருப்பதை ஜோன்ஸ் கண்டு ஆச்சரியப்பட்டார். என்னிடம் இதை ஏன் சொல்லவில்லை?" என்று ஜோன்ஸ் கேட்டார். இராமன் தடுமாற்றத்துடன், "இல்லை—நீங்கள்—படித்துவிட்டதால் இதில் பிழையிராதென்ற தைரியத்துடனேதான் நான் ஆராய்ச்சியுரையைப் பத்திரிகைக்கு அனுப்பத் துணிந்தேன்," என்ருர். "ஹூம்!" என்று ஜோன்ஸ் முதலில் பெருமூச்செறிந்து, பிறகு சிரித்த முகத்துடன், "பேஷ்!" என்ருர். இராமன் ஆராய்ச்சியுரை மற்ருென்றும், இங்கிலாந்திலுள்ள 'இயற்கை'[1] என்னும் பத்திரிகையில் தடங்கலின்றிப் பிரசுரம் செய்யப்பட்டது.

இராமன் எம். ஏ. வகுப்பில் வாசித்துக்கொண்டிருக்கும்போதே, இவரை இங்கிலாந்துக்கு அனுப்ப வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் ஜோன்ஸ் செய்து வந்தார் என்பது, அவருக்கு இராமனிடமிருந்த நன்மதிப்பை அறிவிப்பதாகும். 'தெய்வங்கள் வரமளித்தும், பூசாரி குறுக்கே நின்ருன்,' என்பதைப் போல, இவரை இங்கிலாந்துக்கு அனுப்புவதற்கு வேண்டிய பொருளுதவியை அரசாங்கம் தருவதற்கு முன் வந்தும், 'அயல் நாடுகளில் வசிப்பதற்கு இன்றியமையாத தேக நிலையை இச்சிறுவர் பெறவில்லை,' என்று சில வைத்திய நிபு

1. Nature

ணர் முடிவு செய்துவிட்டனர். ஆகவே, கி. பி. 1906-ஆம் ஆண்டிலேயே, இராமன் இங்கிலாந்திற்குப் போவது நின்றுவிட்டது. இதற்கிடையில், இராமன் எம். ஏ. பரீட்சையும் எழுதிவிட்டார்.

கலாசாலைப் படிப்பை முடித்த மாணவர்கள், "இனிமேல் என்ன செய்வது !" என்ற கேள்விக்கு விடை காணுமல் அல்லற்படுவது உண்டல்லவா? இராமனையும் இக்கேள்வி சில நாள் வரையில் துன்புறுத்தியது என்பதிலிருந்தே, இது நம் நாட்டு இளைஞரின் மன அமைதியைக் குலைக்கும் கேள்வி என்பதை அறியலாம்.

இராமன் எப். ஸி. எஸ்.[1] பரீட்சைக்கு வாசித்து வந்தார். கி. பி. 1907-ஆம் ஆண்டில் இவர் பரீட்சை எழுதுவதற்கு இரண்டொரு நாட்களுக்கு முன், தாம் எம். ஏ. பரீட்சையில் முதல் வகுப்பில் தேறிய ஒரே மாணுக்கர் என்பதனை அறிந்தார்; சிறிது குதூகலமுமடைந்தார். எப். ஸி. எஸ். பரீட்சையிலும் இவர், இந்தியா முழுதும் பரீட்சை எழுதியவர்களில் முதல்வராய் நின்றுர். "'எதிலும் இராமனே முதல்வர்!' என்று கூறுவது இத்துடன் முடிந்ததோ!" என்று நினைப்பவர்கள் ஏமாற்றமே அடைவார்கள். ஏனெனில், இவ்வாறு திடீரென்று முற்றுப் புள்ளி வைக்கக் கூடியது இராமனது சரித்திரமன்று.

பௌதிகத் துறையில், எம். ஏ. பரீட்சையில் முதல் வகுப்பில் தேறியவருள் இராமனே முதல்வர்;

1. F. C. S.

பத்தொன்பதாம் வயதிலேயே **டிப்டி அக்கவுண் டெண்டு ஜெனரல்**[1] ஆனவர்களிலும் இராமனே முதல்வர்.

* * *

கி. பி. 1907-ஆம் ஆண்டு முதல் 1917-ஆம் ஆண்டு வரையில் இராமன் அரசாங்கத்தில் வேலை பார்த்து வந்தார். இவர் அரசாங்கத்தில் டிப்டி அக்கவுண்டெண்டு ஜெனரலாகவும் பிறகு அக்கவுண் டெண்டு ஜெனரலாகவும் இருந்ததைப் பற்றி விரித் துரைப்பது நம் கருத்தன்று; ஆகவே, இவர் பெரிய உத்தியோகங்களை நிருவகிப்பதில் தீரர் என்பதனை யும், வேலையில் மிக்க நிபுணர் என்பதனையும்— சோம்பலுற்றவர்கள், வேலை தெரியாதவர்கள், அனுபவம் முதிர்ந்ததென்று இறுமாந்த கிழ நரி கள், தாங்கள் வெள்ளையர்கள் என்பதால் பிறரை அவமதிப்பவர்கள்—முதலியவர்களுக்கும் இவருக் கும் நட்பிருக்க முடியாது என்பதனையும், மேலதி காரிகள் நன்குணரும்படியான சம்பவங்கள் பல அவ்வப்போது நேர்ந்துகொண்டிருந்தன என்று சுருக்கிக் கூறிவிடலாம்.

இராமன் கி. பி. 1907-ஆம் ஆண்டில் வேலை பார்ப்பதற்காகக் கல்கத்தாவிற்குச் சென்றபோதும், இவர் மனம் பௌதிகத்திலேயே கண்ணுயிருந்தது என்பதற்கு நமது நாட்டு இதிகாசத்தில் ஒரே உதாரணந்தானுண்டு:

துரோணர் தம் மாணுக்கர்களாகிய பாண் டவ கௌரவர் என்ற இரு திறத்தினருக்கும் வில்

1. Deputy Accountant General

வித்தையில் உள்ள தேர்ச்சியைப் பரீட்சிக்க விரும்பினர்; ஓர் இலக்கைக் காட்டிச் சிறிது நேரத்திற்குப் பின் ஒவ்வொருவரையும், "இப்போது நீ எதைப் பார்க்கின்றாய்?" என்று வினவினர். துரியோதனன், வழிப் போக்கர் ஒருவரின் உயர்ந்த ஆடையைப் பார்த்துவிட்டு, "அங்குச் செல்பவரின் ஆடையையே நான் பார்க்கின்றேன். அஃது அணியத் தகுந்த ஆடை," என்று கூறினன். தருமரோ, "களங்கமற்ற உமது முகத்தைப் பார்க்கின்றேன்," என்றனர். காண்டீவன் ஒருவனே, ஒன்றும் பேசாமல், துரோணர் காட்டிய இலக்கையே நோக்கிக் கொண்டிருந்தனன். சந்திர சேகர வேங்கடராமனும், கல்கத்தாவிலிருந்த கட்டடங்களில் ஒன்றையே கண்டனர். அங்கேதான் 'இந்திய விஞ்ஞான அபிவிருத்தி சங்கம்'[1] இடம் பெற்றிருந்தது. இராமன் வளர்ந்த இடமும் அதுவே; இராமன் பௌதிகத்தை இந்தியாவில் வளர்த்த இடமும் அதுவே என்று கூறலாம்.

இராமன் உடனே அச்சங்கத்தின் அங்கத்தினராயினர். நாளடைவில், அச்சங்கத்தின் காரிய தரிசியாரான **அமிருதலால் சர்க்கார்** என்பவர், கல்கத்தாச் சர்வ கலாசாலையின் உப நிர்வாகத் தலைவரான[2] **ஸர் அஷுடோஷ் முகர்ஜி**, பேரறிஞரான **ஸர் குருதாஸ் பானர்ஜி** முதலிய பல பிரமுகர்களும் இராமனுக்கு அறிமுகமானார்கள்.

---

1. The Indian Association for the cultivation of Science
2. Vice-Chancellor

அமிருதலால் சர்க்கார் என்பவர், பேராசிரியர் பட்டம் பெற்றவர்; இந்தியா முழுதும் விஞ்ஞானம் வளர வேண்டும் என்பதில் பெருமுயற்சி எடுத்துக்கொண்ட மகேந்திரலால் சர்க்காரின் புதல்வர். அவர் இருபது வயதும் முற்றுப் பெருத இராமனின் முதிர்ந்த அறிவைக் கண்டு மெச்சினர்.

வங்காளத்தைப் பற்றி அறியாதவரும், ஸர் அஷுடோஷ் முகர்ஜியை அறியாதிருக்க முடியாது. 'வங்காளச் சிங்கம்' என்ற அவர் பட்டப் பெயருக்கேற்றவாறு, அவர் அறிஞர்களிடத்து அன்பும், கல்வி வளர்ச்சியில் பேரூக்கமும் உடையவர். அவர் இராமனிடம் முதலிலிருந்தே நன்மதிப்பு வைத்தவராவர்.

ஸர் குருதாஸ் பானர்ஜீயோ, இராமனைக் கண்டதும் அவரைத் தாம் பெற்றெடுத்த மக்களுள் முதல்வராகப் பாராட்டி, அவரிடம் அதிக வாஞ்சையோடிருந்தனர். விஞ்ஞான வளர்ச்சிச் சங்கமும் இராமனை வரவேற்றது; இராமனையும் வளர்த்துத் தானும் வளர்ந்தது.

மூன்றுண்டுகள் கழிந்தன; அதற்குள், இராமன் பௌதிகத்தில் பல ஆராய்ச்சியுரைகளை வெளியிட்டனர். இராமன் ஆராய்ச்சியில் காலூன்றினர் என்றே சொல்லலாம்.

இவ்வாறிருக்கையில், கி. பி. 1910-ஆம் ஆண்டில், இராமன் இரங்கூனுக்கு மாற்றப்பட்டார். இவர் இரங்கூனை அடைந்தார். எனினும், இவர்

மனம் கல்கத்தாவிலேயே பின் தங்கியது. இரங்கூனுக்கு இவர் போன சில நாளைக்குள், இவர் தந்தையார் இறந்தனர். அதனால், இவர் ஆறு மாத ஓய்வு எடுத்துக்கொண்டு சென்னை வந்தடைந்தனர்.

இவர் தந்தையாரின் ஈமக்கடன்கள் செவ்வையாய் நிறைவேறின. இவர் சென்னையிலிருந்த காலத்திலெல்லாம், ஒழிந்த வேளைகளில் ராஜதானிக் கல்லூரிக்குப்போய் ஆராய்ச்சி செய்து வந்தனர்.

ஓய்வு நாள் கழிந்ததும், இராமன் நாகபுரிக்கு மாற்றப்பட்டார்; சில மாதங்களுக்குள், அக்கவுண்டெண்டு ஜெனரலாக மீண்டும் கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டார். இராமனுள்ளமும் பூரித்தது; இந்திய விஞ்ஞான வளர்ச்சிச் சங்கமும் இவரை வரவேற்றது. இராமனின் ஆராய்ச்சியுரைகளும் நாற்றிசையும் சென்று, அறிஞருள்ளத்தைக் கவர்ந்தன.

கி. பி. 1914-ஆம் ஆண்டு, உலக சரித்திரத்திலேயே முக்கியமான ஆண்டு. எங்கும் பெரு நிகழ்ச்சிகள் ஏற்பட்டன; இந்தியாவிலும் அப்படியே; கல்கத்தாச் சர்வ கலாசாலைக்கு இறக்கை முளைத்தது.

நிதி மிகுந்த 'தாரகநாத பாலிட்'[1]டும் 'ராஷ்பீகாரி கோசு'ம்[2] பொற்குவை தந்தனர். நிதியற்றவரும், 'பொற்குவையே தருவோம்,' என்றனர்.

---

1. Taraknath Palit 2. Rash Behari Ghose

யாவற்றிற்கும் மூல காரணராய் நின்ற அஷு டோஷ் முகர்ஜியோ, விடாமுயற்சியில் பகீரதனை ஞாபகமூட்டினர்.

பல தனிகர்களின் பொருளுதவியால், கல்கத் தாச் சர்வகலாசாலையில், ஆராய்ச்சி நிகழ்த்தத் தக்க தான 'விஞ்ஞானக் கல்லூரி'[1] யும் ஏற்பட்டது.

இவ்வாறு மிகவும் சிறப்பாய் அமைக்கப்பட்ட 'விஞ்ஞானக் கல்லூரி', சிவ தனுசைப்போலாய் விட்டது. அஷுடோஷ் முகர்ஜியோ, மிதிலா நக ரின் அரசரானர். "இச்சிவதனுசை எடுத்து நிர் வகிக்கும் கோமகன் எங்குளன்?" என்று அவர் கவலை கொண்டனர்.

அந்தச் சமயத்திலேதான் அவர் இராமனைக் குறிப்பாய் நோக்கினர்; எங்கிருந்தோ விசுவாமித் திரரும், "இராமா, இது சிவதனுஸ்; அவள் பௌதி கம்; நீயோ, கோமகன்," என்றனர். இராமனும் சிவ தனுசை நோக்கியே நடந்தனர்; அதுவும், இராமன் கையேறியது; அக்கவுண்டெண்டு ஜென ரல் வேலையும் நழுவியது; இராமன் குறுநகை நகைத்துப் பௌதிகத்தினை நோக்க, அம்மடந்தை யும், நாணுற்று, இராமனைத் தன் கடைக்கண்ணால் நோக்கினள்.

விஞ்ஞானக் கல்லூரியில், பௌதிகத்தின் தலைமை ஸ்தானத்தை இராமன் ஏற்ருர்; அரசாங் கமோ, மற்ருெரு நபரை அக்கவுண்டெண்டு ஜென ரலாக நியமித்துக்கொண்டது.

* * *

1. College of Science

நிலத்திலிருந்து எடுத்து நீர் நிலையில் விடப்பட்ட மீனும் ஓடியாடிக் களித்தது. ஆராய்ச்சி உரைகளோ, இமயத்தினின்று சுரக்கும் நீரினைப் போன்று பெருகிக்கொண்டேயிருந்தன. இடை இடையே இராமன் மாணுக்கர்களுக்குப் போதித்தும் வந்தார்.

இராமனிடம் படித்த மாணுக்கர்களுள் பலர், இப்போது பெயரும் புகழும் பெற்று உயர் பதவியும் வகித்திருக்கின்றனர். 'போதகாசிரியர்' துறையிலும் இராமன் மிகச் சிறந்தவரே; 'ஸர் ஜேம்ஸ் ஜீன்ஸ்',[1] 'ஸர் ஆர்தர் எடிங்டன்,'[2] 'பெர்ட்ராண்டு ரஸ்ஸல்'[3] முதலிய சிலரிடமே காணும் சக்தி, இராமனிடம் உண்டு. சிக்கலான உண்மைகளையும் தெளிவாய் யாவரும் எளிதில் உணரும்படி போதிக்கும் சொல் வன்மையில், இராமன் இந்தியாவிலுள்ள எவருக்கும் பிற்பட்டவரல்லர் என்றே சொல்லலாம். பட்ட மரங்கள் தளிர்ப்பதையும், அங்குப் பசுமரத்து ஆணி போன்று பௌதிக உண்மைகள் பதிப்பிக்கப்படுவதையும், இராமனின் பிரசங்கங்களில் ஒன்றினையாவது செவி சாய்த்துக் கேட்டவரே அறிந்தவராவர்.

இராமன், தம்மிடம் வரும் ஆராய்ச்சி மாணவர்களிடத்துக் காட்டும் அன்பினையும், பரிந்தளிக்கும் உதவியினையும், அவரிடத்துத் தூண்டும் மன எழுச்சியையும் கண்ட பலர், இராமனைக் காலஞ்

---

1. Sir James Jeans 2. Sir Arthur Eddington
3. Bertrand Russel

சென்ற ரூதர்போர்டு பிரபுவுக்கு[1] ஒப்பாகக் கூறு கின்றனர். மேனாட்டார் ரூதர்போர்டு பிரபுவை இராமனென்று வழங்கத் தலைப்பட்டால், நாமும் இராமனை ரூதர்போர்டு பிரபு என்று வழங்க முன் வருவோம். அது வரையில் நமக்கு இராமன் இராமனே.

*　　　　*　　　　*

பேரும் புகழும் இராமனை நாடின; கி. பி. 1921-ஆம் ஆண்டில் இவருக்குக் கல்கத்தாச் சர்வ கலாசாலை, பேராசிரியர் பட்டமளித்தது; கி. பி. 1924-ஆம் ஆண்டில், இலண்டனிலுள்ள 'ராஜ சங் கம்'[2] இவரைத் தோழராகத்[3] தேர்ந்தெடுத்தது. மேனாடுகளிலிருந்த சாஸ்திரக் கழகங்களும் சங்கங் களும், இவரை அங்கு வந்து சொற்பொழிவு நிகழ்த்துமாறு அழைத்தன. இராமனின் பூப்பிர தட்சணமும் (1924) ஆரம்பித்தது.

இவர் இந்தியாவிலிருந்து புறப்பட்டு நேரே இங்கிலாந்துக்குச் சென்றார்; அங்கிருந்த அறி ஞர்களுடன் சில நாளிருந்து அளவளாவிய பின், 'கானடா'[4]வுக்குப் பயணமானார்.

இராமன் கானடாவில் செய்த பிரயாணம், மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில், அப்போது தான் இவருக்குத் தம்மைப் பிற நாட்டு அறிஞர்க ளுடன் நேர்முகமாய் ஒத்திட்டுப் பார்க்கும் சந்தர்ப் பம் வாய்த்தது; தாமும் அரிய உண்மைகளைக் கண்டு

---

1. Lord Rutherford　　2. Royal Society, London
3. Fellow　　4. Canada

7

பிடிக்கும் சக்தி வாய்ந்தவரே என்ற திட நம்பிக்கையும் பிறந்தது. இராமன் நின்ற தட்டுக் கனத்தால் தாழ்ந்ததையும் அனைவரும் கண்டனர்.

பௌதிகத் துறையில் அமெரிக்காவிலேயே முதன்மை பெற்ற இராபர்ட்டு ஆண்ட்ரூ மில்லிகனும்[1] இவ்வற்புதத்தைக் கண்டனர். 'பாஸடேனு'[2]விலிருந்த தமது ஆராய்ச்சிக் கழகத்திற்கு வந்து சொற்பொழிவு நிகழ்த்துமாறு அவர் இராமனை அழைத்தனர். இராமனும் அதற்குச் சம்மதித்தனர்.

மில்லிகனின் ஆராய்ச்சிக் கழகம், மிகவும் பேர் பெற்றதாகும். அயின்ஸ்டீன், லாரண்ட்ஸ் முதலிய அழியாப் புகழ் படைத்தவருக்கே அங்கு வந்து சொற்பொழிவு நிகழ்த்தும் உரிமையளிக்கப்படும். அவ்வுரிமையை இராமனும் பெற்றார் என்பது குறிக்கத்தக்கதே.

பல கணித விற்பன்னர்களுடன் இராமன் கானடா முழுதும் சுற்றிப் பார்த்துவரச் சென்றார். பனிக்காலத்துக் கானடாவின் தோற்றத்தை எவ்வாறு எடுத்துரைப்பது! வானளாவி நின்ற இமயத்திற்குக் கால் வலிக்க, அது தன் காலை நீட்டிப் படுத்துறங்கக் கானடாவுக்குச் சென்றது என்று ஒருவாறு புனைந்துதான் கூற முடியும். பாறையாயுறைந்த பனிக்கட்டிகளின்மேல் பகலவன் கிரணங்கள் வீசுந்தோறும் பளீர் பளீரென்று பல நிறங்கள் மின்னும் காட்சி, "வைரமான ஒரு

1. Robert Andrew Millikan (Nobel Prize 19.) 2. Pasadena

சிறு கரியைப் பரிந்து போற்றும் அறிவிலிகாள்! நிலமகள் முகத்தினுக்கு அழகு செய்யும் என் அழகை நீங்கள் எவ்வாறு அறிய வல்லீர்கள்!" என்று பரிகசிப்பதையொக்கும்.

இராமன் கானடாவிலிருந்து புறப்பட்டு, அமெரிக்க ஐக்கிய நாடு, நார்வே, ஸ்வீடன், டென் மார்க்கு, ஜெர்மனி, பிரான்சு முதலிய பல தேசங் களுக்கும் சென்ருர். ஆங்காங்கே நடந்த "விஞ்ஞா னப் புலவர் மகாநாடுக"ளின்[1] விவாதங்களிலெல் லாம்[2] இராமன் தலைசிறந்து விளங்கினர். இது காரணமாக இவர், 'மைக்கேல்சன்'[3] 'ஸீமன்'[4] 'பாப்ரே'[5] 'ஸர் வில்லியம் பிராகு'[6] 'ரூதர்போர்டு பிரபு.'[7] 'நீல்ஸ் போர்'[8] 'ஆர்ஹீனியஸ்'[9] முதலிய பல பேரறிஞர்களின் நன்மதிப்பையும் பெற்ருர்.

மேலே குறித்துள்ளார் அனைவரும் நோபெல் பரிசு பெற்றவர்; என்றும் அழியாப் புகழும் படைத்தவர். இத்தகைய அறிஞரைச் சந்தித்து நேர்முகமாக இவர்தம் ஆராய்ச்சி நிலையை அறியும் பாக்கியத்தையும், இவர்களே கண்டு போற்றத் தக்க பேரறிவையும் இராமன் பெற்றவர் என்று குறிப்பதற்கென்றே நாம் மேனுட்டுப் பெயர்களில் பலவற்றைத் தமிழாக்கத் துணிந்தோம்.

---

1. Conference of Scientists
2. Discussions
3. Michaelson
4. Zeeman
5. Fabray
6. Sir William Bragg
7. Lord Rutherford
8. Niels Bohr
9. Arrhenius

பூப்பிரதட்சணத்தினல் இராமனின் அறிவும் அனுபவமும் முதிர்ந்தன. இராமன் என்னும் மலரும் அலர்ந்தது ; அதன் நறுமணம் நாற்புறமும் சென்று பரவியது ; ஸ்வீடனிலிருந்த நோபெல் பரிசு குழுவினரும், "இந்நறுமணம் பரப்பும் மலர் எங்குளது ?" என்று தேட ஆரம்பித்தனர்.

* * *

'இராமன் நிகழ்ச்சி'[1] என்னும் நூதனத்தைக் கண்டு பிடித்ததற்காகச் சந்திர சேகர வேங்கடராமனவர்கள் 1930-ஆம் ஆண்டில் நோபெல் பரிசு அளிக்கப்பட்டார்.

இச்சிறு நூலை எக்காரணத்தினலும் பௌதிக விளக்க நூலாக்கிவிடுவதில்லை என்ற பிடிவாதமே, நாம் 'இராமன் நிகழ்ச்சி'யைப்பற்றிப் பின் வருமாறு சுருக்கிக் கூறுவதற்குக் காரணம் என்பதைப் பௌதிக அறிஞர்கள் கவனிப்பார்களாக.

கடல் நீரின் நீல நிறத்தினைப் பார்க்கும்போது, "கடலே, இந்நிறத்தை நீ எங்குப் பெற்ருய் ?" என்று கேட்டு விடையறிய விரும்பாதவர் யார் ?

கடல் நீரின் நீல நிறமும் இராமனுள்ளத்தை இளமையிலேயே கவர்ந்தது ; 'விடை கண்டால் அன்றி விடேன் !' என்ற இவருக்கு அது வாய் திறந்து விடையுமளித்தது. அது பின் வருமாறு :—

நீருக்கு நிறமில்லைதான் ; ஆனல், சூரிய ஒளி நீரிற் பாயும்போது, நீர் ஒரு குறித்த நிறத்தை அடைகிறது. இதற்குக் காரணம் 'ஒளிச் சிதறல்'[2]

1. Raman Effect 2. Scattering of light

என்னும் விளைவுதான். நீரில் உள்ள கூட்டணுக்கள்[1] சூரிய ஒளியைச் சிதறச் செய்கின்றன ; ஒரு குறித்த நிறத்தை மட்டும் அப்போது ஏற்கின்றன.

மேற்கூறிய உண்மையைக் கண்டறிந்ததிலிருந்து, இராமன் 'ஒளிச் சிதறலை'ப்பற்றித் தீவிரமாய் ஆராய் வாரானார். அப்போதுதான் இவர் ஒரு பெரு நிகழ்ச்சி யைக் கண்டார். அதுவே 'இராமன் நிகழ்ச்சி' ஆகும். அது பின் வருமாறு:—

குறித்த பண்புகளையுடைய ஒரே வகைக் கிர ணங்களை[2] இராமன் ஒரு குறித்த திராவகத்தினுள் (உ-ம். பென்ஸீன்)[3] செலுத்தினார்; திராவகத்தி னின்று வெளிக் கிளம்பிய கிரணங்களைச் சோதித் தார். அவை மாறுபாடடைந்து காணப்பட்டன. இம்மாறுபாட்டுக்குக் காரணம், அத்திராவகத்தி லிருந்த கூட்டணுக்களேயாகும். அவைகளே, திராவகத்தினுள் புகுந்த கிரணங்களைச் சிதற அடித்து, கிரணங்களின் பண்புகளையும் மாற்றி விட்டன. ஆகவே, இதுவும் ஒளிச் சிதறலேயாகும்; இதுவே இராமன் நிகழ்ச்சியுமாகும்.

குறித்த விதமாய் அமைக்கப்பட்ட கூட்டணு, குறித்த பண்புகளையுடைய கிரணத்தைத் தன் அமைப்புக்கு ஏற்றவாறு, குறித்த விதமாய்ச் சிதற அடித்து, குறித்த மாறுபாட்டை அக்கிரணங்களில் ஏற்படுத்துகின்றது என்பதும் யாவராலும் குறிக்கப் பட வேண்டும்!

ஏனெனில், இதுவே, 'இராமன் நிகழ்ச்சி'யின் முக்கியத்தை விளக்குகிறது. இரசாயன ஆராய்ச்

1. Molecules 2. Light of specific wave length 3. Benzene

சிக்கே இது பெரிய ஊன்றுகோலுமாகும். எவ்வாறெனில், குறித்த பண்புகளையுடைய ஒரே வகைக் கிரணங்களினால் ஏற்பட்ட குறித்த மாறுபாட்டைக்கொண்டு திராவகத்திலுள்ள கூட்டணு எத்தகைய அமைப்பைப் பெற்றுள்ளது என்பதைக் கண்டறிய முடியும்.

இது காரணம் பற்றியே 'இராமன் நிகழ்ச்சி' உலகெங்கும் பரபரப்பை ஏற்படுத்தியது; இரசாயன சாஸ்திரிகள், 'கூட்டணுக்களின் அமைப்பு இனி உள்ளங்கை நெல்லிக்கனிதான்!' என்று மகிழ்ந்தார்கள். சாதனமில்லாமல் தவித்த ஆராய்ச்சியாளரோ, இவ்வற்புதச் சாதனத்தைக்கொண்டு மீண்டும் ஆராய்ச்சி துவக்கினர். கற்பனையை அல்லாது புதியதொரு 'நிகழ்ச்சியையும்' காணாது தவித்த பௌதிக அறிஞரும், 'இராமன் நிகழ்ச்சி' களைக்கொண்டு, தம் கற்பனைகளைச்[1] சீர்திருத்த ஆரம்பித்தனர்.

இராமன் நிகழ்ச்சியைப் பற்றி மேனாடுகளில் மட்டும் 1700 ஆராய்ச்சியுரைகளுக்கு அதிகமாக வெளி வந்திருக்கின்றன என்பதே அது பௌதிகத்தின் பெரு நிகழ்ச்சிகளில் ஒன்றாகும் என்பதனை அறிவிக்கும்.

இராமன் பௌதிகத்தின் எல்லாத் துறைகளிலும் ஈடுபட்டவராவர். வாயுப் பொருள்களின் காந்த சக்தி,[2] கீத வாத்தியங்களின் தொனித் தத்துவம்,[3] செவிக்கெட்டாத தொனி விளக்கம்[4] முத

1. Theories and hypotheses 2. Magnetic properties of gases
3. Theory of Musical Instruments 4. Ultra-sonics

லிய பல துறைகளில் இவர் விசேஷ ஆராய்ச்சிகளை வெளியிட்டிருக்கின்றார்; கடைசியாகச் சொன்ன துறையில் இவர் தற்காலத்தில் வெளியிட்டு வரும் உண்மைகள், மிகவும் முக்கியமானவை என்று யாவராலும் கருதப்படுகின்றன. இராமன் மறு முறையும் பௌதிகத்திற்கென்றே நோபெல் பரிசு அளிக்கப்பட்டாலும், அறிஞர்கள் ஆச்சரியம் அடையமாட்டார்கள். ஆகவே, ஒரு குறித்த துறையில் மட்டுமே இராமன் சிறந்தவர் என்று சிலர் கூறி வருவது ஒரு சிறிதும் ஒவ்வாததாகும்.

இராமனின் ஆராய்ச்சி முறையே தனித்தது. இராமன் பௌதிக அறிவு வளர்ச்சிக்காகக் கடமைப்பட்டது இராமனுக்கே; ஆதலால், இவர் சடுதியில் உண்மையைக் கண்டறியும் கூரிய அறிவினராவர்; 'இதில் உண்மை விளங்கியே தீரும்,' என்ற இவரது திட அறிவே, மிகவும் அற்பமான சாதனங்களைக்கொண்டு, பெரு நிகழ்ச்சியைக் கண்டு பிடிக்க ஏதுவாயிற்று.

இராமனின் தளராத ஊக்கத்தினைக் கண்டு ஒருவரும் பொறாமைப்படாமலிருக்க முடியாது; இடைவிடாத மனக்கிளர்ச்சியுடன் இவர் ஆராய்ச்சியில் ஈடுபடுவதைக் கண்டு இளைஞரும் வெட்கித் தலை குனிவர்.

> " நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
> மேற்சென்று இடித்தற் பொருட்டு."

என்பதனைக் கடைப்பிடித்து, இவர் உண்மையைக் கூறுந்தோறும், இனிய பொய்யுரைகளால்

செவிடுபட்ட செவிகளுக்கு நோய் காண்பதுண்டு; அது கேளாத்தனத்தை நீக்க வந்தநோயே என்பதனை அறிந்தவரே இராமனையும் அறிந்தவராவர்.

இராமனுக்குத் தம் தாய்நாட்டின்மேலிருக்கும் அன்பை இன்னும் பலர் அறியவில்லை என்பது வருந்தத் தக்கதாகும். "அறிவை வளர்ப்பவனும், இளைஞரை ஆராய்ச்சித் துறையில், 'எவருக்கும் இவர் பிற்பட்டவரல்லர்,' என்ற முறையில் தேர்ச்சி செய்விப்பவனும் தன் ஜன்ம பூமிக்கு மிகவும் மேலான தொண்டு ஆற்றுபவனேயாவன்," என்பது பலருக்குப் புலப்படுவதில்லை. வெற்றுரை மொழிந்து, வெளிவேடம் பூண்டு, தொண்டரென்னும் நாமமும் உடல் முழுதும் தீட்டி வருபவரே தொண்டர் என்னும் இடங்களிலெல்லாம் இராமன் தொண்டரேயல்லர் என்பது உண்மைதான்!

'மேனாட்டுக்குச் செல்லாமலே நம் நாட்டு இளைஞர், சாஸ்திரப் பயிற்சியில் முதன்மை பெறவேண்டும்,' என்னும் இவரது உள்ளக் கருத்தினை இவர் பிரசங்கங்கள் ஒவ்வொன்றிலும் காணலாம்; முப்பது வருஷங்களுக்கு மேலாகவே, இவர், அடக்கத்தோடு பெரு முயற்சி செய்து வருவதைச் சிறிது நினைப்பவரும் இவருக்கு இந்தியாவினிடத்துள்ள பேரபிமானத்தைக் காண முடியும். ஆனால், 'காணேம்!' என்பவருக்குக் கண்ணும், 'கேளோம்,' என்பவருக்குச் செவியும் இருந்தும், அவை என்ன உண்மையைத் தெரிவிக்கக் கூடும்!

*　　*　　*

இத்தகைய பேரறிஞருக்கு மேனாடுகளிலுள்ள பல சர்வ கலாசாலைகள் பட்டங்களும் பதக்கங்களும்[1] அளித்தது ஆச்சரியமாகாது. கி. பி. 1929-ஆம் ஆண்டில், இராமன் 'ஸர்'[2] பட்டம் அளிக்கப் பட்டார். கல்கத்தாச் சர்வ கலாசாலையில் பதினைந் தாண்டுகள் இருந்த பின், கி. பி. 1933-ஆம் ஆண் டில், இவர் பெங்களூர் ஆராய்ச்சிக் கழகத்திற்குச் தலைவருமானார்.

இராமன் பெங்களூர் வந்த பிறகு, அவ்வாராய்ச் சிக் கழகம், பௌதிகத்தில் இந்தியாவில் முதன்மை பெற்று விளங்குகிறது. மாதந்தோறும், அக்கழகத் தின் ஆராய்ச்சியுரைகளை மேனாட்டார் ஆவலுடன் படித்து வருகின்றனர்.

பிறரைச் சேவித்துப் பொருளீட்டி முன்னேறு வதில் விருப்பமற்றுப் பௌதிக ஆராய்ச்சியிலேயே ஈடுபட்ட இளைஞர்களுக்குப் பெங்களூரே முக்தி ஸ்தலமாயிருப்பது. அங்குள்ள இராமனென்னும் மூர்த்தி விசேஷத்தாலேதான். "ஆராய்ச்சியே எனது தொழில்," என்று அறிந்தும், உத்தியோக வலையில் சிக்கித் தவிப்பவருக்கும், இராமனே 'நன்னம்பிக்கை முனை'[3] ஆவர்.

தம் மனம் நாடியது எதனை என்றறிந்ததும், தம்மைக் கட்டிய தளைகள் அனைத்தையும் களைந் தெறிந்து, பொன், புகழ், பதவி முதலியவற்றுள் ஒன்றிலும் நாட்டமில்லாமல், ஆராய்ச்சியிலேயே

1. Medals 2. Sir 3. Cape of good hope

தம் வாணாள் முழுதும் கழித்த பெரியாருள் இராமனும் ஒருவராவர்.

இந்திய மக்கள் சாஸ்திர ஆராய்ச்சியில் முன்னேறும்பொருட்டும், உலகு எங்கும் பௌதிகம் வளரும்பொருட்டுமே பல அரிய குணங்களும் பேரறிவும் இராமனென்னும் உருப்பெற்று நிலவி வருகின்றன என்பதே நமது முடிவுரையாகும்.





ஸர். வில்லியம் இராம்ஸே

## 5. ஸர் வில்லியம் ராம்ஸே[1]

## (1852—1916)

'எக்ஸ்-ரே'[2] என்னும் அரிய சாதனம் கண்டு பிடிக்கப்பட்டதையும், ஜட வாயுக்கள்[3] என்னும் ஒரு வகை வாயுப் பொருள்கள் உண்டு என்று நிரூபிக்கப்பட்டுக் கடைசியில் தனித்தெடுக்கப்பட்டதையுமே, 19-ஆம் நூற்றாண்டின் இறுதியில், விஞ்ஞானத் துறையில் நடந்த விசேட சம்பவங்களாகக் குறிக்க வேண்டும். ஏனெனில், "யாம் கண்டு பிடிக்காதது இனி எதுவும் இன்று," என்று பலர் இறுமாந்திருந்தது அக்காலமாகும். இப்புல்லறிவாளரின் அகமகிழ்ச்சியைச் சிறிது குலைப்பதற்கென்றே, இயற்கை அன்னை, தன் பேருண்மைகளில் இரண்டினை வெளிக்காட்டினள் போலும்!

'இராண்ட்ஜென்'[4] என்பவர், எக்ஸ்-ரேயைத் தற்செயலாய்க் கண்டு பிடித்ததைக்காட்டிலும், இராம்ஸே என்னும் அறிஞர், பெருமுயற்சி செய்து ஜடவாயுக்களைத் தனித்துத் தயாரித்ததையே சிறப்பித்துக் கூற வேண்டும்.

---

1. Sir William Ramsay
2. X-Ray
3. Inert gases
4. Rontgen

ஏனெனில், ஜடவாயுக்கள் என்னும் ஒரு வகை வாயுப்பொருள்கள் இருக்கக்கூடும் என்றே ஒருவரும் நம்பவில்லை. ஆகவே, 1892-ஆம் ஆண்டில் 'இராலி பிரபு'[1] என்னும் பௌதிக நிபுணர், காற்றில் இதுவரை உண்டென்று நம்பி வந்த வாயுப் பொருள்களைத் தவிர, வேறு சில வாயுப்பொருள்களும் இருக்கலாம் என்பதற்கு ஒரு நுட்பமான 'பிரமாண'[2]த்தை எடுத்துக்காட்டியபோது, அன்னாரின் முதுமொழியைச் செவி மடுத்தவர் மிகச் சிலரே ஆவர்.

சாஸ்திர ஆராய்ச்சித் துறையில், பேரறிஞர்கட்கும் ஏனையோருக்குமுள்ள வேற்றுமை இம் மனப்பான்மைதான், பேரறிஞர்கள்,

"தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே." —நறுந்தொகை

என்னும் கருத்தினை ஏற்றவர்கள்; தினைத்துணையே, ஒரு சிறு புலன் இருந்த போதிலும், அதனை அற்பமென்று புறக்கணிக்க மாட்டார்கள்; எளிய பிரமாணமென்று, அதனை எள்ளித் தள்ளார்கள். ஒரு நுட்பமான முரண்பாட்டைத்[3] தீவிரமாய் ஆராய்வதிலேயே ,யாவரும் பிரமிக்கும் பேருண்மைகள் துலங்குகின்றன என்னும் தீவிர அறிவு அவர்

1. Lord Rayleigh
2. Experimental evidence
3. Small discrepency

களுக்குண்டு. ஏனையரோ, 'சிறு துளி பெருவெள்ளம்,' என்பதனை மறந்தவரானதால், கடலினுக்கு ஓரணையிட்டு நதியினை உற்பத்தி செய்ய முயல்பவராவர்!

இராலி பிரபு எடுத்துரைத்த பிரமாணம் மிகவும் நுண்ணியதே. காற்றிலிருந்து தனித்தெடுக்கப்பட்ட நைட்ரஜன்,[1] இரசாயன முறைகளால் தயாரிக்கப்பட்ட[2] நைட்ரஜனைக்காட்டிலும் ஆயிரத்தில் ஒரு பங்கு அதிக கனமுள்ளதென்பது தான் இராலி பிரபுவின் அனுமானத்திற்கு ஆதாரமாயிருந்த பிரமாணமாகும்.

இதனை அற்பமென்றார் சிலர்; பிழையேயென்றார் பலர். "காற்றிலுள்ள பழம்பேய்களைத் தவிர, சில புதுப்பேய்களும் உண்டாமே! அவற்றை நீர் கண்டதுண்டோ?" என்று ஏளனம் செய்தனர் மற்றும் சிலர்.

"புலமிக் கவரைப் புலமை தெரிதல்
புலமிக் கவர்க்கே புலனும்;—நலமிக்க
பூம்புன லூர! பொதுமக்கட் காகாதே
பாம்பறியும் பாம்பின கால்."
—பழமொழி

என்னும் கருத்துக்கிணங்க, ஏனையோர் நகைத்துக் கொண்டிருக்கும்போது, இராலி பிரபுவின் தீவிர அறிவை மெச்சி, "இச்சிறு கன வேறுபாட்டைச் செய்யும் பொருள் யாது?" என்னும் ஆராய்ச்சியில் உடனே ஈடுபட்டவர் ஒருவரேயாவர். அவரே வில்லியம் ராம்ஸே என்னும் இலண்டன் சர்வகலாசாலையின் இரசாயன அறிஞர்.

1. Nitrogen 2. Preparation by chemical decomposition

இராம்ஸே, 1852-ஆம் ஆண்டில் **வில்லியம்** என்னும் அறிஞருக்கும், 'இராபர்ட்ஸன்' என்னும் மாது சிரோமணிக்கும், நெடுநாட்கழித்துப் பிறந்த அருந்தவப் புதல்வராவர். செல்வரிடையே பிறந்து, சீரிய பெற்றோரும் வாய்க்கப்பெற்ற இராம்ஸே யின் இளமை, இனிதாகவே கழிந்தது. அரை குறையாய்க் கற்றதையும் ஆர்வமில்லாமலே போதித்து வந்த அக்காலத்து ஆரம்பப் பாடசாலை உபாத்தியாயருள் ஒருவரும் இளமையிலேயே இவர் பேரறிவைக் குலைக்க முன்வரவில்லை என்பது குறிக்கத் தக்கது. பள்ளிக்குச் சென்று இவர் கல்வி பயிலவில்லை; பிரத்தியேகமான உபாத்தியாயரிட மிருந்தே கல்வி பயின்றனர்.

இளமையிலிருந்தே இராம்ஸேயுக்குச் சங்கீ தத்தில் அபிமானம் உண்டு; சீழ்க்கை அடிப்பதிலோ அபாரத் தேர்ச்சி; இவரைச் சாதுவான பிள்ளை என்று சொல்ல முடியாது. சிறு பிள்ளை; கல்லைக் கண்டார்; கண்ணாடி ஜன்னலையும் கண்டார்; கல் லும் பறந்தது; ஜன்னலும் விண்டது. அச்சமயங் களில் சிறு பிள்ளைகளுக்கு வழக்கமாய்க் கிடைக்கும் மரியாதைகளும் இராம்ஸேயுக்குக் கிடைத்தன. மாதா கோவில்களில், குருமார் இறைவரின் மகிமை யைப்பற்றிப் பிரசங்கம் செய்துகொண்டிருக்கும் போதுதான், இராம்ஸே, பிரெஞ்சு, ஜெர்மன் முத லிய பாஷைகளின் சுவையை அனுபவித்துக்கொண் டிருப்பது வழக்கம். அந்நிய பாஷைகளை அரைக் கணத்தில் கிரகிக்கும் அபார சக்தி இராம்ஸேயுக்கு

இளமையிலிருந்தே உண்டு. இவர் பின்னாளில் இந்தியாவுக்கு வந்தபோது, பாரஸீகம், அராபி, ஹிந்துஸ்தானி முதலிய பாஷைகளைத் தவறின்றி உபயோகித்ததைக் கண்டு ஆச்சரியமடையாதவர் ஒருவரும் இலர். அந்நிய பாஷைகளில் தேர்ச்சி பெறும் சக்தியைக்கண்டே அயலவரும் இராம்ஸேயை விரும்பினர்.

ஆரம்பக் கல்வி முடிந்ததும் இராம்ஸே 1863-ஆம் ஆண்டில் கிளாஸ்கோ கல்விக்கழகத்தில்[1] சேர்ந்தார்; அங்கு ஆறு வருஷங்களைக் கஷ்டத்துடன் கழித்தாரென்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில், பண்டைய பாஷைகளான இலத்தீன், கிரீக்கு முதலியவைகளில் இவர் மனம் செல்லவில்லை. தம் மைந்தருக்கு விஞ்ஞானத்திலிருக்கும் விருப்பத்தை அறியாத தாயார், இவர் பண்டைய பாஷைகளைக் கற்று, கடைசியில் வைதிகத் தொழிலிற்[2] புகுவார் என்றே எண்ணியிருந்தார்.

அவ்வெண்ணம் நிறைவேறாமலே போயிற்று. விருப்பமில்லாப் பாடங்களை நெட்டுருப் போட்டுப் பரிசுகள் பெறுவதில் இராம்ஸேயின் மனம் செல்லவில்லை. வெடி மருந்துகள், திராவகங்கள் முதலியவற்றைக்கொண்டு, யாவரும் அறியாமல், இராம்ஸே ஆராய்ச்சி செய்யத் தலைப்பட்டார்; கண்ணாடியில் கருவிகளை நுட்பமாயும் செம்மையாயும் செய்யும் கைத்திறனையும் வெகு சீக்கிரத்தில் பெற்றார்.

இம்முறையிலேதான், இவருக்கும், 'பைப்'[3]

1. Glasgow Academy 2. Clergy 3. Fife

என்ற மேல் வகுப்பு மாணக்கர் ஒருவருக்கும் நட்பு ஏற்பட்டது. டைப், இராம்ஸே கண்ணுடிக் கருவிகளைச் செய்யும் தேர்ச்சியைக் கண்டும், இரசாயனத்தில் இவருக்கிருந்த ஊக்கத்தைக் கண்டும் இவர்பால் நட்புக்கொண்டார்.

இதற்குப் பிறகு, இவ்விருவரும் சேர்ந்து பரிசோதனைகளைச் செவ்வனே நடத்தத் தலைப்பட்டனர். பாலியத்தில் இவர்களுக்கிடையில் ஏற்பட்ட நட்பும், வாழ்நாள் முழுதும் நீடித்தது.

இராம்ஸே தம் பாடங்களில் இச்சை வைக்கவில்லை என்றாலும், ஒரு வகுப்பிலாவது சோர்வடையவில்லை. அடிப்படைக்கல்வி முடிந்ததும், 1869-ஆம் ஆண்டில் இராம்ஸே உயர்தரக் கல்வி கற்க ஆரம்பித்தார்.

தர்க்க நூல்[1], கணித நூல், பௌதிக நூல் முதலிய பல நூல்களையும், இராம்ஸே ஆர்வத்துடன் பயின்றார். இந்நாளிலேயே, இவர் டாட்லாக்கு[2] என்பவரின் இரசாயன சாலையில்[3] ஓழிந்த நேரத்தில் சென்று ஆராய்ச்சி செய்து வரத் தலைப்பட்டார்.

1870-ஆம் ஆண்டில் சர்வ கலசாலைப் பட்டம் பெற்றும் இராம்ஸே தம் படிப்பு முடிந்ததென்று கருதவில்லை. இரசாயன நூலில் தேர்ச்சி பெறுவதற்காக இவர் ஜெர்மனி சென்றார்

அக்காலத்திலிருந்த ஜெர்மனியின் ஆராய்ச்சிக் கழகங்கள், இரசாயன ஆராய்ச்சியில், சிறந்து

1. Logic 2. Tatlock 3. Chemical Laboratory

விளங்கின. இராம்ஸேயும், 'டியூபின்ஜென்'[1] என்னும் இடத்தில் உள்ள ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்தார்; 'பிட்டிகு'[2] என்னும் ஆசிரியரின்கீழ், ஆராய்ச்சியும் செய்து வந்தார்.

தாம் ஜெர்மனியில் பெற்ற பயிற்சி மிகவும் உயர்வானது என்று பிற்காலத்தில் இவர் அடிக்கடி கூறுவதுண்டு. இவர் ஆசிரியரோ, 'இராம்ஸே என் மாணுக்கரனைவருள்ளும் முதல்வன்,' என்று பல முறை எழுதியிருக்கிறுர்.

இராம்ஸே ஜெர்மனியில் வசித்த போது, ஜெர் மானிய பாஷையைப் பேச வல்லுநராயிருந்ததால், அங்குள்ள அனைவருக்கும் ஆப்தரானுர்.

1872-ஆம் ஆண்டில் இராம்ஸே தம் ஆராய்ச் சிக் கட்டுரையை[3] வெளியிட்டனர்; 'ஆராய்ச்சிப் பேரறிஞர்'[4] என்னும் ஆராய்ச்சிப் பட்டத்தையும் பெற்று, இங்கிலாந்துக்குத் திரும்பினுர். உற்றுழி உதவிய ஆசிரியரையும், அங்குள்ள மற்றவரையும் இராம்ஸே தம் வாணுள் முழுதும் மறந்தாரில்லை.

ஜெர்மனியிலிருந்து திரும்பி வந்ததுமே, இராம் ஸே கிளாஸ்கோவிலுள்ள **ஆண்டர்ஸன் கல்லூரி யில்**[5] ஓர் உதவி ஆசிரியராக நியமிக்கப்பட்டார். மாணுக்கருக்குப் போதிக்கும் பதவி இவருக்குச் சிறிது காலத்திற்குப் பிறகுதான் ஏற்பட்டது. ஆரம்பத்தில், இவர், மாணுக்கர் பரிசோதனை செய் யும்போது மட்டும் அவருக்கு உதவியளித்து வந்

1. Tubingen 2. Fittig 3. Thesis 4. Doctorate
5. Anderson College

தார். ஒழிந்த நேரத்தில் இவர் கல்லூரியில் ஆராய்ச்சி செய்துகொண்டே இருப்பார். இது காரணமாய், இவர், '**பிரிடீன்**'[1] என்னும் பண்டத்தைப் புது முறையில் தயாரிக்க முடிந்தது. இவர் தமது நூதன முறையை 1877-ஆம் ஆண்டில் வெளியிடவே, இவர் புகழ் பல இடங்களிலும் சென்று பரவ ஆரம்பித்தது. ஆண்டர்ஸன் கல்லூரியில் இவர் எட்டு வருஷம் இருந்தார்.

1880-ஆம் ஆண்டில், இவர் **பிரிஸ்டல் சர்வ கலாசாலையில்** தலைமைப் போதகாசிரியராக நியமிக்கப்பட்டார். இருபத்தெட்டு வயதில், சர்வ கலாசாலையில், இரசாயனத் துறையில் தலைமைப் பதவியைப் பெறுவது இராம்ஸே போன்றவர்களின் வாழ்நாளில் ஏற்படும் சம்பவமேயன்றி, என்றும் வழக்கமாய் நடக்கும் சம்பவமன்று.

இராம்ஸேயின் போதனுமுறை ஒரு தனி விசேஷத்தைப் பெற்றிருந்தது. இவருக்கு இரசாயனத்திலிருந்த ஆர்வம், மாணுக்கரையும் வசப்படுத்திற்று. நுணுக்கமான விஷயங்களையும் எளிய முறையில் தெளிவாய் எடுத்துரைக்கும் சொல் வன்மை இவருக்கு உடன் பிறந்ததாய் இருந்தது; அத்துடன் குதூகலமான சுபாவமும், இன்மொழி கூறலும், மாணுக்கரிடத்து அன்பும் ஆதரவும் உடைய இராம்ஸேயை அனைவரும் தம் தெய்வமெனவே போற்றி வந்தனர்.

ஆகவே, பிரிஸ்டலுக்கு வந்து ஓராண்டுக்குள்

1. Pyridene 2. Bristol University

(1881) இராம்ஸே கல்லூரித் தலைவராக[1] நியமிக்கப்பட்டது ஆச்சரியத்தை விளைக்காது. அக்காலத்திலேதான் இராம்ஸே ஒரு சிறந்த நங்கையைக் காதலித்துக் கலியாணமும் செய்துகொண்டார்.

இராம்ஸே கல்லூரித் தலைவராயிருக்கையில், இரசாயன விளைவுகளுக்கும் பௌதிக விதிகளுக்கும்[2] உள்ள சம்பந்தங்களைப்பற்றி ஆராய்ந்து, பல ஆராய்ச்சியுரைகளையும் வெளியிட்டார். இவரது ஆழ்ந்த அறிவினை மற்றக் கல்லூரிகளிலிருந்த அறிஞர்களும் அறிந்தார்கள். இதனால், இவர் பிரிஸ்டலிலிருந்து இலண்டன் முதலிய இடங்களுக்குப் போவதும், அங்குள்ள கல்லூரிகளில் அனைவரும் கேட்டுப் போற்றும்படி பிரசங்கங்கள் செய்வதும் ஏற்பட்டன. இராம்ஸே என்ற பெயர் மறக்க முடியாதது என்று அறிஞர்களும் நினைக்க ஆரம்பித்தார்கள்.

இராம்ஸே பிரசித்தி பெற்றதற்கு மற்றொரு காரணமும் உண்டு: அக்காலத்தில், கல்லூரிகள் சிலவே இருந்தன. அவைகளுக்கு அரசாங்கம் உதவி நிதி[3] அளிப்பதுமில்லை. ஆகவே, அவை, தம் தொழிலைச் சரிவர நடத்திவர முடியாமல் தத்தளித்துக்கொண்டிருந்தன. இந்நிலை மாற வேண்டுமென்று 1870-ஆம் ஆண்டு முதல் ஒரு கிளர்ச்சி இருந்து வந்தது. 1885-ஆம் ஆண்டில், இக்கிளர்ச்சி பலமடைந்து, பல கல்லூரித் தலைவர்களும் இதில்

---

1. Principal 2. Physical laws governing chemical reactions
3. Grant

கலந்துகொண்டார்கள். அவர்களுள் இராம்ஸே யும் ஒருவர். கல்லூரிகளிடம் அரசாங்கம் அதிக கருணை காட்ட வேண்டுமென்றும், அவற்றிற்குப் பண உதவி செய்ய வேண்டுமென்றும் தீர்மானங் கள் செய்யப்பட்ட போது, இராம்ஸே யாவருக்கும் அறிமுகமானார்.

கல்லூரித் தலைவர்களின் பெருமுயற்சி காரண மாக அரசாங்கமும் வருஷத்திற்கு 15,000 பவுன் கல்லூரிகளுக்கு உதவி நிதி அளிக்க முன் வந்தது. கல்லூரிகளுக்கும் 1887-ஆம் ஆண்டில் நல்ல காலம் பிறந்தது. இராம்ஸேயுக்கும் நன்மை ஏற்பட்ட தென்று சொல்ல வேண்டும்

எவ்வாறெனில், 1887-ஆம் ஆண்டில், இலண் டன் சர்வ கலாசாலையில்[1] இரசாயனத் தலைமைப் பேராசிரியர்[2] பதவி காலியானபோது, அந்தப் பத விக்கு, பிரிஸ்டலிலிருந்த இராம்ஸேயே ஏகமன மாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பிரிஸ்டலில் கல்லூரித் தலைவராயிருந்த இராம் ஸே, பேர் போன இலண்டன் சர்வ கலாசாலையில் இரசாயனத் தலைமைப் பேராசிரியர் ஆனார். 1887-ஆம் ஆண்டு முதல், 1912-ஆம் ஆண்டு வரை யில் இவர் அப்பதவியிலேயே இருந்து வந்தனர். இவ்விருபத்தைந்து வருஷங்களில் இவர் செய்து வந்த ஆராய்ச்சிகளே முக்கியமானவை எனக் குறிப்பிடத் தக்கனவாகும்.

---

1. London University 2. Professor of Chemstiry

## இராம்ஸேயும் ஜட வாயுக்களும் :

அதுவரை உண்டு என்று ஒருவரும் நம்பாத சில வாயுப் பொருள்களும் காற்றில் உண்டு என்று இராலி பிரபு 1892-ஆம் ஆண்டில் கூறியவுடன், இராம்ஸே, இராலி பிரபுவைச் சந்தித்தார். பௌதிக நிபுணரும் இரசாயனப் பேராசிரியரும் ஒருவரை ஒருவர் அறிந்தனர்; அதன் பிறகு இருவரும் சேர்ந்தே ஜட வாயுக்களின் ஆராய்ச்சியில் ஒத்து உழைத்தனர்.

காற்றிலிருந்து நைட்ரஜனைப் பிரித்து எடுப்பதை இராலி பிரபுவும், இரசாயன முறைகளால் நைட்ரஜனைத் தயாரிப்பதை இராம்ஸேயும் மேற்கொண்டனர். பிறகு இவ்விருவரும் சேர்ந்து, ஒவ்வொன்றின் கனத்தளவையும்[1] மிக நுட்பமாய்த் தீர்மானித்தனர்; கனத்தளவில் ஏற்றத் தாழ்வு உண்டு என்றும் கண்டனர்.

இவ்வேற்றத்தாழ்வுக்குக் காரணமான வாயுப் பொருள், காற்றிலிருந்து பிரித்து எடுக்கப்பட்ட நைட்ரஜனில் கலந்துள்ளதென்றும், பிராண வாயுவின் கனத்தளவை 16 என்று குறித்தால், தாம் நைட்ரஜனில் கலந்ததாய்ச் சொன்ன வாயுப் பொருளின் கனத்தளவை 20 என்று குறிக்க வேண்டி வரும் என்றும் இவர் முடிவு செய்தனர்.

அவ்வாயுப் பொருளும், மிகுந்த முயற்சியோடு சில காலத்திற்குள் தனித்துத் தயாரிக்கப்பட்டது.[2] என்ன ஆச்சரியம்! இவர்கள் எதிர் பார்த்தபடியே,

1. V. Density 2. Isolated

அவ்வாயு 20 என்று குறித்த கனத்தளவையே பெற்றிருந்தது!

அவ்வாயுவே, முதலாவதாகக் கண்டுபிடிக்கப் பட்ட ஜட வாயுவாகும். ஜட வாயுக்கள், பிற பொருள்களுடன் கூடுவதில்லை[1]; நைட்ரஜன், பிராண வாயு, ஹைட்ரஜன் முதலிய வாயுப்பொருள்கள், பிற பொருள்களுடன் கூடும் தன்மையன; அதனுலேதான், இவ்வாயுக்களைக் கண்டு பிடிப்பதும் எளிதாயிருந்தது. ஆனுல், ஜட வாயுக்களைக் கண்டு பிடிப்பதற்கோ, ஆராய்ச்சியில் விடாது கூடும் இராம்ஸே போன்ற அறிஞர்கள் தேவையாயிருந் தார்கள்.

இராலி பிரபுவும் இராம்ஸேயும் சேர்ந்து தனித் தெடுத்த ஜட வாயுவுக்கு 'ஆர்கான்'[2] என்று பெய ரிடப்பட்டது; 20 என்று குறித்த கனத்தளவை அடைய ஆர்கான், 14 என்று குறித்த கன அளவுள்ள நைட்ரஜனைப் பிரித்தெடுத்தபோது, நைட்ரஜனுடன் கலந்திருந்ததாலேதான் காற்றிலிருந்து அதன் கனத் தளவு பதினுன்காயில்லை.

ஜட வாயுக்களில் ஒன்றினைக் கண்டறிந்த இராம்ஸே, 'இன்னும் ஜட வாயுக்கள் உண்டா?' என்று தீவிரமாய் ஆராய்ச்சி செய்வாரானுர். அது வரை ஜடமாயிருந்த ஜட வாயுக்கள், "இராம்ஸே நம்மை இனிக் காணுது விடார்," என்று அறிந்ததும், ஒன்றன் பின் ஒன்ருய் இராம்ஸேயின் அறிவுக்குப் புலனுயின.

1. Chemically inactive (inert) 2. Argon

'கிளவீட்டு'[1] என்னும் ஒரு சுரங்கப் பொருள்[2] உண்டு. அதனைக் கந்தகத் திராவகத்துடன்[3] கொதிப்பித்தவர்கள், நைட்ரஜன் வாயு வெளிக் கிளம்புவதை மட்டும் கண்டார்கள்; ஆனால், நுண்ணியதையும் கூர்ந்து நோக்கும் இராம்ஸேயோ, நைட்ரஜனுடன் (மிகச் சிறிய அளவில்) வெளி வந்த மற்ற இரண்டு வாயுப் பொருள்களையும் கண்டனர்; அவை இரண்டும் ஜட வாயுக்களே; அவைகளில் ஒன்றுதான், நாம் முன்னமே சொன்ன ஆர்கான்; மற்றொன்றோ, அதுவரை எவரும் கண்டு பிடிக்காத 'ஹீலியம்'[4] என்னும் ஜட வாயுவாகும்.

இராம்ஸே ஹீலியத்தைக் கண்டு பிடித்தது மிகவும் முக்கியமானதென்பதைக் கருதியே, சுரங்கப் பொருள்களைச் சரித்திரப் புத்தகத்தில் திராவகங்களோடு கொதிப்பிக்கத் துணிந்தோம்!

ஹீலியம் (கனத்தளவு 2) என்னும் பொருளையும் இறைவன் சிருஷ்டித்திருக்க முடியும் என்பதை அக்காலத்தில் ஒருவரும் மறுக்கவில்லை; ஆனால், அதைப் பூமியில் காண முடியாதென்று சொல்லிவிட்டார்கள். பூமியிலிருந்து 93000000 மைல்களுக்கு அப்பாலுள்ள சூரியனிடத்திலேதான் ஹீலியம் என்னும் பொருள் இருக்க முடியும் என்றும் தீர்மானித்துவிட்டார்கள். அவ்வாறு அறிஞரனைவரும் கனவு கண்டுகொண்டிருக்கையில், இராம்ஸே, பூமியில், இங்கிலாந்து என்னும் சிறு தீவில், இலண்டனில், கிளவீட்டு என்னும் ஒரு

1. Cleveite 2. Mineral 3. Sulphuric acid 4. Helium

சிறு சுரங்கக் கட்டியில், "ஹீலியம் இதோ உளது; யாவரும் காணீர்!" என்று தயாரித்துக் கொடுத்தது சரித்திரமன்று என்றால், சரித்திரமெனப்படுவதுதான் எது?

ஹீலியம் என்னும் மற்றொரு ஜட வாயுவைக் கண்டதும், அறிஞரனைவரும் 'இரண்டு' என்று விரலை மடக்கினர்; அவர்கள் "மூன்று, நான்கு, ஐந்து" என்று விரைவாக விரலை மடக்கும் நேரமும் சில காலத்திற்குள் வந்தது.

வாயு நிலையிலிருக்கும்[1] காற்றைத் திரவ நிலையை[2] அடையும்படி செய்யலாம்; திரவ நிலையை அடைந்த காற்றை இராம்ஸே ஆராய்ந்துகொண்டிருந்தார். அப்போதுதான் அங்கு ஒளிந்துகொண்டிருந்த மற்ற ஜட வாயுக்களெல்லாம், இராம்ஸேயுக்குக் காட்சி அளித்தன.

பேய்களுக்குப் பெயர் வைப்பது என்றால், 'புதுப் பேய்', 'பழம்பேய்' என்றல்லவா பெயர் வைக்க வேண்டியிருக்கிறது! அதே முறையில், இராம்ஸேயும் தம் அறிவுக்குப் புலனான ஜட வாயுக்களுக்கு **'ஒளிந்தவன்'** (கிரிப்டான்)[3] **'புதியவன்'** (நியான்)[4] **'அயலான்'** (ஸெனன்)[5] என்று கிரேக்க பாஷையிலிருந்து அழகாகப் பெயர் வழங்கினர்!

'ஹீலியம், நியான், ஆர்கான், கிரிப்டான், ஸெனன்' என்னும் ஐந்து ஜட வாயுக்களும், ஒரே

1. Gaseous state 2. Liquid state 3. Krypton
4. Neon 5. Xenon

குடும்பத்தைச்[1] சேர்ந்தவையாகும். 'ஜட வாயுக்களின் குடும்பம் சீராயமையவில்லையே!' என்று இரசாயன சாஸ்திரிகள் தவித்ததை இரசாயனத்தைக் கற்றவர் எவரும் அறிவர். இராம்ஸே இவ்வைந்து ஜட வாயுக்களையும் கண்டு பிடித்தார் என்பது, இரசாயன நூல் வருஷந்தோறும் கொண்டாட வேண்டிய பெரிய சம்பவமேயாகும்.

சாஸ்திர ஆராய்ச்சித் துறையில், மலைகளைத் தகர்ப்பதும், மேருவோடு பொருவதும் மிக எளியன; இவ்வாறு தகர்க்கும் மஹா வீரர்களை நாம் 'ஹெர்குலிஸ்'[2] என்றும், 'இருப்புலக்கை' என்றும் வழங்கி வருகிறோம்! ஆனால், அணுவைத் துளைப்பதும், அணுவை நிறுப்பதுமே மிகக் கடினமானவையாகும். இவ்வாறு செய்ய வல்லார்களுக்கு ஒரே பெயர்தானுண்டு. அதுவே, வில்லியம் இராம்ஸே எனப்படுவது.

கண்ணற்றவனைப் புலவர்கள் கமலக் கண்ணன் என்று கூறும் முறையில் நாம் இராம்ஸேயைப் புகழவில்லை என்பது பின் வருவனவற்றிலிருந்து யாவரும் அறிந்துகொள்ளலாம்:

ஒரு கன அங்குலப் பரிமாணத்தில் சுமார் 15650 கன மில்லி மீட்டர்கள்[3] உண்டு. ஒரு கன மில்லி மீட்டரின் பத்தில் ஒரு பங்கு[4] பரிமாணமுள்ள வாயுவை நிறுக்க வேண்டும் என்றால், மலையைத் தகர்க்கும் மஹா வீரர்கள் என்ன செய்யக்

1. Family of elements 2. Herculcs 3. 1 cubic inch = 15650 cubic millimeters (approx.) 4. 1/10 cu. m. m.

கிடக்கின்றது! மலையைப்போல மலைத்துத்தான் மதி மயங்க வேண்டும்.

ஆனால், இராம்ஸே மனம் தளரவில்லை. இச்சிறிய பரிமாணமுள்ள 'நிடான்'[1] என்னும் வாயுவைச் சீராய் நிறுத்தார் என்பது மிக ஆச்சரியமாகும். இவ்வாயுப் பொருள், இரேடியப் பொருள் தானாகவே அழியும்போது[2] ஏற்படும் பொருளாகும். இதன் கனத்தளவை ஒவ்வொருவரும் வெவ்வேறாகத் தீர்மானித்தனர். 87 முதல் 114 வரையில் உள்ள எண்களில், எது நிடானின் உண்மையான கன அளவு எண் என்பதைச் சொல்ல முடியவில்லை; ஏனென்றால், சிறு பரிமாணங்களை நிறுப்பதில் அவர்களுக்குத் தேர்ச்சியில்லை.

இராம்ஸேதான், ஒரு கன மில்லி மீட்டரின் பத்தில் ஒரு பங்குக்கும் குறைவான நிடானை, மயிரினும் சிறிய துவாரமுள்ள கண்ணாடிக் குழாயில்[3] அடைத்து, அதன் நிறையையும் கண்டார். அப்பரிமாணமேயுள்ள அவ்வாயுவின் நிறையை விளக்கிக் கூற வேண்டுமானால், ஒரு ரூபாயை 11000 சரி பாகங்களாகத் தகர்க்க வேண்டும். அவ்வாறு தகர்க்கப்பட்ட ஒரு துண்டின் நிறையை 'மில்லி கிராம்'[4] என்பார்கள். ஒரு மில்லிகிராமின் $\frac{1}{1400}$ பங்கே, அப்பரிமாணமுள்ள வாயுவின் நிறை என்று இராம்ஸே கண்டறிந்தார்; கடைசியாக நிடானின் கனத்தளவு[5] $111\frac{1}{2}$ என்றும் தீர்மானித்

1. Niton 2. Spontaneous disintegration of Radium 3. Thermometer tube 4. One tola weight—11 Gms—11000 milligrams 5. V. Density 111·5 Oxygen 16

தனர். இவர் முடிவுரை கூறி நாற்பது வருஷங்களாகியும், ஒருவராலும் இவர் செய்த முடிவை மாற்ற முடியவில்லை என்பதிலிருந்தே இராம்ஸேயின் உயர்வை அறியலாம். இதை நோபெல் குழுவினர் அறிந்தே, 1904-ஆம் ஆண்டில், இராம்ஸேயுக்கு நோபெல் பரிசை அளித்தனர். பல கல்லூரிப் பட்டங்களும் இவருக்கு அளிக்கப்பட்டன.

### இராம்ஸேயும் கல்வி அபிவிருத்தியும் :

இங்கிலாந்தில் அக்காலத்தில் கல்வி இருந்த நிலையைப்பற்றி இராம்ஸே கூறின ஆழ்ந்த கருத்துக்கள் எக்காலத்துக்கும் எந்நாட்டிற்கும் நன்மையை அளிக்கத் தகுந்தவையாய் இருப்பதால், அவற்றைச் சிறிது ஆராய்வோம்:

ஆரம்பக் கல்வி (அக்காலத்தில்) போதிக்கப்பட்டு வந்த முறைகளை இராம்ஸே கண்டனம் செய்தார். சிறு பிள்ளைகள் கல்வியை ஆரம்பிக்கும்போதே கசடறக் கற்கவேண்டும் என்று இவர் பல முறையும் வற்புறுத்தியுள்ளார். கீழ் வகுப்புக்களில் விஞ்ஞானம் போதிக்கப்படும் கீழ் நிலையைக் காண வல்லார் அனைவரும், இராம்ஸேயின் கருத்துக்கு இணங்க வேண்டுவதுதான். கீழ் வகுப்புக்களில் பௌதிகம், இரசாயனம், உயிர் நூல்[1] முதலிய நூல்களைப் போதிக்க வரும் உபாத்தியாயர்களில் பெரும்பாலார், அந்நூல்களைக் கசடறக் கற்பதேயில்லை; அந்நூல்களைப் பற்றிய ஆராய்ச்சிகள் அவ்வக்காலங்களில் எந்நிலையில் உள்ளன

1. Biology

என்று அறிய விருப்பமுள்ளவராயுமில்லை; சோதனை முறைகளில்[1] தேர்ச்சி பெற்றவராயுமில்லை. "பூமி உருண்டை வடிவமானது," என்று சொல்லும் போது, "எலுமிச்சம்பழத்தையும் அதன்மேல் ஊரும் எறும்பையும் நினைத்துக்கொள்," என்கிறார்கள். சிறுவர்களோ, "சர்க்கரையைக் காணாத போது எறும்பு ஏன் எலுமிச்சம்பழத்தின்மீது ஊர வேண்டும்!" என்று எதையோ நினைத்துக் கொள்கிறார்கள். உபாத்தியாயரும், "பற்பல உதாரணங்களோடு பாடம் மிகவும் நன்றாகவே நடத்தப்பட்டது!" என்று மகிழ்ச்சியுறுகிறார். "பூமி ஏன் உருண்டை வடிவமாய் இருக்கிறது?" என்னும் செவ்வனே அச்சிடப்பட்ட கேள்விக்கு, "எலுமிச்சம்பழத்தின்மேல் எறும்பு ஊர்கிறது. ஆகையால், பூமியும் உருண்டையே," என்று விடை அளிக்கும் பையன் தட்டிக்கொடுக்கப்படுகிறான்; பரிசளிக்கப்படுகிறான்; பாடசாலையின் வருஷக் கொண்டாட்டங்களில் யாவராலும் கை குலுக்கப்படுகிறான்; என்றாலும், தட்டையான பூமியிலேயே வாழ்ந்து வருபவனுமாகின்றான்!

அக்காலத்தில் ஆரம்பக் கல்வி இங்கிலையிலிருக்கக்கண்ட இராம்ஸே, "கல்வியைப் போதிக்க வரும் ஆசிரியர்கள், சிறிதாவது கல்வியைப் பிழையின்றிக் கற்றிருக்க வேண்டும்," என்று பல முறை 'டைம்ஸ்'[2] பத்திரிகையில் எழுதியிருக்கிறார். இவர் செய்த பெருமுயற்சியாலேதான், இங்கிலாந்தில் ஆரம்பக்கல்வி இருந்த நிலை சிறிதாவது மாறிற்று.

1. Experimentation and skill in demonstration 2. Times

கல்லூரிக் கல்வியிலும் பல சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்பதே இராம்ஸேயின் அபிப்பிராய மாகும். "ஆராய்ச்சி செய்து, ஆராய்ச்சியில் தேர்ச்சி யும் பெற்று, ஆராய்ச்சி உரைகளை வெளியிட்ட வருக்கே கல்லூரிப் பட்டம் அளிக்கப்பட வேண் டும்," என்று இவர் சிற்சில சமயங்களில் கூறியுள் ளார். 'ஆராய்ச்சியை எப்போதும் செய்துகொண் டிருப்பவரே, உயர்தரக் கல்லூரிகளில் ஆசிரியரா யிருக்கத் தகுந்தவர்,' என்பதே இவர் கருத்தாகும். ஏனெனில், கல்வி என்பது, வளர்ச்சி முற்றுப் பெற்ற ஒன்றன்று; விஞ்ஞானமோ, நாளுக்கு நாள் பெருகும் தன்மைத்தாய் இருக்கின்றது. இவ்வா றிருக்கையில், இறந்த காலத்தில் நடந்த இறந்த நிகழ்ச்சிகளையே விஞ்ஞானத்தின் முடிந்த விளைவு களாகப் போதித்து வருவது ஆபத்தே! இதனால், மாணுக்கர், போதகாசிரியரின் பயிற்சிக் குறைவால், முடிவில்லாத ஒன்றினை முடிந்தது என்றே கருதி விடக்கூடும்.

பரீட்சைகளைப் பற்றியும்[1] இராம்ஸே சிற்சில கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார்: "மாணுக்க னது புத்திக் கூர்மையை, அவனுடன் நெடுநாட் பழகி, அவனுக்குக் கல்வியும் போதித்து வந்த ஆசிரி யர்கள் அறிய முடியுமே தவிர, அவனைப் பார்த்தே அறியாத பிறர் எவ்வாறு பிழையின்றி அவனறி வைத் திட்டம் செய்ய முடியும்?" என்பது இராம் ஸேயின் கருத்தாகும். இரண்டு மூன்று மணி

1. Examination as a System

நேரத்தில் ஒரு மாணுக்கனெழுதியதைக்கொண்டு, அவன் கல்வித் திறனைப் பரீட்சித்துவிட முடியும் என்பதை இராம்ஸே நம்பவில்லை.

இராம்ஸேயின் கருத்துக்களை ஆமோதிக்காதவர் பலர் அக்காலத்திலிருந்தனர்; இக்காலத்திலும் அவர்கள் எண்ணிக்கை குறையாமலே இருக்கலாம். இராம்ஸேயின் கருத்துக்களை முற்றிலும் ஆமோதிப்பவரை மறுக்கவும், முற்றிலும் மறுப்பவரை ஆமோதிக்கவும் நாம் விரும்பவில்லையாதலால், "ஏதோ சரித்திரமெழுத வந்த நாம் என்ன சொல்லக்கூடும்!" என்றே கூறிவிடுவோம்!

## இராம்ஸே இந்தியாவிற்கு வந்தது: (1900—1901)

இராம்ஸே, பிரயாணத்தில் மிகவும் விருப்பமுள்ளவர்; இவர் அமெரிக்கா, ஐரோப்பாக் கண்டங்களில் சென்று சொற்பொழிவு நிகழ்த்தாத நாடே இல்லை என்னலாம். இவர், இந்தியாவுக்கு வருவதற்கும் ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது.

ஜாம்ஷெட்ஜி நஸ்ஸெர்வாஞ்சி டாட்டா[1] அவர்களை ஒருவரும் அறியாமலிருக்க முடியாது. டாட்டா அவர்களின் குடும்பமே தேசாபிமானத்திற் பேர் போனது; ஜாம்ஷெட்ஜி டாட்டாவே, இந்தியாவில் சிறந்த தொழிற்சாலைகளை ஏற்படுத்தியவராவர்; இவர் வைத்துள்ள உதவி நிதி[2]யிலிருந்து, இன்றும் நாளையும் எளிய மாணவர்கள்

---

1. Jamshedji Nusserwanji Tata
2. Tata Trust for Educational purposes

பொருளுதவி பெற்று, மேனாடுகளுக்குக் கல்வி பயிலச் சென்று வருகின்றார்கள்.

1898-ஆம் ஆண்டில், ஜாம்ஷெட்ஜீ டாட்டா அவர்கள், இந்தியாவில் சிறந்த விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்தை[1] ஸ்தாபிக்க விரும்பினார்; முப்பது லக்ஷ ரூபாய் ஆதார நிதியும் அளிக்க முன் வந்தார். இவ்வாதார நிதி, வருஷத்திற்குச் சுமார் 1½ லக்ஷம் ரூபாய் வருமானம் அளிக்க வல்லது. ஆனால், அக்கழகத்தை எங்கு ஸ்தாபிக்கலாம், எந்த முறையில் சிறப்பாக நடத்தலாம் என்பவற்றை அறிவதற்காக, அரசாங்கத்தினிடம் டாட்டா தமது எண்ணத்தை வெளியிட்டார். அரசாங்கமும், ஆராய்ச்சியில் நிபுணரான இராம்ஸேயை (ஜாம்ஷெட்ஜி டாட்டாவின் செலவில்) இந்தியாவிற்கு வரவழைத்தது.

1900-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 11-ஆம் தேதியன்று இராம்ஸே பம்பாயில் வந்து இறங்கினார். ஜாம்ஷெட்ஜீ டாட்டாவின் புதல்வரான தோராப்ஜி டாட்டா[2]வுடன் சில நாள் தங்கியிருந்தார்; பிறகு இந்தியாவிலுள்ள பல இடங்களையும் சுற்றிப் பார்த்தார்; கடைசியாகப் பெங்களூரே ஆராய்ச்சிக் கழகத்தை ஸ்தாபிப்பதற்கு ஏற்ற இடம் என்று முடிவு செய்தார்; ஆராய்ச்சிக் கழகம் எவ்வாறு நடத்தப்படவேண்டும் என்பதைப்

---

1. Research Institute for Science
2. (now) Sir Dorabji Tata

பற்றியும், விரிவாய் அரசாங்கத்துக்குத் தமது அபிப்பிராயத்தை அறிவித்தார்; வருஷத்திற்கு $1\frac{1}{2}$ லக்ஷ ரூபாய் வருமானம் போதாதென்று கூறினர்; மைசூர் அரசாங்கமும், மற்றுமுள்ள தனிகர்களும் பொருளுதவி செய்தாலன்றி, ஆராய்ச்சிக் கழகம் சிறப்பாக அமைய முடியாதென்பதையும் தெரிவித்தார்.

இவர் கருத்துக்கிணங்கவே, காலஞ் சென்ற மைசூர் மகாராஜாவும், மற்றப் பிரபுக்களும் வேண்டுமளவு பொருளுதவி செய்தது போற்றத் தக்கதாகும். 1911-ஆம் ஆண்டில், 'பெங்களூர் விஞ்ஞான ஆராய்ச்சிக் கழக'த்தின்[1] திறப்பு விழா நடைபெற்ற போது, யாவற்றிற்கும் மூல காரணராய் இருந்த ஜாம்ஷெட்ஜி டாட்டா அவர்கள் அங்கு இல்லையே[2] என்ற வருத்தம் சிறிதும் தோன்ருத வண்ணம், அவருடைய அருந்தவப் புதல்வரான தோராப்ஜி டாட்டா அவர்கள், ஆதரவு மொழிகள் கூறினர்; இன்றும் நாளையும் அவ்வாராய்ச்சிக் கழகம், அவர்கள் ஆதரவைப் பெற்றுக்கொண்டே இருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கதாகும். ஆராய்ச்சியில் மிக்க நிபுணரான இராம்ஸேயின் ஆசி மொழிகளே பெங்களூர் ஆராய்ச்சிக் கழகத்தை மேலும் மேலும் மேலோங்

1. Bangalore Institute of Science

2. ஜாம்ஷெட்ஜி டாட்டா 1904-ஆம் ஆண்டில் விண்ணுலகடைந்தனர்.

கச் செய்து வருகின்றன என்று கூறுவது பொருத்தமேயாகும்.

## இராம்ஸேயின் குணாதிசயங்கள் :

ஆராய்ச்சியில் கண்ணும் கருத்துமாய் இருந்த இராம்ஸே, குதூகலமாயும் இருந்திருக்க முடியாது என்றே பலர் நினைக்கலாம். உண்மை அதுவன்று. இருபது மணி நேரம் இடைவிடாமல் ஆராய்ச்சி செய்து களைத்திருக்கும்போதுங்கூட, இவர் உற்சாகமாகவே சம்பாஷிப்பவராவர். ஒரு போது, அவ்வாறு களைத்து உட்கார்ந்திருந்த இராம்ஸேயைப் பார்த்து, இவர் நண்பரொருவர், "எதற்காக நீ இவ்வளவு பிரயாசையுடன் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறாய்?" என்றனர். "பிரிட்டிஷ் கழுதையைக் கத்தச் செய்வதற்குத்தான்."[1] என்று பொருள்படும்படியாய் இராம்ஸே ஆங்கிலத்தில் பதிலளித்தனர். 'பிரிட்டிஷ் அஸோஸியேஷன்' (ஆங்கில விஞ்ஞானச் சங்கம்) என்பதில் உள்ள 'அஸோஸியேஷனை' இராம்ஸே 'ஆஸ்' (கழுதை) என்று குறுக்கியபோது தோன்றிய மூத்தாளின் வாகனத்தைக் 'கத்தச் செய்வதற்குத் தான்' என்ற பயனிலையோடு சேர்த்தபோதுதான் ஹாஸ்யச்சுவை ததும்பி வழிந்தது என்று விளக்கிக் கூற முயல்வதும் பயனிலையே!

ஆகவே, இராம்ஸே துவிச்சக்கர வண்டியைப் பற்றிச் சிலேடையாய் எழுதிய கடிதத்தின் பகுதியை ஆங்கிலங் கற்றவருக்கென்று ஆங்கிலத்தி

1. "Just to make the British Ass(n) bray!"

லேயே கீழே குறிப்பிட்டிருக்கிறோம்.[1] இதை ஹாஸ்யச்சுவையுடன் தமிழில் மொழி பெயர்க்க வல்லவர்களுக்கு ஆங்கிலமெல்லாம் தமிழே ஆயிற்று என்பதில் என்ன தடை!

இராம்ஸே தயை மிகுந்தவர்; பிறரிடம் காணும் பிழைகளைப் பொறுக்க வல்லவர். இவருக்கு ஒரு முறை நட்பானவர்கள், வாணாள் முழுதும் நண்பர்களாகவே இருந்து வந்தார்கள். ஒரு முறை இவர் தம்மிடம் வேலை செய்து வந்த ஒரு குமாஸ்தா கலாசாலையின் பணத்தை அபகரித்தனன் என்பதை அறிய நேர்ந்தது; அவன் ஏழை என்பதற்காக, அவன் அபகரித்த பணத்தை இவர் தாமே கொடுத்து, அவன் வேலையைக் காப்பாற்றினார். அவனும் அதன் பிறகு சீரிய நடத்தை உடையவனாயினான்.

மாணாக்கர், பணியாளர், நண்பர் முதலிய யாவரிடத்தும் இவர் இன்மொழியே பேசுபவர். ஆகவே, இவர் 1916-ஆம் ஆண்டில் இறந்தபோது

1. 12, Arundel Gardens,
20th December, 1897.

"My dear Aunt Louisa,

"You will receive a 'parcel', it may be to-day, it may be to-morrow.

"One of its advantages is that, though there is not much of it, the little there is, will go a long way. You can **blow** her up when she displeases you. She is always **tired** and yet never unwilling to go. Though she is entirely without grit, she has a good deal of backbone; though unmarried, still she has two hubs. I hope you may never have **to put a spoke** in her wheel. Etc., etc.',

உலகமே தூக்கித்தது என்று கூறுதல் மிகை ஆகாது.

அயல் நாட்டு மொழிகளில் முப்பதுக்குமேல் இவர் நன்ருகப் பேசவும் படிக்கவும் வல்லுநர். அயல் நாடுகளுக்கு இவர் போன போதெல்லாம், அவ்வந்நாட்டுப் பாஷையைப் பேசுவதிலேதான் அவ்வந்நாட்டினருக்கு விருப்பமிருக்கும் என்பதை நன்கறிந்தவராவர். தாம் இந்தியர்களுடன் சம்பாஷிக்கும்போது, பாஷை வித்தியாசத்தால் இந்தியருக்குச் சிறிதாவது மனத்தாங்கல் ஏற்படுத்தக் கூடாது என்ற தூய எண்ணமே, இவரை நம் நாட்டுப் பாஷைகளான உருது, பாரசீகம், தமிழ் முதலியவைகளைக் கற்கும்படி தூண்டிற்று.

இந்திய மக்கள் தாய் மொழியிடத்திலேதான் பெருங்காதலுற்றவர்கள் என்று மிக உயர்ந்த ஆங்கிலேயரொருவர் நம்மிடம் வைத்த நம்பிக்கையை, அவர் இறந்த நூற்ருண்டு முடியு முன்னுவது நாம் நிறைவேற்றிவிடுவோம் என்று எமக்குத் தோன்றுகிறது!

'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே,' என்பதனை இராம்ஸே நன்கறிந்தவராவர். இவருக்குக் கண்ணுடிக் கருவிகளைச் செய்வதிலிருந்த அபார தேர்ச்சியை முதலாக வைத்துக்கொண்டு, இவர் மட்டும் 'கண்ணுடித் தொழிற்சாலை' ஏற்படுத்தியிருப்பாராகில், குபேரனுயிருக்க முடியும்; ஆனுல், ஆராய்ச்சியில் தீரரான வில்லியம் இராம்ஸேயாயும் இருந்திருக்க முடியாது. இதை இராம்ஸே அறிந்தே,

சாஸ்திரப் பயிற்சிலேயே தம் வாணுளைச் செல வழித்தார். "நீ வாழ்க்கையில் இன்புற்றனையா?" என்று கேட்ட நண்பருக்கு இவர் அளித்த மறு மொழியைப் பின் வருமாறு மொழி பெயர்த்திருக் கிருேம்:

"என் பெற்ருேரைப் போன்ற சிறந்த தாய் தந்தையரை நான் பெற்றதும், வாழ்க்கைத்துணைவி யேயான மனையாள் எனக்கு வாய்த்ததும் பெரும் பாக்கியமாகும்; என் மனப்பான்மைக்குத் தக்க வாறு எனக்குக் கல்வித் தொழிலும் சாஸ்திரப் பயிற்சியும் ஏற்பட்டது, அதனினும் பெரும்பாக் கியமென்றே நான் கருதுகிறேன். நான் மறுபடி யும் பிறக்க நேரிட்டால், இராம்ஸேயாகவே பிறக்க வும், இராம்ஸேயாகவே வாழ்ந்து வரவுமே விரும்பு வேன்."

இராம்ஸேயின் பிறப்பினுல் பத்தொன்பதாம் நூற்ருண்டு சிறப்புற்றது; இரசாயனம் மேலோங் கிற்று; இங்கிலாந்தும் "என் மகனைப்போல்வான் வேறு யாவன் உளன்!" என்று மகிழ்ச்சி உற்றது.





இயூரி அம்மையார்

## 6. கியூரி அம்மையார்[1]

## (1867—1934)

'பெண்! பெண்மைக்கோரணிகலம்! துன்பக் கடலின் எல்லை! எல்லையில்லாப் பொறை! புகழின் வரை! அடக்கத்தின் உயிர் நிலை! மக்களின் நற்றாய்! கற்பின் சிலை! தனக்குவமையில்லாத வாழ்க்கைத் துணை! பௌதிகத்தினில் புத்துண்மை கண்ட மேதை! இரசாயனத்தைப் பெரிதும் வளர்த்த மூதறிஞர்!' — என்றெல்லாம் கூறியும் என்ன பயன்! கியூரி அம்மையாரைப் பற்றி முற்றும் கூறியதாகுமோ!

மேரி கியூரியம்மையார்[2] வாழ்க்கையை என்னென்றுரைப்பது! இவரது பிள்ளைப் பருவத்திலோ, பிறந்த நாடான போலந்து[3]க்குத் துன்பம்; வளரும் பருவத்திலோ, பெற்றோருக்குத் துன்பம்; நங்கைப் பருவத்திலோ, பிறருக்குப் பணி செய்வதால், மிகவும் துன்பம்; கல்வி கற்கும் போதோ, பெண் என்றதால் பெரிதும் துன்பம்; இன்பத்தைக் காணும் வேளையில், தம் காதலர் உயிரைக் காலன் கொண்டேக, மாதர் பருவத்தும்

1. Madame Curie 2. Marie Curie 3. Poland

தாங்கொணுத் துன்பம்: முதுமைப் பருவத்திலோ, (1914) மூண்டெழுந்த பெரும்போரினுல் உலக முற்றும் துன்பம்; இறக்கும் நாளையிலும், "இனி யும் கற்றிலனே! கல்விக்கேன் கரையிலது!" என் னும் துன்பம்; வாணுள் முற்றிலும் வறுமையால் துன்பம்! துன்பம்!

* * *

காலம்: 1870 இடம்: போலந்தில் வார்சா[1]

மூன்று வயதும் நிரம்பாத மேரியம்மையார், தோட்டத்தில் உட்கார்ந்திருந்தார். அருகில் புத்த கம் கிடந்தது. இவர் அதனை எடுத்தார்! திறந் தார்! விந்தையிலும் விந்தை! வாசித்தார்! தம்மை யும் மறந்தார்; தந்தையாரும் தாயாரும் அங்கு வந்ததையும், தம்பின்னே நிற்பதையும் அறிந்திலர்; தடங்கலின்றி, வாய் விட்டு வாசித்துக்கொண் டிருந்தார்.

"மேரி, உனக்கு வாசிக்கக் கற்றுக்கொடுத் தவர் யார்?" என்றனர் தாயார். மேரியம்மையார் திடுக்கிட்டார்; அதை அதட்டலென்றே நினைத் தார்; முகம் சிவந்தார். அழுதுகொண்டே, "நான் இனிமே செய்யலே, அம்மா! அக்காளைக் கோவிச் சுக்காதே! அக்கா படிச்சதைப் பார்த்தேன். உடனே நானும் ஏதோ தெரியாமல்...." என்று நின்றனர்; குற்றமே புரிந்தவர் போல விம்மி விம்மி நைந்தனர்.

---

1. Warsaw in Poland

"மேரி! என் செல்வமே! நான் ஒருவரையும் கோபிக்க மாட்டேன்; பயப்படாதே அம்மா!" என்று குழந்தையை இரு கரங்களிலும் வாரியெடுத்தனர், மனம் நெகிழ்ந்த தாயார்.

மேரியம்மையார் இதைக் கண்டனர். அழுத கண்ணீர் வடியுமுன்னர், இவர் வாய் சிரித்தது. "என்ன அம்மா! நான் வாசிக்கறேன்! கேக்கமாட்டேங்கறயே? இதோ பார். 'அம்மா சிரிப்பாள்' என்று எழுதியிருக்கே!" என்றனர். அனைவரும் அழுதுகொண்டே சிரித்தனர்.

**தந்தையார் :** ஸ்க்லொடவ்ஸ்கி [1]
**தாயார் :** ஸ்க்லொடவ்ஸ்கா [2]
**தமக்கையார் :** பிரான்யா [3]

* * *

*1762*-ஆம் ஆண்டிலேயே, போலந்து சிறுமை அடைந்தது. அதன் ஒரு பகுதி ஜெர்மனிக்கடிமை; மற்றொரு பகுதி ஆஸ்திரியா[4]வுக் கடிமை; வார்சாவும், வார்சாவிலிருந்த மேரியம்மையாரும், இவர் தம் பெற்றோரும், இரஷிய அரசாங்கத்தின் அடிமைக்கும் அடிமை!

'அக்காலத்து இரஷிய அரசாங்கத்தின் மனம் இரும்போ!' எனில், அன்று அன்று! இரும்பையும் பிளக்கும் கற்பாறையே! வீரர் பிறக்குமிடமே போலந்து; எனினும், போலந்து இரஷியாவினும் சிறியதேயன்றோ? கற்பாறையைத் தகர்த்தெறிய, கைக்கோடரி பல காலும் முயன்றது. முடிவில்,

1. Sklodovski 2. Sklodovska 3. Bronya 4. Austria

முனை மழுங்கி அது முறிந்தது. 'பதறியென்ன பயன் ?' என்ற உரையும் போலந்தில் பல இடங்களிலும் கேட்டது.

"அடிமைகளின் மக்களுக்குத் தாய் மொழி எதற்கு ?" என்றது அரசாங்கம். அதனால், போலந்தின் பள்ளிகளில், இரஷிய மொழியே, பேரிரைச்ச விட்டு வரலாயிற்று.

மேரியம்மையாரின் தந்தையார் ஓர் ஆசிரியர்; தம் தாய் நாட்டு இளைஞருக்குப் பள்ளியில் அயல் மொழியைப் புகழ்ந்து போதிக்க வேண்டிய ஆசிரியர்; எனினும், கனவிலெல்லாம், வீரத்துடனும் தாபத்துடனும், "அடிமை நீங்கும்! அடிமை நீங்குக! அடிமையை நீக்குக! அடிமையும் நீங்கிற்று!" என்று தம்மைச் சூழ்ந்து நின்ற சுவர்களுக்குத் தாய் மொழியில் நாள்தோறும் போதித்து வந்த ஆசிரியருமாவர்!

* * *

காலம் : 1877 இடம் : வார்சாவில் பெண் பாடசாலை

பூனையின் குரலைக் கேட்ட இளம்புறுக்கள், கூட்டையடைந்தன. கல்வி இலாக்காவின் இரஷிய அதிகாரியின் வரவைக் கேட்டதும், பள்ளியின் ஓசையும் அடங்கிற்று, அதுவரையில் தாய் மொழியிலேயே கல்வி கற்றும், கல்வி கற்பித்தும் வந்தவரனைவரும், இரஷிய மொழியை உரக்கப் பேசினர்; எனினும், யாவர் நெஞ்சிலும், பனி உறைந்து பாறையாயிற்று.

இரஷிய அதிகாரி, கம்பீரமாகவே வகுப்பில் நுழைந்தார்; உபாத்தியாயினியாரைக் குறிப்பாய்ப் பார்த்தார். அவர் உடனே, "மேரி—" என்று கூறி, மேலொன்றும் கூருமல் நின்ருர். மேரியம்மையார் தாமிருந்த இடத்தில் நின்ருர். இவர் கண்கள், இறைவரின் பாதத்திலேயே நிலைத்திருந்தன. நரகி லிருந்த ஒருத்திக்கும், பள்ளியில் நின்ற ஒருவ ருக்கும் பின் வரும் 'வினவிடை' நடந்தது:

"நம்மைக் காத்து ஆதரிப்பவர் யார்?

"எவ்வுலகத்தும், கடவுள்; இவ்வுலகத்தில் மாட்சிமை தங்கிய இரஷிய மன்னர் பிரான்.[1]

"இரஷிய மன்னர்களில் சிலர் பெயரைக்கூறு."

"**காத்தரீன்** (II), **பால்** (I), **அலெக்ஸாண்டர்** (I), **நிக்கோலஸ்** (I)"

"சரி; நம் மன்னர் பிரானின் பட்டப் பெயர்க ளெவை?"

"ராஜாதி ராஜர், ராஜ மார்த்தாண்டர், ராஜ கம்பீரர்."

"பேஷ்! மிகவும் சரி! நீ என்னை எப்படி அழைப்பாய்?"

"'எங்கள் அன்புக்குரிய ஐயாவே!' என்று அழைப்பேன்."

இரஷிய அதிகாரி திருப்தியடைந்தார்; பள்ளியினின்றும் வெளியேறினர். அக்கணமே மடை திறந்தது; இடிந்தன கரைகளும்; பெருகியது வெள்ளமும்; மேரியம்மையார் அழுதனர்! இவர் அருகில்

1. Tsar

இருந்தவளும் அழுதனள்; வகுப்பிலிருந்த அனைவரும் அழுதனர். உபாத்தியாயினியார், பூமியின் மேல் முழந்தாளிட்டனர்; கைகளை உயர்த்தினர். "இறைவரே, என்னை மன்னிப்பீராக! போலந்தே, நீ உண்மையினை அறிவாய்; நீயும் என்னை மன்னிப்பாயாக! மேரி! என் கண்ணே! போலந்தின் அருந்தவப் புதல்வியே! நான் மனமார உன்னை இத்துன்பத்திற்கு உள்ளாக்கவில்லை. நான் அடிமையாதலால், உன்னையும் அடிமையாக்கினேன். நீயும் என் பொருட்டு அடிமையானாய்! என்னை மன்னித்தல், மேரி, உனக்கும் எளிதோ!'' என்று கரைந்தனர்.

"மேரி, புன்மொழியுரைத்த வாயை அலம்ப இதோ நீர்!'' என்றனள் தன்னிலையடைந்த ஒரு தோழி.

உபாத்தியாயினியார்: ட்யூபால்ஸ்கா [1]
இரஷிய அதிகாரி: ஹார்ன்பெர்கு [2]

* * *

காலம்: 1878 இடம்: மேரியம்மையார் வீடு

"அம்மா!'' என்று கதறினர் நால்வரும்; அலறினர்; ஆர்த்தனர்; பின் சோர்ந்தனர்.

"எமக்குப் பாலூட்டி எம்மைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டிய அன்னாய்! நீ எங்குச் சென்றொளிந்தனை! எம்மை முகம் கழுவி, சிகை சீவி, நேர்மை பார்த்து, "போய் வா,'' என்று கூறி வழி அனுப்பி, பின் பள்ளியினின்றும் வந்தவுடன் "வா, வா!'' என்று பரிந்தழைத்து எமக்கு அன்னமிட்ட

1. Tupalska 2. Hornberg: Inspector of Schools

அன்னாய்! நீ எவண் ஒளிந்தனை !" என்று அவர் புலம்பினர்.

"காதலீ! என் காதலீ! வறுமையிடையே என்னைக் காதலுறச்செய்த காதலீ!" என்று நைந்தனர் அந்நால்வரின் தந்தையார்.

சவம் வாய் திறக்கவில்லை; தாயாயும் காதலியாயும் இருந்து பிரிந்த ஆவி மட்டும், அவ்வறையிலேயே நின்றது. அதுவும் அழுததை யாரே அறிய முடியும்!

**நால்வர்:** மேரி, பிரான்யா, ஹேலா[1] என்னும் மூன்று சிறுமியரும், அவர்தம் சகோதரர் யோசேப்பும்.[2]

**தந்தையார்:** ஸ்க்லொடவ்ஸ்கி

* * *

**காலம்:** 1882—1883.

'பதினைந்து வயது நிரம்பிய பெண், பதினாறும் ஆண்டை எய்தினள்,' என்று கூறுவது பெண்பாலார் அனைவரிடத்தும் பொருந்தியதே; எனினும், மேரி கியூரியம்மையாரின் சரித்திரத்திற்கு அங்ஙனம் கூறுவது பொருந்தாது என்றே தோன்றும். ஏன்? துன்பக் கடலின் நடுவே, ஒரு சிறு இன்பத்திட்டு உண்டு என்றால், யார் அதனை நம்பக் கூடும்? 'பாலை வனம் ஓராண்டுவரை பச்சைப் பசேலென்றாயிற்று; அங்குப் பூம்புனல் ஓடிற்று; பைங்கூழ் தழைத்தது; குயில் இன்னிசை எழுப்பிற்று,' என்றால், அதை எவ்வாறு எவரும் ஏற்கக் கூடும்?

1. Hela 2. Joseph

எனினும், மேரியார் பதினறும் ஆண்டை அடைந்தனர். ஓராண்டுவரை இன்புற்றுமிருந்தார் என்பது உண்மையே.

இஃதுண்மையே என்பதை இவருக்குக் கணிதம் கவிதை முதலியவைகளைக் கற்பித்த பேரறிஞரான இவர் தந்தையார் அறிவார்; மேரியார் ஓடி ஆடின பனிக்கட்டியும் அறியும். அப்பனிக்கட்டி இன்றும் இறக்கவில்லை! (போலந்தே அழிந்தது.) தாம் பரிசுகள் பெற்ற போது எவ்வாறு மேரியார் உவகை பூத்தார் என்பதனை யோசேப்பும் பிரான் யாவும் அறிவர்.

'இல்லை,' என்று மறுப்பதில் பயனில்லை; ஓராண்டு முழுதும், மேரியார் இன்புற்ருர் என்பது உண்மைதான்! எனினும், 365 நாட்கள் ஓராண்டாய் விரைந்து குறுகின என்பதும் உண்மையே.

* * *

மானிடருக்கு இரு செவிகளேயுள; பாம்பினுக்குக் கண்களே செவிகள்; இரஷிய அரசாங்கத்துக்கோ, காற்றும் செவி, கல்லும் செவி, சுவர்களும் செவிகளே. ஏன்? இல்லையேல், 'மேரியாரின் தந்தையார் தமது கனவில் பிதற்றியதை இரஷிய அரசாங்கம் எவ்வாறு அறிந்தது? ஏன் அவரை அது வேலையினின்றும் நீக்கிற்று?' என்னும் வினக்களுக்கெல்லாம், அது காரணம் கூறி ஆக வேண்டும்!

மேரியாரின் தந்தையார், அது காரணம் கூறும் வரை காத்திருக்கவில்லை. "என் பெண்மை

(பெண்கள் மன்னிப்பார்களாக!) நீங்கிற்று!" என்றே அவர் வேலையினின்றும் விலகினார்.

அவர் அடிமையிடம் விடைபெறும் தறுவாயிலேதான், வறுமையும் அவரை அறிமுகமாக்கிக் கொண்டது. கானலை ஜலமென்று நம்பி, அவர் ஒரு கம்பெனியில் தமது செல்வமனைத்தையும் இட்டிருந்தார். 1884-ஆம் ஆண்டில் கானலும் மறைந்தது; அவர் கைப்பொருள் முழுவதும் மாய மாய் மறைந்தது.

"தன் மக்களுக்கு உயர்தரக் கல்வி அளிப்பவனே தந்தை," என்பது அவர் கருத்தாதலால், அவர், "பொருளை இழந்ததால் 'தந்தை' என்னும் உரிமையையும் யான் இழந்தவனானேன்!" என்று துயருற்றார். பத்தாவது வகுப்பினுள் சென்றும் அறியாத மேரியம்மையாரும், இவர் சோதரிமாரும் வீட்டில் பணி செய்வாராயினர்; தந்தையாருக்குப் பணிவிடை செய்து, அவரை ஒருவாறு இன்புற்றிருக்கச் செய்தனர். யோசேப்பு மட்டும், வறுமைப் பிணி நடுவே தத்தளித்துக்கொண்டு, பிறர் பிணிக்கே மருந்து செய்யும் வைத்திய நூலைக் கற்று வந்தார்!

பரதாழ்வார் இராமபிரானைக் காட்டில் சந்தித்த மாதமும் தேதியும் நேரமும், கலியுகத்தில் (போலந்தில், 1884ல்) மீண்டும் வந்தன.

பிரான்யா, மேரியாரிருந்த இடத்தைத் தேடி இவரைச் சந்தித்தனர். பின் வரும் சம்பாஷணையும் நடைபெற்றது:

"மேரி, உனக்கு வயது பதினேழாயிற்றே என்று உன்னிடம் வந்தேன்."

"பிரான்யா, உனக்கோ பதினேழுக்குமேல் மூன்றும் கழிந்ததே என்று நானே உன்னிடம் வர இருந்தேன்."

பிரான்யா சற்றுத் தயங்கினார்; பிறகு, "விளையாடாதே மேரி; நான் சொல்வதைக் கவனமாய்க் கேள்: நீதான் நம் அனைவருள்ளும் புத்திசாலி."

"பேஷ் பேஷ்! பிரான்யாதான் முட்டாளோ? உம்; அதனாலேதான் உனக்கு வருஷந்தோறும் பரிசுகள் கொடுத்தனர் போலும்!"

"மேரி, மறுபடியும் விளையாட்டுத்தானா! பாரிஸ்[1] நகருக்குப் போய், உயர்தரக் கல்வியைக் கற்க நீயே தகுந்தவள். பணத்திற்கென்ன செய்வது என்றுதானே யோசிக்கிறாய்? அதைப்பற்றி உனக்கேன் கவலை? பிரான்யாவுக்கு இரண்டொரு வித்தைகள் தெரியும்! என்னுயிருள்ள மட்டும்—" எனக்கூறிய பிரான்யாவின் கண்களில் நீர் ததும்பியது.

மேரியாரும், தம் கண்களில் பெருகிய நீரைத் துடைத்தார்; பிறகு பரிகசித்துப் பேசும் முறையில், "அக்கா, அடடா! சொல்ல மறந்துவிட்டேனே! மேரிக்கு நல்ல வேலை கிடைத்து இரண்டு நாளாய்விட்டதே! என்ன சம்பளம் தெரியுமா? முப்பது ரூபாய்! முப்பது ரூபாயை நீ ஒருசேரப்

1. Paris

பார்த்ததுண்டோ? மேரிக்குத்தான் அந்தப் பாக்கியம் முதலில் கிடைக்கும்.

" நீ பாரிஸுக்குப் போய் முப்பது ரூபாயையும் மாதாமாதம் செலவழிக்கலாம் என்று மனக்கோட்டை கட்டாதே! எனக்கேன் பங்கில்லை! நான் ஒன்று — இரண்டு — மூன்று — போதும் — மூன்று ரூபாய் எடுத்துக்கொண்டுவிடுவேன்! பாக்கிதான் உனக்கு!

" எனக்கு ரூபாய் எதற்குத் தெரியுமா? சில நாட்களுக்குள்ளே நானும் பாரிஸுக்கு——" என்று கூறி, முடிக்குமுன், "மேரி!" என்று மயிர் சிலிர்க்கக் கூவினர் பிரான்யா. ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டனர்; பதினேழும் இருபதும் இல்லை என்றுயின!

இராமபிரான், மிராசுதார்களின் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கவும், பணி செய்யவும் காட்டுக்குச் சென்றார்! பரதாழ்வாரோ, படித்து உயரப் பாதுகையைச் சுமந்துகொண்டு, பாரிஸுக்குச் சென்றார்! 'சகோதர வாஞ்சை' என்னும் இராம சரிதம் முடிந்த யுகத்திற்குப் பிறகு, யுகங்களும் கழிந்துவிட்டன; 'சகோதரி வாஞ்சை' என்னும் கியூரியம்மையாரின் சரிதம் முற்றுப் பெற்றது 1934-ஆம் ஆண்டிலேதான்!

* * *

**காலம்: 1884—1891.** **இடம்: போலந்தின் நாட்டுப் புறங்களில் மிராசுதார்களின் வீடுகள்**

மேரியம்மையார் பணி ஏற்றதும், காலமும் நொண்டி நொண்டி மெல்லவே நடந்தது. 'அணிலை'யும், 'ஆட்டை'யும் பற்றிச் சிறு பிள்ளைக்குப் பல நாள் கற்றுக்கொடுத்த பின்னர், மேரியம்மையார் ஒரு நாள், "குழந்தாய், நீ சமத்தோன்னோ! சிலேட்டையும் பென்சலையும் எடுத்துக்கோ!" என்று இனிமையாகவே உரைத்தனர்.

குழந்தையோ, இரண்டடி பின்னே நகர்ந்து, தப்பியோடுவதற்குத் தயாராய் நின்றுகொண்டு, "அப்புறம் ஆகட்டுமே! அம்மா பர்பி பண்ணு; பர்பி நன்னாருக்குமே! இதோ போய் நோக்கும் வாங்கிண்டு வரேன்," என்று சொல்லிக்கொண்டே மறைந்தது!

மற்றொரு நாள், "அங்கே போய்ப் பாரேன். அங்கே இரண்டு வாழைப்பழம் வச்சிருக்கேன்," என்று தாய் 'நிஜமாய்'ச் சொல்லியதை நம்பியே அச்சிறு பிள்ளை, மேரியம்மையாரிருந்த அறைக்குள் நுழைந்துவிட்டது. சட்டென்று கதவும் வெளிப்புறத்தில் தாளிடப்படவே, "வந்ததே மோசம்!" என்று அது அறிந்தது. "இனித் தப்ப வழியில்லை!" என்றே மேரியின் சொற்படி அச்சிறு பிள்ளை பலகையை எடுத்துக்கொண்டது.

"அணில் எழுது, பார்க்கலாம். அ—ணி—ல்," என்றனர் உபாத்தியாயினியார்.

தன் கண் சென்ற இடங்களில் எல்லாம் வாழைப்பழமும் தப்பியோட வழியும் இல்லை

என்பதை நன்ருய்த் தெரிந்துகொண்ட பிறகு, குழந்தை மனமுவந்து, "அ—னி—ள்" எழுதிற்று!

பல மாதங்கள் வரையிலும், அக்குழந்தை 'அணிலி'லிருந்து, 'அனிளே'யும் 'அணிளே'யும் 'அனலே'யும் தோன்றியவாறெல்லாம் யடைப்ப தாயிற்று! இந்'நான்முகனின்' ஒரு 'முகத்தை'க் காணுந்தோறும் மேரியம்மையாரின் கண் கலங்கி யது; ஆவி சோர்ந்தது. ஆயினும், இன்சொலே அன்றி வேறென்றும் பேச இயலாத. இவர் நாவோ, அன்பெனும் நீரைப் பாய்ச்சி, கற்பாறையில் கல்வி என்னும் பைங்கூழை வளரச் செய்து வந்தது.

நந்தன்—அடிமைக்கார நந்தன்—கழனியில் உழலும்போதெல்லாம், அவன் மனம், என் ஐயன் திருநடனம் புரியும் தில்லையம்பலத்திலேயே நாட் டம் பெற்றிருந்ததாம். மேரியம்மையாரின் மன மும், கலை மயில் தன் கலாபம் விரித்தாடும் பாரிஸ் நகரின் கல்வி அம்பலங்களிலேயே நிலைத்திருந்தது. இவரது மனம் கரிந்தது எனினும், முகம் கரிய வில்லை.

'போலந்தின் பெண் மகளிரே அழகிற் சிறந்த வர்,' என்பது பிரசித்தம். மேரியாரோ, போலந்தி லேயே 'அழகி' என்று பெயர் பெற்றவர். இவர் வதனத்தைக் காண்பதற்கென்றே வாலிபமும் இவரிடம் வந்தது; எனினும், தனிமையாய் வாழ்ந்து வரும் இவரைக் கண்டதும், 'மன்மதனைச் சுட் டெரித்த நெற்றிக் கண்ணே இது!' என்று பயந்து

ஓடிவிட்டது. மேரி கியூரியம்மையார், வாலிபத்தின் வாட்ட உணர்ச்சிகளை அறியாதவரேயாவர்.

ஒரு முறை மட்டும் மேரியாரின் 'தவம்' சிறிது கலைந்தது என்று சொல்ல வேண்டும். இவர் எஜமானரின் புதல்வன் இளைஞன்; இவர் அழகில் ஈடுபட்டான்; காதலுரை பகப்பினுன்; "நாளையே மணப்போம், பெற்ருேர் சம்மதித்தால்," என்ருன்.

பெண்களின் பிறப்புரிமையான மணம் தமக்கும் நேரவிருக்கிறது என்று மேரியார் இரண்டொரு நாள் வரை நினைத்தனர். அந்தோ! அகத்தினழகைக் கண்டும், அதைக் காண இயலாத குருடராய் இன்றிருந்து நாளை போம் சிறு செல்வத்தின் புல்லிய அழகை விரைவில் காண்பதற்கென்று மட்டும் இரண்டு கண்களைப் பெற்ற பெற்ருேரும் இளைஞருமே இவ்வுலகத்தியற்கை—என்பதனை இவர் அதுவரை அறியவில்லை. அவ்விளைஞன் பெற்ருேர், தம் மகன் பணி செய்பவளை மணப்பது ஏற்றதன்று என்று தடுத்த போதுதான் இவர் உண்மையை அறிவாராயினர்.

"குஞ்சியழகும், கொடுந்தானைக் கோட்டழகும், மஞ்சளழகும், வரதட்சிணையினழகும், செல்வத்தினழகும் அழகல்ல; அகத்தினழகே அழகு," என்பதை அறிந்த இளைஞனை இன்னும் நான்முகன் படைக்கவில்லை," என்றே இவர் இச்சம்பவத்தைப் பற்றித் தமது தினசரிக் குறிப்பில் எழுதியிருக்கிருர்.

இதே தருணத்திலேதான், பல மைல்களுக் கப்பாலுள்ள பாரிஸில், ஆடவனொருவன், பெண் களைப்பற்றிப் பின் வருமாறு தன் தினசரிக் குறிப் பில் எழுதிக்கொண்டிருந்தான். அதை அப்படியே மொழி பெயர்த்துள்ளோம்:

“ஆடவரைக்காட்டிலும், மகளிரே, வாழ்க்கை இன்பத்தில் ஈடுபட்டவராவர். இன்ப நுகர்ச்சிக் கும் அடிமைப்பட்டவராவர். ஆகவே, பொது மக் கட்கியலாத ஒரு தனித்துறையில் இறங்கும் ஒவ் வோர் ஆடவனும், பெண்களின் வலையினின்று தன்னைக் காத்துக்கொள்ள வேண்டியவன் ஆகின் றான்.

“எவ்வாறாயினும் தாய்மாராக வேண்டுமென் னும் விருப்பமே, பெண் மக்களின் விருப்பங்களில் முதலாவதாகும். ‘குழந்தையின் நலம் பெரிதா? அல்லது மணாளன் அறிவு முன்னேற்றம் பெரிதா!’ என்னும் போது, அவர்கள் குழந்தையின் நலத் தையே பெரிதென்பவர்கள்.

“காதலிகளே, ஆடவரின் அறிவையும் உதி ரத்தினையும் கொஞ்சமும் துக்கமில்லாமல் உறிஞ் சும் பேய்கள். அறிஞர்களின் அழிவு அவர்களுக்கு ஒரு பொருட்டன்று.

“மணம்!—இல்லை, முடியாது! தாயாராயும் காதலிகளாயும் இருக்க விரும்பாத பெண்களை இன்னும் நான்முகன் படைக்கக் கற்கவில்லை.

“அவன் தொழிற்சாலையிலிருந்து வரும் ஒரே அச்சுப் பெண்களோடு, போர் புரிதல் எளிதன்று;

'அபலை', 'பேதை', 'பற்றுக்கோடில்லாத இளங் கொடி'—என்றெல்லாம் ஆடவனுக்கு மயக்கம் காட்டி அவன் திண்மையை அழிக்கும் கடுங் கூற்றமே 'பெண்' எனப்படும்........"

மேற்கூறிய தினசரிக் குறிப்புக்களை எழுதிய இருவருமே 1895-ஆம் ஆண்டில், இல்லாளும் மணு ளனுமாயினர். மேரியம்மையாருக்குக் 'கியூரி' என் னும் அழியாப் புகழ் படைத்த பெயரை அளித்த வரே 'பியரி கியூரி'[1] ஆவர். பியரி கியூரிக்கு இன்றி யமையாத இல்லற வாழ்க்கையை அளித்தவரே மேரியார்.

1895-ஆம் ஆண்டுக்குப் பிறகு ஒரு நாள், இவ் விருவரும் தாம் எழுதிய குறிப்புக்களை ஒருவருக் கொருவர் காட்டிய போது, பியரி, தழுதழுத்த குர லில், "மேரி, தினசரிக் குறிப்பில் நான் உன்னையும் குறிக்கவில்லை. உண்மையில் நீ பெண்ணே அல்லை," என்றார்.

மேரி கியூரியார், தம் கண்களில் நீர் ததும்பிற் றுயினும், வேடிக்கையாகவே, "தாங்கள் மட்டும் (நான் குறித்த) ஆடவரென்று கனவு கண்டீர் போலும்! மேரிதான் பியரி கியூரியின் கணவன்! நான் கூறுவது சரிதானே ?" என்றனர்.

அறிவிலும் ஆராய்ச்சியிலும் ஒன்றுபட்டவருள், 'ஆண், பெண்' என்னும் மயக்கம் எவ்வாறு தோன்றக்கூடும்? 'அறிவே பெண்மைக்கு அணி கலம்,' என்றறியாத பேதைகளையும், 'பெருந்துறை

---

1. Pierre Curie

களில் ஈடுபாடே ஆண்மைக்கு அறிகுறி,' என்றறியாத பித்தர்களையும் துன்புறுத்த வந்த பிணி அல்லவோ, 'ஆண், பெண்'' என்னும் மயக்கம்! இஃது எவ்வாறு மேரியம்மையாரையும் பியரியாரையும் பாதிக்கக் கூடும்!

* * *

காலம் : 1891

கிரகணம் நீங்க ஏழாண்டுகளாயின. விலங்குகள் நழுவின; தளைகள் முறிந்தன; சிறைகளும் திறந்தன.

1891-ஆம் ஆண்டில், மேரியம்மையார் வேலையினின்றும் நீங்கினார். இவருக்கு அவ்வாண்டிலேதான் வேலையினின்று நீங்க முடிந்தது என்றே கூற வேண்டும். ஏனெனில், அதுவரையில், மாதந்தோறும் இவர் அனுப்பிய பணத்தைக் கொண்டே, பிரான்யா 'வைத்திய பட்டத்திற்கு'[1] வாசித்து வந்தார். 1890-ஆம் ஆண்டில் அவர் பட்டம் பெற்று, 'லூஸ்கி'[2] என்னும் சிறந்த இளைஞரைக் கலியாணம் செய்துகொண்டாரெனினும், அவர் மேரியாருக்கு உதவி செய்யும் நிலைமை வர, 365 நாட்கள் கழிய வேண்டியிருந்தன. ஆகவே, 1891-ஆம் ஆண்டிலேதான், மேரியம்மையார் (தம் இருபத்து நான்காம் ஆண்டில்) கல்வி பயிலப் பாரிஸுக்குச் செல்ல முடிந்தது.

* * *

---

1. Degree in Medicine 2. Dluski

**காலம்: *1891—1894*** **இடம்: பாரிஸ்**

நந்தன் தில்லையம்பதியை நண்ணினுன்; அதைக் கண்களில் தெரியக்கண்டான்; மனம் விண்டான்; "முக்கண்ணு, முதல்வா, போற்றி! என்னையும் ஆட்கொள இசைந்த இறைவனே, போற்றி! போற்றி!!" என்று இரு கை கூப்பி, மயிர் சிலிர்த்தனன்.

மேரியம்மையார், பாரிஸில் உள்ள 'ஸொ போன்'[1] என்னும் கல்விக்கழகத்தில் சேர்ந்ததும், உள்ளம் பூரித்தனர். "என்று காண்பேன்! என்று பௌதிகத்தினைக் கற்பேன்! என் பேரவா நிறை வேறும் காலமும், இறக்குமுன் எனக்கு நேர்ந்ததே!" என்று உவகை பூத்தனர்; பிறர் கல்வியை முடிக்கும் நாளில், தாம் கல்வியைத் தொடங்கலாயிற்றே என்ற தம் கொடுவிதியையும் நொந்தாரில்லை. ஆட வரும் மகளிரும் வேடிக்கையாய்த் திரிந்து விநோத மாய்ப் பொழுது போக்கும் பாரிஸின் நடுவில், தாம் கரிய ஆடை ஒன்றினைத் தரித்து, அது கந்தலென் பதனையும் மறந்து, செல்வரிடையே சென்று வர லாயிற்றே என்பதனை இவர் ஒருபொழுதும் சிந்தித் தவரல்லர். "வந்தேன்! கண்டேன்! இனி உய்ந் தேன்!" என்று கல்வியிலேயே மனம் நிலைத்தவருக் குப் பாரிஸும் என்ன செய்யக் கிடக்கின்றது! நிலை தவறிய பாண்டி நாட்டில், கண்ணகித் தெய் வம் தூய்மை பரப்பித் திரிந்தது போல, பாரிஸி லும் கியூரி அம்மையார் வாழ்ந்து வருவாராயினர்.

---

1. Sorbonne

அக்காலத்தில், கியூரியம்மையாரின் ஏழ்மையை என்னென்றுரைப்பது! இரண்டே ஆடைதான் இவருக்குரியவை. அவை இரண்டுமோ, வெகு நாளைக்கு முன் புதியன! எப்போதும் கரியனவே!

காதலர்களின் களியாட்டத்திடையே இவர் கல்வியில் எவ்வாறு கருத்தைச் செலுத்த முடியும்! ஆகவே, மேரியம்மையார் பிரான்யாவுடன் வசிக்க வில்லை; ஸொபோனுக்கு அருகில் உள்ள ஒரு சிற்றறையில் வசித்து வந்தார். அறையின் அடக்கம் ஒரு ஜாதிக்காய்ப் பெட்டியும், ஒரு மண்ணெண் ணெய் விளக்குமே! மேரியாருக்கு உயிரளித்தவை ரொட்டியும் நீருமே!

கம்பளங்களையும், நெகிடித்தீயையும், இனிய பண்டங்களையும், மெத்தை நாற்காலிகளையும், சாயும் சோபாக்களையும், பார்க்கர் பேனாக்களையும், பார்க்கும் கண்ணாடிகளையும், 'பௌடர்'ப் பெட்டி களையும் மேரியாரின் - மேரி கியூரியாரின் - அறையில் எதிர் பாராதீர்கள்! மேரியார் வசித்த இடம், கலா சாலை மாணக்கர்கள் இளமையைக் கழிக்கும் சுவர்க் கத்தின் விடுதியன்று! அது கல்வித் தெய்வம் உயிர்த்திருந்த திருக்கோவிலேயாம்!

"மெய்வருத்தம் பாரார்; பசிநோக்கார்; கண்துஞ்சார்;
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்;—செவ்வி
அருமையும் பாரார்; அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்."
—நீதி நெறி விளக்கம்

என்று நம் நாட்டுப் புலவரான குமரகுருபரர் கூறியது, கல்வியே கருமமாகக் கொண்ட போலந்தின்

பெண் மணிக்குத்தான் முற்றிலும் பொருந்துவதாகும்.

* * *

**காலம் : 1891—1893.**

சற்று நில்லுங்கள்! பெருவழி நில்லாது படித்தென்ன பயன்! மேரி கியூரியாரின் படத்தினைச் சிறிது நேரம் பாருங்கள்! அப்போதுதான், ஸொர்போனில், மேரியாருடன் கல்வி பயின்ற இளைஞரனைவரும், இவரை ஏன் 'அவள்' என்று கூறாமல் "அது! அதுவே!" என்று பேசாமல் நிலைத்து நின்றனர் என்பது ஒருவாறு விளங்கும்; இவர், நாம் யாவரும் தினந்தோறும் அடிக்கடி காணும் '**அவள்**' அல்லவே அல்லர் என்பதும் புலப்படும்.

1893-ஆம் ஆண்டில் நடந்த பரீட்சையில், அது வரை பாரிஸிலேயே இல்லாத புதுமை நிகழ்ந்தது! ஒரு பெண்பாலார் பௌதிகத்தில் முதல்வராய் நின்றார்! பாரிஸிலிருந்த மற்றப் 'பெண்கள்', மேரி அம்மையாரை அறிந்துகொள்ள விரும்பவில்லை என்பதை நாம் விளக்கிக் கூற வேண்டுவதில்லை. அது தானே விளங்கும்.

ஆடவரே எனில், மேரியாரைக் கண்டு பொறுமைப்பட்டனர். எனினும், ஒருவருடனும் பேசியும் அறியாத மேரியார்மீது அவதூறு கூற அவர்களது நா எழவில்லை என்பதே ஒருவாறு அவரை 'ஆடவர்' ஆக்கிற்று!

பௌதிகத்தில் தேர்ச்சிப் பட்டமும்[1] பரிசுகளும் பெற்றவுடன், மேரியம்மையார் போலந்துக்குச் சென்றார். 'ஏதாவது ஒரு கல்லூரியில் வேலைக்கு அமருவோம்,' என்றே மேரியம்மையார் தீர்மானித்திருந்தார். அப்போதுதான், மறுபடியும் ஸொபோன், இவரை வாவென்றழைத்தது.

'அலெக்ஸான்றவிட்சு'[2] என்பார், ஒரு கல்வி நிதி ஸ்தாபித்திருந்தார். அந்நிதியின் குழுவினர், ஒரு சிறு தொகையை (நமது நாட்டுக் கணக்கின்படி அதை 400 ரூபாய் என்று கொள்ளலாம்) மேரியாருக்கு அளிக்கத் தாமாகவே முன் வந்தனரே அன்றி, மேரியார் கல்விக்கென்றுவது பிறரை நயந்திருக்கக் கூடும் என்பது ஒரு போதும் இல்லை.

மேரியம்மையார் ஓடோடியும் பாரிஸுக்குச் சென்று, ஸொபோனில் சேர்ந்தார். கல்விக் கழகத்தின் சம்பளம் போகச் சுமார் 200 ரூபாய்களை வைத்துக்கொண்டு, தாம் பதினைந்து மாத காலம் பாரிஸில் வசித்துக் கணித பட்டத்திற்குப் படித்துக்கொண்டுமிருந்தார்.

மேரியாரின் உணவில் மிகுந்த பாகம் காற்றும் நீருமாய்த்தானிருந்திருக்க வேண்டும்! சென்னையில் மாதம் பதினைந்து ரூபாயில் வாழ்ந்துவரும் மாணாக்கர் எவராவது இருந்தால், அவருக்கு நாம் சொல்வது உண்மை என்பது புலப்படக் கூடும்.

1894-ஆம் ஆண்டில் பாரிஸ், மறு முறையும் திடுக்கிட்டது. கணிதத்தில், மேரியம்மையாரே

1. Master of Science (M. Sc.) in Physics 2. Alexandravitch

முதல்வராய்த் தேறினர்! தேர்ச்சிப் பட்டமும் பெற்ருர்! பரிசுகளும், ஆடவரால், ஆடவரின் நடுவே, ஆடவருக்கில்லாமல், ஒரு பெண்மணிக்கே வழங்கப் பட்டன!

* * *

**காலம்: 1894.**

இவ்வாண்டு, மேரியம்மையாரின் சரித்திரத்தில் மிகவும் முக்கியமானதாகும். மேரியம்மையார், பட்டமும் பரிசுகளும் பெற்றதைக் கண்டு, பாரிஸ் திடுக்கிட்டது. இவ்வாண்டிலேதான் நடைபெற்றதாயினும், அது மிகவும் சிறிய சம்பவமே. புலமைச் செல்வியர்களைக் கண்டு திடுக்கிடுவது பாரிஸுக்கு இயற்கை! உலகத்திற்கே இயற்கை!

வர்த்தகச் சங்கம்[1] ஒன்று, மேரியம்மையாரைக் காந்த வஸ்துக்களைப் பற்றி ஆராய்ச்சி நிகழ்த்துமாறு வேண்ட, இவர் அதை மேற்கொண்டு முடித்ததும், அச்சங்கம் இவருக்கு 1000 ரூபாய் அளிக்க, அத்தொகையிலிருந்து 400 ரூபாயை உடனே இவர் 'அலெக்ஸான்றவிட்சு'க் கல்வி நிதிக்குத் திருப்பியளிக்க, அச்சங்க நிதிக் குழுவினர், இச்செய்கையைக் கண்டு ஆச்சரியம் அடைந்த ஆண்டும் இதுதான்.

மேற்சொன்னதும், மேரியாரின் சரித்திரத்தில் சிறிய சம்பவமே. கல்வி நிதிகளினின்று பொருளுதவி பெறும் மாணவர்களுள், அதைப் பற்றிப் பிற்காலத்தில் ஒரு முறையாவது நினைக்கும் ஒருவர்

1. Society for the encouragement of National Industry

உண்டு என்று கேட்டாலே, கல்வி நிதிகள் ஆச்சரிய மடையத் தயாராயிருக்கின்றன. இலவசமாகக் கொடுக்கப்பட்ட பணத்தைத் திருப்பியளித்த ஒரு பெண் மணியைக் கண்டு, கல்வி நிதி ஆச்சரியப்பட்டது, ஓர் ஆச்சரியமன்றோ!

அரை அரையோடு கலந்து, மூன்று ஒன்றுனதுதான் அவ்வாண்டின் முக்கிய நிகழ்ச்சியாகும். (மூன்று ஒன்றுவன: மேரி கியூரி, பியரி கியூரி, இவர்கள் புதல்வியாரான ஐரீன் கியூரி[1] ஆகிய இம் மூவரும் பௌதிகத்தில் நோபெல் பரிசு பெற்ற 'ஒன்று'களே).

மேரியம்மையாரை, 1894-ஆம் ஆண்டில், 'அரை' என்று குறைத்துச் சொல்வதில் ஒரு குற்றமுமில்லை. அக்காலத்தில், இவர் ஆராய்ச்சியில் தேர்ச்சி பெறவில்லை. இவருக்கு அறிவும் முற்றவில்லை. பியரி கியூரியுடன் பழகும் பெருங்கல்வியையும் இவர் பெற்றுரில்லை; தேர்ச்சிப் பட்டங்கள் மட்டுமே பெற்றிருந்தார்.

1894-ஆம் ஆண்டில், பியரி கியூரியை 'அரை' என்று கூறுவது ஒவ்வாததுதான். அவர் மிகச் சிறந்த அறிஞர் என்பதைக் 'கெல்வின் பிரபு'[2] முதலிய மேதாவிகள் அக்காலத்திற்கு முன்னமே அறிந்திருந்தார்கள். பிரான்ஸில் இருந்த பௌதிக நிபுணர்களுள் அவர் முதன்மை பெற்றவர் என்பதைப் பிற நாடுகளெல்லாம் ஒப்புக்கொண்டிருந்தன.

1. Irene Curie 2. Lord Kelvin

எனினும், அவரை யாவும் முற்றுப்பெற்ற 'ஒன்று' என்று கூறுவதும் ஒவ்வாததே. ஏனெனில், அவர் உற்சாகத்தைப் பெறவில்லை; வாழ்க்கையை விரும்பவில்லை. அவர் கல்லூரியில் பௌதிகப் பேராசிரியர் பதவிக்கு அருகராயிருந்தும், கல்லூரிகள் அவரை வருந்தியழைத்தும், அவர் பதினாறும் நிரம்பாத சிறு பிள்ளைகளுக்குக் கல்வி போதிக்கும் உயர்தரப் பாடசாலையிலேயே[1] உபாத்தியாயராய் இருந்து வந்தார்; செல்வம், பட்டம், புகழ், பதவி முதலியன தாமாகவே வந்த போதும், "வேண்டா," என்று கூறி, அவைகளினின்றும் தப்பும் வழியையே யோசித்துக்கொண்டிருந்தார்.

பியரி கியூரியின் படத்தைப் பாருங்கள், அவரைப் "போதுமென்று கூறும் பியரி," என்று நீங்களே கூறத் தலைப்படுவீர்கள்.

இத்தகைய பியரியும் மேரியம்மையாரும் 1894-ஆம் ஆண்டில் சந்திக்காமலிருந்தால், பௌதிகத்தின் வளர்ச்சியே தடைபட்டிருக்கும்; ஒவ்வொருவரின் வாணாளும், தனித்தனியே, முழுப் பயனையும் அளித்திருக்க முடியாது.

1894-ஆம் ஆண்டிலும் பியரி கியூரி, மேரியாரைத் தேடிச் செல்லவில்லை என்பது குறிக்கத் தக்கது. மேரியாரே, தமக்குப் பௌதிகத்தினில் ஏற்பட்ட ஒரு சந்தேகத்தினைத் தீர்க்க வல்ல பியரி கியூரி என்னும் உபாத்தியாயரைத் தேடிச்சென்றனர். இதனால், மேரியம்மையார் தமக்கு உபாத்தி

---

1. High School



பியரி கியூரி

யாயரையும், தோழரையும், மணாளரையும் ஒருங்கே பெற்றனர்.

நவீனங்களில் வாலிபர்களும் நங்கைகளும் சந்திக்கும் முறைகளில் இவர்கள் சந்திக்கவில்லை. முப்பத்தைந்து வயது முடியு முன்னமே முதிய தோற்றத்தினைப் பெற்றிருந்த பியரி, மேரியாருக்கு வாலிபராய்த் தோன்றவேயில்லை; முதிர்ந்த அறிஞராயும், ஆன்றவிந்து அடங்கிய சான்றோராயுமே தோன்றினர்.

மேரியாரைக் கண்ட பியரியும், நங்கையைக் காணவில்லை; அறிவால் பொலிவடைந்த முகத்தினையும், ஆராய்ச்சியிலும் சிந்தனையிலுமே நிலைத்து நின்ற கண்களையும் மட்டுமே கண்டார். 'அறிவின் பொலிவே மங்கையர்க்கு அழகு,' என்றால், வாலிபமும், வனப்பும், மனக்கிளர்ச்சியை உண்டுபண்ணும் உடலின் ஆக்கமும் நழுவியோடி, இருபத்தேழு வயதும் முற்றுப்பெற்ற மேரியார் என்னும் மாதர், முன்னெக்காலத்திலும் இல்லாத பேரழகுடன் விளங்கினர் என்றுதான் சொல்லவேண்டும்.

நான்முகன் ஒரு பெண் மணியைத் தமக்கென்று தனித்த முறையில் படைத்ததைப் பியரி தெரிந்துகொண்டனர். அதன் பிறகு, பியரி, மேரி அம்மையாரை அடிக்கடி சந்தித்து வந்தார்; பல மாதங்களுக்குப் பிறகு தம்மை மணக்கும்படி மேரியாரை வேண்டினர். மேரியார், மணத்திற்கு உடனே உடன்பட்டாரில்லை. "இல்லற வாழ்க்கைக்கும் நம் சிறு வாழ்க்கையில் இடமுண்டோ!"

என்று சந்தேகித்தது இவர் மனம். ஓராண்டுக்குப் பிறகே இவர் பியரியை மணக்கச் சம்மதித்தார்.

1895-ஆம் ஆண்டு ஜூலை மாதம் 26-ஆந் தேதியன்று, படாடோபம் சிறிதுமில்லாமல், ஒரு கல்லூரி உபாத்தியாயருக்கும், 'இன்னும் படித்துக் கொண்டிருக்கும்' ஒரு மாதர்க்கும் நடந்த விவாகம் மிகவும் விநோதமான விவாகமேயாகும். ஆணும் பெண்ணும் கணவனும் மனைவியுமானுரென்பது முக்கியமே அன்று. இரு பேரறிஞர்—ஒருவருக் கொருவர் இன்றியமையாத இருவர்—'ஒன்ருகவே அறிவை வளர்ப்போம்; ஒன்ருகவே ஆராய்ச்சி செய்வோம்,' என்று பிரதிக்கினை செய்துகொண்ட தாகவே நாம் அவ்விவாகத்தினைக் கருத வேண்டும். தோழனோடு தோழியும் அறிவாளியோடு அறி வாளியும், உபாத்தியாயரோடு மாணவியும், உபாத் தியாயினியோடு மாணவனும், ஒன்றுபட்டு, ஓழிந்த நேரங்களிலேயே கணவரோடு மனைவியார் வாழ்ந்து வந்தார்.

* * *

**காலம் :1895—1906.**

மும்மலமுறுக்கிய முனிவரோடு வாழ்ந்து வந்த மேரி கியூரியாரின் உள்ளம், எவ்வாறு இவ் வுலக இன்பங்களில் சிறிதேனும் நாட்டமடைய முடியும்? அறிவு நிரம்பினவராய், ஆர்வமுடைய வராய், ஊக்கமே உருவினராய், இடையிடையே இனிய மனைவியருமாய் இருந்த மேரியாருடன் வாழ்ந்து வந்த பியரி, எவ்வாறு பௌதிகத்துக்குப்

புத்துயிரளியாதிருக்க முடியும், தாமும் புத்துயிர் பெருதிருக்கவும் முடியும்?

'வறுமையிற் செம்மை, மிகவும் செம்மை,' என்று இவர்தம் சுருங்கிய இல்லற வாழ்க்கையைப்பற்றிச் சுருக்கிக் கூறிவிடலாம்; எனினும், எக்காலத்தும் ஏனே உயர் செம்மையின் வறுமை! ஏனே இத்தகைய இல்லற வாழ்வின் ஒடுக்கம்!

விதி—கொடிய விதி—அறிஞரை எக்காலத்தும் துன்புறுத்தும் பாழும் விதி—என்ருவது ஒரு நாள் தான் இழைக்கும் தீமைக்கெல்லாம் காரணம் கூறித்தான் ஆக வேண்டும்!

திருவள்ளுவர் திருக்குறளில் '**வாழ்க்கைத் துணை நலம்**' என்னும் அதிகாரத்தில் எழுதியுள்ள பத்துக் குறட்பாக்களும், மேரி கியூரியம்மையார் எவ்வாறு இல்லறம் நடத்தினர் என்பதனை விளக்குவதற் காகவே எழுதப்பட்டன போலத் தோன்றும்.

மேரி கியூரியம்மையார், 'தாய்' என்னும் அனுபவத்தை இரு முறை பெற்ருர்; இவருக்குப் பிறந்தவர் இருவரும் பெண்டிரே. அவருள் ஒருவரான ஐரீன் கியூரியம்மையார், தம் தாயாரைப் போலவே நோபெல் பரிசு பெற்ருர். 'ஈவ் கியூரி'[1] என்னும் மற்ருெரு பெண் மணியோ, இலக்கியத்தில் தேர்ச்சி பெற்றவர்.[2] 'மக்களுக்குத் தாய்' என்ற முறை

1. Eve Curie

2. ஈவ் கியூரி தம் அன்னையாரைப்பற்றி எழுதியுள்ள புத்தகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பை ("Madame Curie" by Eve Curie, Translated by Vincent Sheean.). வாசித்ததுந்தான், நான் ஆங்கிலம் கற்றதன் பயனையும் பெற்றேன்.

யில் சரித்திரங்களில் பேர் போன தாய்மார் எவருக்கும், மேரி கியூரியாரைத் தாழ்ந்தவர் என்று உரைக்க வேண்டுவதில்லை. தம் மக்களைப் பரிந்து வளர்த்த அன்னையருள்ளும், அம்மக்களுக்குச் சிறந்த கல்விச் செல்வத்தினையும் அளித்த சில தாய்மாருள், மேரி கியூரியம்மையார் முதன்மை பெற்றவராவர்.

*　　　*　　　*

**காலம் : 1897—1901.**

'நியூட்டன்'[1] ஆகர்ஷண சக்தியைக்[2] கண்டு பிடித்த பின் பௌதிகத் துறையில் நடைபெற்ற பெருநிகழ்ச்சி யாதெனில், மேரி கியூரியார் **'இரேடியம்'**[3] என்னும் பொருளைக் கண்டு பிடித்ததுதான்.

அபூர்வமான ஒரு பொருளை மிகவும் அபூர்வமான நங்கையார் ஒருவரே கண்டு பிடிக்க வேண்டும் என்றிருந்தது பொருத்தமாய்த்தானிருக்கிறது.

இனி இரேடியம் கண்டு பிடிக்கப்பட்ட வரலாற்றைக் கவனிப்போம் :

1897-ஆம் ஆண்டில், மேரி கியூரியம்மையார், 'ஆராய்ச்சிக்கே அளிக்கப்படும் பண்டித பட்டம்'[4] பெற விரும்பினர். 1896-ஆம் ஆண்டிலேதான் **'பெக்கரல்'**[5] என்பவர், **'யுரேனியம்'**[6] என்னும் தனிப்பொருளை,[7] **'பிட்ச் ப்ளெண்டு'** என்னும் சுரங்கப் பொருளிலிருந்து[8] தயாரித்தார். யுரேனி

---

1. Newton 2. Law of Gravitation 3. Radium
4. Doctorate degree for Research 5. Bequerel 6. Uranium
7. Element 8. Pitch-blende ore

யம் என்பது, தானாகவே அழியும் தன்மையை உடையது[1] என்பதையும் அவர் வெளியிட்டிருந்தார். அவ்வஸ்து அழியும்போது, கிரணங்களும் சிறு துகள்களும்[2] வெளி வருகின்றன என்பதையும் அவர் அறிவித்தனர்.

இவ்வெளியீடுகளை[3] நன்றாய் அறிந்திருந்த பியரி கியூரி, மேரியம்மையாரை இத்துறையில் ஆராய்ச்சி செய்யும்படி தூண்டினார். அவர் பள்ளிக்கூடத்தில், சிறிதளவு அச்சுரங்கக் கட்டியும் இருந்தது. பொருள்களின் அழியும் தன்மையை ஆராய வேண்டுவதற்கு[4] அவர், நுட்பமான கருவிகளை முன்னமே அமைத்து வைத்திருந்தார்.

இவைகளைக் கொண்டே, மேரியார், தம் ஆராய்ச்சியை நடத்தி வந்தார். பியரியும், அவ்வப்போது கியூரியாரின் ஆராய்ச்சியில் கலப்பதும் உண்டு.

சில நாட்களுக்குப் பின் ஒரு நாள், "பியரி! பியரி!" என்று தம்மை மேரியார் கூவி அழைப்பதைக் கேட்டு, பியரி, மேரியாரிடம் சென்றனர். கியூரியம்மையார் தாம் ஆராய்ச்சியில் கண்ட புது உண்மையைத் தம்மையொத்த அறிஞரான தம் கணவருக்குக் கூறினார். பியரியும் நன்றாய்க் கேட்டனர்; யோசனையிலாழ்ந்தனர். சிறிது நேரத்திற்குப் பிறகு, அவர், "மேரி, நீ யாவரும் கண்டு ஆச்சரியம் அடையத்தக்க பேருண்மையைக் கண்டு

1. Disintegrate spontaneously 2. Radiations and Particles 3. Publications 4. To measure the 'Rates of disintegration'

பிடிக்க இருக்கிருய்; கண்டு பிடித்துவிட்டதாகவும் கூறிவிடுவேன் ; என்ருலும், பௌதிகத்தில் அவசரத்திற்கு இடமில்லை, பொறுமையுடன் சோதனைகளை ஒரு முறையன்றி, இரு முறையன்றி, ஐம்பது முறை திருப்பித் திருப்பிச் செய்,'' என்றனர், நன்மதிப்புத் ததும்பிய குரலில்.

மேரியம்மையாரும் பியரியும் பிரிக்க முடியாத சதிபதிகள் என்பதை அனைவரும் கருத்தில் வைக்க வேண்டும். இங்குப் பியரியில்லாவிட்டால் மேரியாரும், மேரியாரில்லாவிட்டால் பியரியும் என்ன செய்திருக்கக்கூடும் ?

மேரியார் ஐம்பது முறையும் திருப்பித்திருப்பி ஆராய்ச்சி செய்தார்; தாம் கண்டது உண்மை என்றும் கண்டார். பியரியும், "சரி; நீ பௌதிகத்தில் மிகவும் பெரிய உண்மையைக் கண்டு பிடித்து விட்டாய்,'' என்றனர். "இல்லை, இல்லை! 'நாம் கண்டு பிடித்துவிட்டோம்!' என்று சொல்லுங்கள்,'' என்ருர் மேரியம்மையார்.

"நாம்'' என்ற ஒருவர் கண்டு பிடித்த உண்மை என்ன? பெக்கரல் சொன்னதற்கு மாருக, அச்சுரங்கக் கட்டியில், யுரேனியத்தைத் தவிர, மற்ருெரு தனிப் பொருளும்[1] உண்டு என்பதுதான். அதுவும் தாமே அழியும் தனிப் பொருள்களில் ஒன்று என்றும், அதிலிருந்து வெளிக்கிளம்பும் கிரணங்களும் சிறு துகள்களும் யுரேனியப் பொருளிலிருந்து வெளிக்கிளம்பும் கிர

1. Element

ணங்களையும் சிறு துகள்களையுங்காட்டிலும் பதின் மடங்கு சக்தி மிக்கவை என்றும் மேரியார் கண்டார். இவரது இஷ்டப்படியே, பியரி கியூரி அத்தனிப் பொருளுக்குப் 'பொலோனியம்'[1] (போலந்தை அறிவுறுத்தும் பெயர்) என்று பெயர் வைத்தார். மேரி கியூரியம்மையாரும், அவ்வாராய்ச்சிக்காகப் 'பண்டித பட்டம்' பெற்றார்.

மீண்டும் ஆராய்ச்சியே! இதற்கு இடையே, நோபெல் பரிசு பெறத்தகுந்த ஒரு மகவும் கருவில் உருப்பெற்றது! 1898-ஆம் ஆண்டில், மேரி கியூரியார் சுரங்கப் பொருளில் 'யுரேனியம்' 'பொலோனியம்' என்ற இவை இரண்டினையுந் தவிர, மற்றொரு பொருளும் இருக்க வேண்டும் என்பதை வெளியிட்டார்.

இதை நம்பியவர் பியரிகியூரி ஒருவரே. 'தாமே அழியும் தனிப்பொருள்கள்,' ஒன்று, இரண்டு; இப்போதோ, மூன்று என்று பெருகிக்கொண்டே போவது, மற்ற அறிஞர்களின் நிலையான அபிப்பிராயங்களையெல்லாம் கலக்குவதாய் இருந்தது. ஏனென்றால், பொருள்கள் தாமாகவே அழிய முடியும் என்பதை அவர்கள் நம்பவில்லை. ஒரு குன்றி மணி எடை பல ஆயிரக்கணக்கான பவுன் விலை உள்ள பொருள் சில காலத்திற்குள் தானாகவே அழிந்து ஈயமாய் மாறிவிடும் என்பது அவர்கள் மனத்திற்கு எட்டவில்லை. தாம் சேகரித்து வைத்திருந்த தங்கமெல்லாம் தானே அழிந்து இரும்

1. Polonium

பாய் மாறிவிட்டால் என்ன செய்வது என்று அரசாங்கங்கள் கவலை கொண்டன! "இரும்பு தானாகவே பொன்னாயிற்று; ஈயம் தானாகவே வெள்ளியாயிற்று," என்னும் செய்திகளைக் கேட்கவே உலகம் தயாராயிருந்தது.

ஆகவே, இரும்பு பொன்னாவதில் சிறிதும் இச்சை கொள்ளாத இருவரே, இரேடியம் என்னும் அம்மூன்றும் பொருளைத் தனித்தெடுக்க முயல்வாராயினர். இவ்விருவரும், நாலாண்டுவரையில் அல்லும் பகலும் ஓயாமலுழைத்து, முடிவில் தமது முயற்சியில் வெற்றி பெற்றனர் என்பது, பௌதிகத்தில் வேறு சிலர் முயற்சியில் கைதேறினர் என்பதைப் போன்றதாகாது.

ஒரு 'டன்'[1] எடை உள்ள 'பிட்ச் ப்ளெண்டு' சுரங்கப் பொருளில், ஒரு மில்லி கிராம்[2] இரேடியங்கூட இல்லை. இவர்களுக்குத் தற்செயலாய், "உதவாது," என்று ஆஸ்திரியாவின் அறிஞர்கள் தள்ளிய ஒரு டன் சுரங்கப்பொருள் கிடைத்ததும்; அதை வைப்பதற்கும் இடமில்லாமல் இவர்கள் தவித்ததும்; கடைசியில், அதைப் பியரியின் பள்ளிக்கூடத்தின் பின் புறத்திலிருந்த ஒரு சிறு இடிந்த கட்டடத்தில் கொட்டி வைத்ததும்; இவர்கள் அதையே தங்கள் ஆராய்ச்சிச் சாலையாக வைத்துக் கொண்டதும்; குற்றவாளிகளும் உடைத்தறியாத கற்களையும் கட்டங்களையும், களைத்த பியரியும் கருத்தரித்ததால் மிகவும் இளைத்த மேரியாரும் தாமே

1. Ton 2. Milligram

உடைத்ததும்; அல்லும் பகலும் கண் விழித்ததும்; கடைசியில், நான்கு வருஷங்களுக்குப் பிறகு ஒரு நாள் இரேடியத்தைத் தனித்தெடுத்ததும்—அம்மம்ம! ஆச்சரியமே! இரேடியப் பொருளைக்காட்டிலும் கோடி மடங்கு அதிக ஆச்சரியமே!

இருளிலும் ஒளிரும் இரேடியத்தைக் கண்டதும், "பியரி! கடைசியில் வெற்றி பெற்ருேம்! இனிச் சிறிது களைப்பாறலாம்," என்றனர் உடல் நைந்த மேரியம்மையார்.

மேரியம்மையாரைவிடத் துன்புற்ற பியரியோ, "களைப்பாற நமக்கு நேரமேது! **வாழ்நாள் என்ற நெடுங்கனவில், ஒரு கணத்தையேனும் யாவருக்கும் உரிய நினைவாக்க விரும்பும் எவனுக்கும், எவளுக்கும், களைப்பாற நேரம் ஏது!** மேரி, நாம் எழுவோம்! இரேடியத்தின் பண்புகளை முற்றும் கண்டறிவோம்!" என்று கூறிக்கொண்டே களைப்பால் சோர்ந்து மூர்ச்சித்து விழுந்தனர். ஆராய்ச்சி செய்ய எழுந்து நின்று தள்ளாடித் தள்ளாடிச் சிறிது நடந்த மேரியம்மையாரும் தம் நினைவிழந்து, தரைமீது விழுந்தனர்.

'இப்படியும் ஒன்றுபட்ட இருவர் இவ்விருவரே!' என்று அங்கிருந்த இரேடியம், பளீர் பளீர் என்று பிரகாசித்து, இவ்விருவர் முகத்தினையும் காணுந்தோறும் தானே நைந்து அழிவுற்றுக் கொண்டிருந்தது!

* * *

**காலம் : 1903**

"யாம் (இருவருமாகக்) கண்டு பிடித்துத் தனித்தெடுத்த இரேடியம்!" என்ற வெளியீட்

டைக் கண்டு அறிஞரனைவரும் ஆச்சரியமுற்றனர். "பௌதிகத்திலுக்கும் உலகினுக்கும் இவ்விருவர் அளித்த இரேடியம் என்னும் ஒப்பற்ற பரிசுக்கு எப்பரிசுதான் ஈடாகும்!" என்றது நோபெல் பரிசுக்கழகம். 1903-ஆம் வருஷம் டிசம்பர் மாதத்தில், பியரிக்கும் கியூரி அம்மையாருக்குமாகச் சேர்ந்து, நோபெல் பரிசில் பாதிப்பகுதி அளிக்கப்பட்டது. மற்றப் பகுதியோ, பெக்கரலுக்கு அளிக்கப்பட்டது.

இரேடியம் பிறந்த இடிந்த கட்டடமும் மெக்காவாயிற்று! அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளெல்லாம், தம்மிடமிருந்த பரிசுகளையும் பட்டங்களையும் அளிப்பதில், "நான் நீ" என்று போட்டியிடலாயின. மேரி கியூரியாருக்கு அளிக்கப்பட்ட பட்டங்களின் மொத்த எண்ணிக்கை 105. இவைகளைத் தவிர, இவர் பெற்ற பரிசுகளுக்கும், அரசாங்கங்களிடமிருந்து பெற்ற 'கண்ணிய அறிக்கை'[1] களுக்குமோ கணக்கேயில்லை. மேரி கியூரியார் இறக்கும்போது, இவர் வயது அறுபத்தேழுதான்! இவர் பட்டங்களோ, நூற்றைந்து!

பியரி கியூரி பெற்ற பட்டங்களின் எண்ணிக்கையை நாம் கூற விரும்பவில்லை; ஏனெனில், அவரைப்பற்றி எழுதும் சரித்திரத்தில், அவர் பட்டங்களின் எண்ணிக்கையை எந்த ஆசிரியனும் எழுதுவதை அவர் விரும்பியே இருக்கமாட்டார்!

---

1. Legions of Honour and Decorations

பௌதிகத்தில் விருப்புள்ள எவனும், பியரியின் ஆன்மாவைத் துன்புறுத்த விரும்பமாட்டான்!

* * *

1903-ஆம் ஆண்டில் பியரியும் கியூரியம்மையாரும் இங்கிலாந்தின் அழைப்புக்கிணங்கி, அங்குச் சென்றனர். பியரியின் பிரசங்கத்தைக் கேட்க அறிஞர்களும், பிரபுக்களும், சீமாட்டிகளும் குழுமியிருந்தார்கள்.

'சீமாட்டிகளுக்கு அங்கு என்ன வேலை!' என்று மயங்குபவருக்கு நாம் பின் வரும் காரணத்தைத் தெரிவிக்கிறோம்: இரேடியம் என்னும் பொருள் ஆபரணம் செய்வதற்கு உதவுமா என்பதே பெரும்பாலும் அவர்கள் வருகைக்குக் காரணமாயிருக்கலாம். ஏனெனில், அவர்களுள் ஒருவராவது, தமது முத்துக்களையும் வைரங்களையும் அணிய மறக்கவில்லை! இரேடியம் தானாகவே அழியும் பொருள் என்று கேட்டதும், சீமாட்டிகளுக்குப் பிரசங்கத்தில் பற்று அற்றுவிட்டது. பிரசங்கம் முடியுமுன்னமே அவர்களுள் பலர் உறங்க ஆரம்பித்தனர். பிரசங்கமும் முடிந்தது.

விடுதியை அடைந்தவுடன் பியரி, மேரியாரைப் பார்த்து, "என்ன மேரி! நான் பிரசங்கம் செய்து கொண்டிருக்கும் போது, உன் கண்கள் எங்கோ சென்று சில நேரம் நிலைத்தனவே! அப்படிக் காணத் தக்கது அங்கு என்ன இருந்தது?" என்று கேட்டார்.

மேரியாரின் முகம் களங்கத்தைத் தோற்றுவித்தது. "இல்லை! வைரம் முதலான வஸ்துக்களை

நான் இதுவரையில் பார்த்ததில்லை. அவைகள் இவ்வளவு அழகாயிருக்கும் என்பதும் எனக்கு இன்றுதான் தெரிந்தது,'' என்றனர். உடனே பியரி, 'ஓகோ! அழகான வஸ்துக்களைப் பார்த்துத் துக்கிக்கின்றனையா! எனக்கும் அவை துயரையே விளைவித்தன. பிரசங்கம் செய்யும்போது என் கண்களும் விலையேறப்பெற்ற கற்களைப் பார்த்தன. உடனே யான் ஒரு கனவும் கண்டேன். அக்கனவில் அங்கிருந்த பெண் மணிகள் தாங்களாகவே தங்கள் விலையுயர்ந்த ஆபரணங்களை விற்று, மிகப் பெருந்தொகையை என்னிடமளித்தார்கள்! நானும் உடனே அவர்கள் வேண்டுகோளின்படி ஆராய்ச்சிச் சாலைகளைக் கட்டினேன். ஏறக்குறைய ஒரு லக்ஷம் ஆராய்ச்சிச்சாலைகளைக் கட்டி முடித்துவிட்டேன்! அப்பொழுதுதான் கனவிலிருந்து விழித்தேன். நான் கட்டிய ஆராய்ச்சிச்சாலைகளும் அடியோடொழிந்தன. அதனால், நான் துக்கித்தேன்; என்றாலும், உலகத்திலுள்ள பெண்களுக்கும் என்மேரிக்கும் இடையில் பெருத்த வித்தியாசம் உண்டு என்ற எண்ணமே எனக்குச் சிறிது ஆறுதலை அளித்தது-அளித்துக்கொண்டிருக்கிறது,'' என்றார்.

மேரி கியூரியாரின் முகம் நிமிர்ந்தது; "இனி இந்தனமாயினோம்!'' என்று எரிந்தன மூவாசையும்; இவர் கண்களில் புத்தரும் தோன்றினார்; ஜனகரும் தோன்றினார்; ஜட பரதரும் தோன்றினார்!

* * *

1904-ஆம் ஆண்டில், பியரி, ஸொபோனில், பௌதிக பண்டித ஸ்தானத்தை வகிக்குமாறு அறிஞரனைவராலும் கட்டாயப்படுத்தப்பட்டார்; 'சரி' என்று ஒப்புக்கொண்ட பியரி, அங்குப் போய், ஒரு மணி நேரத்திற்குள் அப்பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டு வெளியேறினர். ஏன்?

"ஆராய்ச்சிக் கழகமெங்கே? கருவிகளெங்கே? அறிஞரெங்கே?" என்றனர் பியரி தட்டென்று.

"இஃதென்ன புதுமை!" என்றனன் டவாலி போட்ட சேவகன்.

"நாங்கள் இதுவரை காணுத புதுமை!" என்றன அழகான மேஜைகள்.

"ஆராய்ச்சிக் கழகங்களைத் தேடி அலைபவன். புதுமையிலும் புதுமை!" என்றன அங்கிருந்த நாற்காலிகள்.

"பியரி என்னும் புதுமையே புதுமை!" என்றனர் அனைவரும்.

ஸொபோன் கமிட்டி ஒரு தந்திரம் செய்தது: இரண்டு அறைகளை, முற்றிலும் காலியாயிருந்த அறைகளை, 'ஆராய்ச்சிச் சாலை' என்ற பெயரால் வழங்கியது; "பியரி, இதோ பார் ஆராய்ச்சிச் சாலையை! கருவிகள்தாம் உன்னிடம் இருக்கின்றனவே! ஏதோ கொஞ்சம் இரேடியம் உன்னிடம் இருப்பதாக வதந்தி. இனி உனக்கென்ன குறை இருக்கக் கூடும்!" என்றது.

தம்மையே தமர்க்கு நல்கும் தனிப்பெருவள்ளலான பியரி, "சரி," என்றனர். மேரியாருக்

கும் பியரிக்குமே சொந்தமான கருவிகளும், இரேடியமும் ஸொபோனுக்குச் சொந்தமாயின! பியரியும், கியூரியம்மையாரும், சொற்பச் சம்பளத்திற்கே ஸொபோனுக்குச் சொந்தமாயினர்.

இரண்டாண்டுகள் கழிந்தன. ஆராய்ச்சி உரைகளோ, மிகவும் பெருகின.

* * *

காலம்: 1906-ஆம் ஆண்டு, ஏப்பிரல் மாதம், 19-ஆம் தேதி.

திடீரெனப் பூமி அதிர்ந்து, தடார் என வீடுகள் விழுந்து, சடீரென அலங்கோலம் வந்துறும் என்பதனை முன்னறிய வல்லார் யார்! எரிமலை கிளர்ந்தெழுந்து அழிப்பதையும், பேரிடி தகர்ப்பதையும், கடும்புயல் அழிப்பதனையும், திரை மருண்டு கவிழ்ப்பதனையும், பெருமழை அழிப்பதனையும் அறிந்து தற்காப்புச் செய்துகொண்டவர் யார்! அன்னருளராகில், அவரே, 'பியரி கியூரி, ஸொபோனிலிருந்து திரும்பி நடந்து வரும்போது, ஒரு மோட்டார் வண்டியின் சக்கரத்தால் அறைபட்டு இறப்பார்,' என்பதனையும் கூறியிருக்க முடியும்!

* * *

இரத்த வெள்ளத்தில் தோய்ந்த பியரியைக் கியூரியம்மையார் கண்டார்: கண்டதும், சிலை ஆனார்.

பியரியின் நிலைத்த கண்களைக் கண்ட கண்களும் இமைத்தில.

படுத்த கரங்களைப் பற்றிய கரங்களும் அசைந்தில.

கியூரியம்மையார், ஆர்த்திலர் ; அழுதிலர் ; வாய் திறந்திலர்.

சவத்தைக் கண்ட கியூரியம்மையாரும் சவம் போன்றார்.

* * *

பத்தாண்டுகள் கழியுமுன், கியூரியம்மையாரின் இல்லற வாழ்க்கையும், மின்னலென மறைந்தது. இவர் தனியரானார் ; நிலைத்த நோக்கினருமானார்.

எனினும், கியூரியம்மையாரைத் ' துணையில்லாதவள் ' என்று கருதுபவர் மடயரே.

பியரியின் நினைப்பே கியூரியம்மையாருக்குப் பெருந்துணை. இவர் நெஞ்சில் நிலைத்த அவர் உருவமே நெடுந்துணையுமாம்.

' கணவரை இழந்த துயரினுக்கும், வாணாளில் ஒரு கணத்தையேனும் வீணாக்கும் உரிமை இல்லை,' என்றே பியரி கூறியிருப்பர் என்பதனைக் கியூரி அம்மையார் அறிவார். கணவர் இறந்த பின் அவர் கருத்துக்கிணங்கவே, அவரையும் மறக்கச் சம்மதித்த கற்பின் அணிகலமே கியூரியம்மையார்.

தம் கணவரை ஒரு கணமேனும் மறந்திலராதலால்தான், பௌதிகத்தினையும், இரசாயனத்தையும், அறிவினையும், ஆராய்ச்சியினையும் இவர் ஒரு கணமேனும் மறவாதவருமானார்.

* * *

கியூரியம்மையார், ஸொபோனின் பௌதிக பண்டித ஸ்தானத்தை வகித்தனர்; ஆராய்ச்சியி லேயே நாள் முழுதும் கழித்தனர். இதைக் கண்ட பலர், "இவள் கல் நெஞ்சினள்!" என்றனர்.

புல்லறிவாளரின் புன்மொழிகளையெல்லாம் கியூரியம்மையாரின் செவிகள் கேட்டிருக்க முடியாது. பியரி இறந்த தினமே, அவைகளும் இறந்தன; எனினும், அக்காதுகள் பியரியின் விருப்பத்தின்படி, விஞ்ஞானத்தைப்பற்றி மட்டும் கேட்கும் உணர்ச்சியைப் பெற்றிருந்தன.

1911-ஆம் ஆண்டில் கியூரியம்மையாருக்கு இரசாயனத்திற்கென்று இரண்டாவது முறை நோபெல் பரிசு அளிக்கப்பட்டது. இவர் இரு முறை நோபெல் பரிசு பெற்றதைப்போல வேறெவரும் இந்நாள் வரையில் பெறவில்லை; இவரைப் போல, 'பௌதிகம், இரசாயனம்' ஆகிய இரு துறைகளிலும் நோபெல் பரிசு பெற்றவரும் வேறொருவரும் இலர்.

உலக முழுதும் உள்ள பத்திரிகைகள், கியூரி அம்மையாரைத் தலையங்கங்களில் புகழ்ந்துரைத்தன. ஆனால், அவற்றைக் காணுந்தோறும் கியூரி அம்மையாரின் கண்கள் நிலைப்புற்றன. பியரி இறந்த தினமே, இவர் கண்களும் ஒளியிழந்தன; எனினும், பியரியின் விருப்பப்படி விஞ்ஞான நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும், பிறருடைய ஆராய்ச்சி உரைகளைப் படிப்

பதற்கும் மட்டுமே அவ்வப்போது அவை ஒளி பெற்றன.

**காலம் :** *1914—1918.*

பியரியின் ஆவி, "மேரி, ஆராய்ச்சி செய்து நீ மிகவும் களைத்துவிட்டாய்! பிறர் துன்பத்தை அகற்றி நீயும் இன்புற்றுச் சிறிது களைப்பாறு!" என்றது.

"அப்படியே செய்கிறேன்!" என்றனர் மேரி அம்மையார். முதல் மகா யுத்தமும் 1914-ஆம் ஆண்டில் ஆரம்பித்தது. கரத்திலும், காலிலும், உடலெங்கும் குண்டுகள் தொளைத்ததனுல் துன்புற்ற இலட்சக் கணக்கான வீரர்களின் துயரை மேரி கியூரியம்மையார் பெரிதும் நீக்கினுர்; எக்ஸ்ரே[1] சாதனத்தைச் சீர் செய்து, மோட்டார் வண்டிகளிலேயே அமைத்துத் தந்தார். வீரர்களின் உடலில் குண்டுகளிருந்த இடத்தையும் வைத்திய நிபுணர்கள், மேரி கியூரியார் உதவியால் கண்டார்கள். குண்டுகளும் உடனுக்குடனே வெளியில் எடுக்கப் பட்டன; புண்களும் ஆறின; வீரர்களின் உடல் வேதனையும் மாறிற்று; எண்ணிறந்த வீரர்களின் துயரம் தீர்ந்தது; மேரி கியூரியாரும் இன்புற்ருர்; நான்கு வருஷங்கள் போர் முனையிலேயே நின்று களைப்பாறினுர்!

* * *

ஆராய்ச்சிக்குப் பொருளும், பிறர் அருளும், சாதனங்களும் இல்லாமல் அறிஞர் துன்புறுவது

---

1. X-Ray

இன்றும் நீங்கவில்லை. மிக்க பேரறிஞரான மேரி கியூரியார் மிகவும் துன்புற்றாரென்பது, உலக இயற்கைக்குப் பொருத்தமானதே.

'இரேடியம்' என்னும் பொருளைக் கண்டு பிடித்தாராயினும், ஆராய்ச்சிக்கு வேண்டிய அள வில் அப்பொருளை இவர் பெற்றாரில்லை. 'இரேடிய ஆராய்ச்சிக் கழகம்' என்ற வெறுங்கட்டடத் தைக் கொடுத்ததாலேயே மேரிகியூரியார் ஆனந்தத் தில் மூழ்கிவிடுவார் என்று பாரிஸ் சர்வ கலாசாலை யும், பிரான்ஸூம், அதன் அரசாங்கமும் நம்பி யிருந்தன. 'நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வரும் இரேடியப் பொருள், மிகவும் குறைந்து மறையும் காலமும் இனிச் சில நாளில் வந்துவிடும்," என்று மேரிகியூரியார் மனம் நொந்தனர்; எனினும் வாய் திறந்து, பதறி ஒரு மொழியும் அறிவித்திலர். பிரான்ஸூம் மேரிகியூரியாரை ஒரு சிறிதும் அறிய வில்லை.

1921-ஆம் ஆண்டு வரையில், 'இரேடிய ஆராய்ச்சிக் கழகத்தில் இருந்த இரேடியத்தின் (மிகவும் குறைந்த) நிறையை அறிந்தால், யாவரும் திடுக்கிடுவர். ஆனால், பிரான்ஸு மட்டும், பெரிய யுத்தத்திற்குப் பிறகு, இச்சிறிய உண்மையைக் கண்டு திடுக்கிட முடியாதுதான்!

* * *

காலம்: 1920 இடம்: பாரிஸ்

'மெலோனி'[1] என்னும் அமெரிக்க மாதர், பத்திரிகை நிருபத் தொழிலை[2] மேற்கொண்டவர்;

1. Meloney 2. Journalistic career

அதற்குத் தகுந்தவாறே ‘புதியதை’யும் ‘அரியதை’யும் தேடியலைபவருமாவர்.

‘உலகத்தில் யாவும் பழையனவே!’ என்று அவர் துயருறும் வேளையிலேதான், திடீரென்று மேரி கியூரியாரைப்பற்றி அவருக்கு ஞாபகம் வந்தது.

“இவள் புதியதொன்றைக் கண்டுபிடித்தவள்; அழகில் மிகுந்தவள்; கணவனை இழந்தவள்; ஆதலால் அரியவளே!” என்றெல்லாம் அவர் நினைவில் ஊறின!

அமெரிக்க மாதரார் நடப்பதே இல்லையாதலால், அவர் பறந்தே பாரிஸுக்குச் சென்றார்.

மேரி கியூரியார் பத்திரிகை நிருபர்களுக்குத் தம் கருத்துக்களை அறிவிப்பவர்களில் ஒருவரல்லர் என்று கேள்விப்பட்டதும், ஒரு கணம் தயங்கினார் மெலோனி என்னும் மாதர். என்றாலும், அமெரிக்க நிருபர்களால் அறிய முடியாதது எது! அவர்களால் காண முடியாதவர்தான் எவர் இருக்கக் கூடும்! ஆகவே, ஏதோ ஒரு சாக்குக் கூறிக்கொண்டு, மெலோனி என்னும் மாதர் கியூரி அம்மையாரைச் சந்தித்தார்.

அன்றிரவு, அவர் தூங்கவில்லை; மணிக்கு ஐந்நூறு மைல் வேகத்தில் அமெரிக்காவையே நோக்கிச் செல்லும் பிரத்தியேக ஆகாய விமானத்தில்[1] சென்று கொண்டிருந்தும் ஏன் அம்மாதர் தூங்கவில்லை என்று கேட்கலாம். அவரால் தூங்க முடியவில்லை என்பது தான் விடையாகும்.

---

1, Special Plane

மேரி கியூரியாரை உயிருடன் சந்தித்த எவரும் அன்றிரவு தூங்கியிருக்க முடியாதுதான்.

நள்ளிரவில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த அமெரிக்க மாதர்களை, மெலோனியம்மையார் தட்டியெழுப்பினுர் என்பதே அவர் பெயரை அழியாததாக்கிவிடும். அவ்வம்மையாரோ, தாம் கண்ட ஒரு மாதரையும் அவரிருக்கும் நிலைமையையும் அமெரிக்க மாதர்களுக்கு அறிவித்ததுமன்றி, ஏராளமான தொகை திரட்டி, 100000 டாலர் விலை மதிப்புள்ள ஒரு கிராம்[1] இரேடியத்தை, மேரி கியூரியாருக்கு நன்கொடையாகக் கொடுக்கவும் முன்வந்தனர்.

அமெரிக்கா முழுவதும் ஒரே குரலாய், "கியூரி அம்மையீர், என்னிடம் வருக! நான் நும்மைக் கண் கொண்டு காண வருக!" என்று பரிந்தழைத்தது.

மேரி கியூரியம்மையாரின் செவிட்டுச் செவிகளும் இவ்வேண்டுகோளைக் கேட்டன.

பியரியின் ஆவி, "நீ போய் வா; எனினும், 'அமெரிக்கா' என்பதனை நினைவிற்கொள். மானிடரின் மனம், பேய். ஜாக்கிரதை!" என்றது.

* * *

அமெரிக்கா குதித்தெழுந்தது; ஆரவாரித்தது. "கோவிலிலும் காணுத புதிய தெய்வம்—நடக்கும் தெய்வம்—பேசும் தெய்வம்—பெண் என்ற பெருந் தெய்வம்!" என்னும் உரை எங்கும் கேட்டது.

---

1. One gramme

தட்டென்று சந்தடியடங்கியது! ஏன்? அமெரிக்க ஐக்கிய நாட்டின் தலைவரான ஹார்டிங்கு[1] எழுந்து நின்றார்; கியூரி அம்மையாரைப்பற்றி வெகு நேரம் ஆர்வத்துடன் பேசினர்: "கியூரி அம்மையாரின்பால், அமெரிக்க நாட்டிற்கிருக்கும் நன்மதிப்பை அறிவிக்கும்பொருட்டு, உங்கள் சார்பாக நான் அவரே கண்டு பிடித்த இரேடியத்தை அவருக்கு அளிக்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறேன். அவரும், மிகச்சிறிய இந்நன்கொடையை ஏற்றுக்கொள்ள உடன்பட்டு நம்மைக்கௌரவிப்பாராக!" என்று கூறி முடித்தார். அவர் நீட்டிய ஒரு சிறு தந்தப் பெட்டியில், இரேடியப் பொருள், தகதக என்று மின்னிக்கொண்டிருந்தது.

மேரி கியூரியாரும், அதைக் கைநீட்டி வாங்கும் சமயம்—நீட்டும் முன்னமே—கை எழாதாயிற்று! ஏன் ? ? ?

"மேரி!" என்று கூவியழைத்த குரலை மேரியம்மையார் மட்டும் கேட்டனர்; அக்கூட்டத்திலிருந்த ஒருவரும் பியரியின் ஆவி அத்தருணத்தில் அங்கு வந்து கூறியதைக் கேட்கும் செவியைப் பெறவில்லை.

"மேரி! என்ன செய்ய இருந்தனை! இதுவோ செய்ய நினைத்தனை! நாம் யார் இரேடியம் என்னும் பொருள் நமக்கு நன்கொடையாய் அளிக்கப்பட? அவ்வுரிமை, இரேடிய ஆராய்ச்சிக் கழகத்திற்கே உண்டு; மேரி கியூரிக்குமில்லை; பியரி கியூரிக்

1. President Harding of the United States of America

கும் இல்லை! வேறு எவருக்கும் இல்லை!" என்றது அக்குரல்.

இதைக் கேட்டே கியூரி அம்மையார், தமது நீளும் கரத்தினை நிறுத்தியிருக்க வேண்டும்.

"நன்கொடையைப் பாரிஸின் இரேடிய ஆராய்ச்சிக் கழகத்திற்கென்று மாற்றுங்கள்! கையொப்பமிட்டு[1] மாற்றுங்கள்! அப்போதுதான் நான் பாரிஸின் இரேடிய ஆராய்ச்சிச்சாலைக்கு உரித்தான பொருளை வாங்கி அதனிடம் சேர்ப்பிக்க உடன்படுவேன். இரேடியத்திற்கே மேரி கியூரியும் மற்ற அறிஞர்களும் சொந்தமே தவிர, மேரி கியூரிக்கு அப்பொருள் எக்காலத்திலும் சொந்தச் சொத்தாக முடியாது," என்று கண்டிப்பாய் உரைத்தனர் மேரி அம்மையார். அவ்வாறு, வக்கீல்களின் முன்னிலையில் கையொப்பங்களிடப்பட்ட பின்பே, கியூரி அம்மையார், ஆராய்ச்சிக் கழகத்திற்கே உரியதான அப்பொருளைப் பெற்றுக்கொண்டனர் என்பது அமெரிக்கரனைவரையும் உலக முழுவதையும் திடுக்கிடச் செய்தது.

பியரியின் ஆவி மட்டும். "மேரி தப்பினுள்! ஆசை என்னும் பேய் அவளை ஒன்றும் செய்ய முடியவில்லை!" என்று களித்தது.

* * *

இரேடிய ஆராய்ச்சித் தலைமைப் பதவியிலிருந்துகொண்டு கியூரி அம்மையார் கண்டுபிடித்த பேருண்மைகள் எண்ணிறந்தன. அவை காரண

1. Change with your signature

மாகவே, 'கான்ஸர்'[1] என்னும் கொடிய சதைப் பற்று ரோகத்திற்கு இரேடியப் பொருளின் கிரணங்கள் கொடிய யமனுய் விளங்கிக்கொண் டிருக்கின்றன.

வெகுதூரத்துக்கப்பாலிருந்தும் ஒளிரும் சுடராதலால், இருளையகற்றும் கதிரவனைப்போல, மேரி கியூரியார், யாவரும் அறியாத—முனிவரே அறிந்த—ஒரு தனியுலகத்திலிருந்த போதிலும், இவரது அன்பாலும், அறிவாலும், இவர் மக்களும், உலகமும், பௌதிகமும் இவரிடம் பயிற்சிக்கு வந்த ஆராய்ச்சி மாணவரும், அளவற்ற நன்மையும் சிறப்பும் அடைந்தனர். மேரி கியூரியாரின் முதுமைப் பருவமும் முதிர்ந்தது; உடலும் நைந்தது; கண்களும் ஒளி மங்கின; யாவரும் மறக்க முடியாத 1934-ஆம் ஆண்டும் வந்தது. தன் கொடுந்தொழிலையும் அது முடித்துச் சென்றது!

* * *

சவப்பெட்டி அடக்கம் செய்யப்பட்டது; மேரி கியூரியாரும் அடங்கினர். பூமியும் தன் அருமைப் புதல்வியாரை ஏற்றது. மேரி கியூரியாரின் இஷ்டப் படியே, இவர் சவம், பியரி கியூரி அடக்கம் செய்யப் பட்ட இடத்திற்கு அருகிலேயே அடக்கம் செய்யப் பட்டது. மக்களும், நண்பரும், பௌதிகமும், இரசாயனமும், "இனி என்று காண்போம்!" என்று கதறிக்கொண்டே, அங்கிருந்து நீங்கினர். சிறிது நேரத்திற்கெல்லாம்,

1. Cancer

“பியரி! பியரி!” என்று கூவி அழைத்தது ஒரு குரல்.

“மேரி! மேரி!” என்று பதிலளித்தது மற்றொரு குரல். பிறகு, அக்குரலே, “மேரி, முப்பதாண்டுகள் வரை, பியரியை மறந்திருக்கும்படி கட்டளையிட்ட என்னை நீ மன்னிப்பாய். என்னால் நீ துன்புற்றாய்; நானும் இன்புறவில்லை, எனினும், விஞ்ஞானம், பேதை மானிடரின் துன்பமென்னும் மயக்கத்தினும் மிகப்பெரிது என்பதை நாம் இப்பொழுதுகூட மறக்க முடியாது,” என்றது.

“நானதை எவ்வாறு மறந்திருக்க முடியும்!” என்றது மற்றக் குரல்.

பிரிந்த ஆவி இரண்டும் ஒன்று கூடின.



காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.சு. சண்முகம் நூலகம்.

The Premier Art Press, Purasawakam.